உ

கடவுள் துணை.

# பஞ்சதந்திரக்கதை.

இஃது

சென்னைக் கல்விச்சங்கத்துத்
தமிழ்த் தலைமைப்புலமை நடாத்திய
ம-ா-ா-ஸ்ரீ,
தாண்டவமுதலியாரால்
மொழிபெயர்த்து

இஃது-மைலம்
சுப்பிரமணியசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு.

சென்னை-இட்டா
பார்த்தசாரதி நாயுடு
அவர்களது
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1910

சென்னை, ஆச்சாரப்பன் தெரு, நெ-84.

கடவுள் துணை.

# பஞ்சதந்திரக்கதை.

## வரலாறு.

---

கல்விப் பொருளிலுஞ் செல்வப் பொருளிலுங் குறையில்லாதவர்களுக்கு குறையிடமா யிருக்கிற பாடலிபுர மென்னு மொரு பட்டினமுண்டு அப்பட்டினத்திற் சகல குணங்களோடுங் கூடி யிருக்கிற சுதரிசன மென்னும் ராஜன் ஒருவனிருந்தான் அந்தராஜா தன் பிள்ளைகள் படியாமல் மூடர்களா யிருக்கிறதைக்கண்டு வெகு விசனத்தோடு ஆலோசிக்கத்தொடங்கினான் அதெப்படியென்றால் கல்வியுந் தர்மகுணமு மில்லாத பிள்ளைகளிருந்தாவ தென்ன பால்கொடாத வெருமைகளைக் காப்பாற்றி பலனுண்டாவதென்ன வேதசாஸ்திரமறிந்தவனாக ஒரேபிள்ளை யிருந்தா லவனாலே குடும்பமெல்லாஞ் சுகமடையும் இப்படிக்கில்லாத பிள்ளைகள் கற்பத்திலேயே யழிந்தானும் அழியா விட்டாற் பிறந்தவுடனே இறந்தாலும் இரவாவிட்டாற் பெண்ணாகவானாலும் இல்லாவிட்டாற் பெண்சாதிமலடியாகவானாலும் போகிறது நல்லகுலத்தில் யோக்கியமான பிள்ளை இருக்கலாகாது சன்மாந்திரபுண்ணியத்தினாலே இம்மை மறுமைக்கு சுகங்கொடுக்கிற புத்திரனுண்டாகிறான் மேலுமிந்தப் பிள்ளையைப் பெற்றவர்கள் என்னதவஞ் செய்தார்களோவென்று கண்டோர் சொல்லும்படி நடக்கிறவனல்லவோ பிள்ளையென்று தனக்குள்ளே ஆலோசித்துப் பெருமூச்சுவிட்டுப் பின்பு சபையைப்பார்த்து பருவமும் செல்வமும் ராச்சியமும் அறிவில்லாமையு மாகிய இந்த நான்கினு ளொன்றொன்றுதானே கேட்டுக்கெல்லா மிகுந்ததுணையாயிருக்கும் இந்நான்குமொருவனிடத்திலிருந்தாலவனென்னபாடுபட்டான் ஆகையால் பிள்ளை எண்ணிக்கைக்குப்பிறந்து துர்மார்க்கர்களா யிருக்கிற வென் பிள்ளைகளை நீதிசாஸ்திரோபதேசத்தில யெந்த மகாபுருஷன் மறுஜனனம்வரப்பண்ணுவானென அப்போது சகல நீதிசாஸ்திரங்களிலும் வல்லவனாகிய சோமசன்மா வென்பவனெழுந்து இவர்களுக்குச்சமான வரிசையுடையவர்களிவ்வுலகத்திலில்லையென்று சொல்லும்படி

இதோ நான் ஆறுமாதத்திற்செய்யமாட்டுவேன் அதுவரைக்கும் நீர் நாளையெண்ணிக்கொண் டிருமென்று சபதம்பண்ணினான் அதைக்கேட்டு நடுக்கடலிற் றிசைதப்பி மயங்கியமாலுமிக்கோர் துறைதோற்றினாற்போல ராஜாமிகவு மனமகிழ்ந்து அவனுக்கு உபசாரஞ் செய்து தன்னுடைய பிள்ளைகளை அவன்வசத்திலொப்பிவைத்தான் சோமசன்மா உடனே அப்பிள்ளைகளைத் தன்வீட்டுக் கழைத்துக்கொண்டுபோய்க்கருப்பஞ்சாற்றைக்காய்ச்சி சர்க்கரைக்கட்டியாகத் திரட்டினாற்போல நீதிசாஸ்திரங்களைப் பஞ்சதந்திரக்கதையாகக் கற்பித்து ராஜகுமாரர்களுக்குச் சொல்லத்தொடங்கினான் அதெப்படியென்றால் சோமசன்மா ஓராசகுமாரர்களே உங்களுக்கு வேடிக்கையாகச் சிலகதைகளைச்சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்ல அதென்னகதையென்றார்கள் - பஞ்சதந்திரக்கதை யென்று சொன்னான் - அப்போது அவர்கள் பஞ்சதந்திரமென்பதென்ன தெரியச்சொல்லவேண்டுமென்றார்கள் அவை மித்திரபேதம் சுகிர்தலாபம் சந்திவிக்ரகம் அர்த்தநாசம் அல்லது லப்தஆனி அசம்பிரேக்ஷிய காரித்துவம் என ஐந்துதந்திரங்களுண்டு அவைகளுள் மித்ரபேதமாவது சிநேகத்தைக் கெடுத்துப் பகையுண்டாக்கல் சுகிர்தலாபம் தங்களுக்குச் சமானமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்ந்திருக்குதல் சந்திவிக்கிரகமாவது பகைவரையடுத்துறவுசெய்துவெல்லுதல் அர்த்தநாசமாவது தன்கையிற் கிடைத்த பொருளை யழித்தல் அசம்பிரேக்ஷிய காரியத்துவமாவது யாதொரு காரியத்தையுந் தீரவிசாரியாமற் செய்தல் என்று சொன்னான் ராசகுமாரர்கள் ஐயா அந்தக்கதைகளை எங்களுக்கு விளங்கச் சொல்ல வேண்டுமென்றார்கள் சோமசன்மா உங்களுக்கு மங்களமுண்டாகவென யாசிர்வதித்துச் சொல்லத்தொடங்கினான்.

வரலாறுமுற்றிற்று.

உ

## முதலாவது

# மித்திரபேத தந்திரம்.

ஒரு காட்டி லொரு சிங்கமு மெருதுங்கூடி மிகவு மொருமையாக வாழ்ந்திருந்தன அந்தசினேகத்தை கோட்சொல்லும் லோபகுணமுள்ள ஒருநரிவந்து கெடுத்ததென்றுசொல்ல ராசகுமாரர்கள் அதெப்படியென சோமசன்மா சொல்லத்தொடங்கினான்.

தென்னாட்டிலே மகிழா ரூப்பமென்னும் பட்டணத்தில் வர்த்தமானனென்றொரு வர்த்தக னிருந்தான் அவனுக்கு வெகு பணமிருந்தும் இன்னுஞ் சம்பாதிக்கவேண்டு மென்கிற வாசையினா லாலோசிக்கலானான் எப்படியென்றால் யாதொன்று சம்பாதிப்ப தருமையோ வதைச்சம்பாதிக்கவேண்டும் சம்பாதித்ததைக் காப்பாற்ற வேண்டும் காப்பாற்றினதை விர்த்திபண்ணவேணும் விர்த்திபண்ணினதை தானுமனுபவித்து உத்தமபாத்திரத்திற் செலவழிக்க வேண்டும் ஏனென்றால் காப்பாற்றாத திரவியம் நாசமாகும் விர்த்திபண்ணாதது குறையும் தானு மனுபவித்துச் சற்பாத்திரத்திற் செலவழியாதது வீணாதமென்றும் சாஸ்திர மிருக்கிறதினாலும் மேலும் இன்பமும் புண்ணியமும் கீர்த்தியும் மனிதர்க்குள்ளே பெருமையும் உரவும் நினைத்தது முடித்தலும் யாருக்குண்டு திரளாகப் பணங்குவித்தவர்களுக்கே யுண்டு அல்லாதவர்களுலகத்திலே நடைப்பிண மாவார்களாகையினாலு மேன்மேலுஞ் சம்பாதிப்பதே யோக்கியமென் றாலோசித்துக்கொண்டு தன்னிடத்தி லிருக்கிற சரக்குகளை வண்டியிலேற்றி அதிற் சஞ்சீவகன் நந்தகனென்னும் பெயரையுடைய விரண்டெருதுகளைப்பூட்டி நடத்திக்கொண்டு தேசாந்திரம் போனான் போகும்போ தொருநாள் நெருங்கிய காட்டிலே மிகுந்த பாரத்தினாற் சஞ்சீவகனென்னும் மெருது காலிடறிவிழுந்து நொண்டியாச்சுது அப்போது வர்த்தமானன் அந்த எருதுக்குப் பதிலாக வேறொரெருதை வண்டியிற்கட்டி யோட்டிக்கொண்டு அவ்வெருதுக்கோராளை காவல் வைத்துப்போனான் பிறகந்தச்சேவகன் வர்த்தகனிடத்துக்கிரண்டொருநாள் கழித்துப்போ யந்த எருது செத்துப்போச்சுதென்று புளுகினான் இங்கே எருதோவென்றால் ஆயுசுபலத்தினாற் பிழைத்துப்புல்லு முதலாகிய மேச்சலால் மிகவும் பெருத்துக் கொழுத்து ஒடிந்தகாலுங்கூடி அந்தகாட்டில் யதேச்சையாகத் திரிந்துக்கொண்டிருந்தது அப்படியிருக்கையில் ராச்சிய பட்டாபிஷேக சடங்குகளில்லாமல் காட்டில் சஞ்சரிக்கிற பிராணிகளுக்கெல்லாந் தன்வல்லமையினா லிராசத்

துவத்தை யடைந் திருக்கிற சிங்கமானது தன்பராக்கிரமத்தாற் சம்பாதிக்கப்பட்ட ராச்சியத்தைச் சுகமாக யனுபவித்துக் கொண்டிருக்கையில் ஒருநாள் தாக மெடுத்துத் தண்ணீர் குடிக்க யமுனை யாற்றங் கரைக்குப் போம்போது அங்கே சடுதியிலென்றைக்குங் கேட்டறியாத பேரிடி முழக்கம்போலும் அந்த ரிஷபமுக்காரம்போட்ட தொனியைக்கேட்டு திடுக்கிட்டிதேது புதிதாயிருக்கிறதென்று பயந்து நடுங்கித் தண்ணீர் குடியாமற் சும்மா வசைவற நின்று விட்டது அப்போது அவ்விடத்தி லிருந்த சிங்கத்தினுடைய பிரதான மந்திரிகுமாரராகிய கரடகன் தமனகனென்கிற மந்திரிகளிரண்டுபேரு மிந்தவதிசயத்தை யறிந்தொன்றுக்கொன்று பேசத்தொடங்கின எப்படியென்றால் தமனகன் கரடகனைப்பார்த்து நம்முடைய ராசா தண்ணீர்க்குப் போய் குடியாமலேன் சும்மா நிற்கிறதென கரடகன் அதை விசாரிக்கிறதினால் நமக்காவதென்ன இறைபகப்படுமோ பெருமையுண்டாகுமோ கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன் சும்மா விருப்பேனென்றால் தனக்குத்தகாத காரியத்தைச்செய்கிறவன் கடாவிய வரப்பை பிடுங்கின குரங்கு பட்டபாடுபடுவானென்றுசொல்ல அதென்ன வென்று கரடகன் கேட்க தமனகன் சொல்லுகிறது.

மகததேசத்தி லிருக்கிற சுத்த னென்போ னொருவன் கோயிற் றிருப்பணியாகக் கொண்டுவந் தருக்க விட்ட மரங்களில் வாட்காரன் பிளக்கும்படி முளை நனடித்து விட்டுப்போன வொருமரத்தின்மேலந்தக் கோயில் நந்தவனத்தி லிருக்கிற குரங்குகளிலொன்று வந்துட்கார்ந்தது அப்போது அம்மரப் பிளப்பிற் றன்பீச மிறங்கி யிருப்பதை யறியாமலடித்த முளையை யசைத்து பிடுங்கின வுடனே பிளப்பு நெருங்கி பீசைநசுங்கி யிருந்தது ஆதலால் தனக்குத் தகாத காரியத்தைச் செய்தால் யார்க்கும் பிராணச்சேதம் வருமென்று சொல்லி நேற்று நாம் தின்று மிகுந்திருக்கிற விரையைத் தின்று சுகமா யிருப்போம் வா வென்று கரடக னழைத்த பின்பு தமனகன் கரடகனைப் பார்த்து சுவாமி காரியஞ் செய்யாம லிரைதேடுகிறதையே பெரிதாக நினைக்கலாமா ஒருவன் தன் மித்திரர்களுக்குபகாரமுஞ் சத்துருக்களுக் கபகாரமும் பண்ண வேண்டும் அதற்கு ராசசேர்வையே தக்கது மேலும் ராசாவை யடுத்திருக்கையில் வெகு சனங்களுக்கு நன்மை செய்வதே ராசா சேர்வைக்குப் பிரயோசனமாம் இல்லாவிட்டாற் காக்கையுங் காகம் புலியையு மெச்சிலையையு மலத்தையுந் தின்றுபிரம் வருஷம் பிழைத் திருக்கிறது நாயும் பசையில்லாத வெள்ளெலும்பைக் கௌவிக்கடித்துப் பல்ல

சைந்தும் பசிதீராமற் சந்தோஷத்தை யடைகிறது மேலு மெசமான
ன் கையிலிருக்கிற வொருகவள வெச்சிலைப் பார்த்துக் கால்விழுந்து
வயிற்றை யெக்கிக்கொண்டு எளியமுகத்தைக்காட்டி முகத்தைப்பா
ர்த்து வாலைக்குழைத்துக் கெஞ்சிக் காத்துங் கிடந்து கொஞ்சமெச்
சிலை வாங்கித்தின்னும் யானையோ பாகனைப் பாராமலு மடுக்காமலும
வன். வேண்டி வலியக்கொடுக்க கர்வத்தோடு வாங்கி நாலைக் காட்டி
னு மாயிரம்பங்கிகஞ் சாப்பிடும் சிங்கம் பசியினாற் சங்கடப் படும்
போது நரி சமீபத்திலிருந்தாலு மதை சட்டைப்பண்ணி யானையை
யே கொல்லும் ஆதலா லுலகத்தில்யார் புகழோடு சீவிக்கிறார்களோ
அவர்களே பாக்கிய வான்கள் சிறுகுழிகள் கொஞ்சந் தண்ணீரால்
நிறையும் எலியின் சோங்கை சிலதானியத்தால் நிறையும் அப்படி
போல மூடன் இதாகிதந் தெரியாமற் கொஞ்சத்தில் சீவனம்பண்
ணுவான் ஆனா லவனுக்கும் பசுவுக்கும் யென்ன பேதம் ஆகையால்
ராசகாரியம் பார்த்து பெருமையுடனே சீவிக்கிறதே நல்லதென் றிப்
படி சொல்லக்கேட்டு கரடகன் தமனகனைப் பார்த்துச் சொல்லுகிற
து நல்லது யிந்த யோசனைகளுக்கு மிந்தப் பேச்சுகளுக்கு மிப்போ
து நாம் ராசகாரியத்தி லிருக்கவில்லை உறைதேடுகிற காரியத்திலிருக்
கிறோம் ஆதலால் நீ என் வீணானமனோராச்சியம் பண்ணுகிறாய் மூ
டவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டாற் கிட்டுமோவென் றிகழ்ந்து
சொல்ல தமனகன்சொல்லுகிறது நல்லதிருக்கட்டும்பிரதானியுங் கா
லத்தினா லப்பிரதானியாகிறான் தன் முயற்சியாலுங் குணத்தினாலும்
வலுவானவனுஞ் சமர்த்தனாகிறான் அல்லாமலும் யாவருமேலான கா
ரியத்தையே ஆலோசிக்கவேண்டும் அதுகைகூடாவிட்டாலும் பெரு
மைவரும் புத்திசாலிக ளருமையான காரியங்களைச் செய்வார்கள் ம
லையுச்சியிலொரு பெருங்கல்லை யேற்றுதலரிது அங்கிருந்ததைத் த
ள்ளுத லெளிது ஏரியினைக் கட்டுதலரிது உடைத்தலெளிது ஆகை
யால் பெருமையுஞ் சிறுமையு மவராலேயே வரும் முயற்சியுடையா
ரிகழ்ச்சியடையாரென்னும்பழமொழியினாலுங் கேட்டிலையாவென் றி
ப்படிச்சொல்ல தமனகனை கரடகன்பார்த்து நல்லதுநீபோய்ச் சிங்க
த்தினிடத்திலெதைக்குறித்துப் பேசுவையெனதமனகன் நம்முடை
ய சுவாமி மூடத்தனத்தாற் பயந்திருக்கிறான் அதைநீ எப்படியறிந்
தாயென்று கேட்கிறையோ சொன்ன பொருளைப் பட்சிமிருகங்களு
மறிந்துகொள்ளும் சொல்லா லறிகிறவனே பண்டிதனப்படி அறியா
விட்டாற் புத்தியாற் பிரயோசனமென்ன ஆகையால் நானிங்கிருந்த
படியே யறிந்தேன் இப்போது நானிதை முன்னிட்டு கொண்டுபோ

ய்ச் சிங்கததை சினேகம் பண்ணிக்கொள்ளுகிறேனென தமனகனைப் பார்த்து கரடகன் சொல்லுகிறது நம்முடைய ராசாக்கள் மோந்து கொள்வதுபோற் கடிக்கிறவர்கள் அரசரும் நெருப்பும் பாம்புஞ்சரி ஆதலால் வழக்கமில்லாம லவனை எப்படி சினேகம் பண்ணிக்கொள் வாயென அப்போது பெரிது பரக்கிற பரவைகளுக்கெது தூரம் வி த்துவானுக் கெதுபரதேசம் பிரியமாய்ப் பேசுகிறவர்களுக் கெவன்ச த்துருவென கரடக னப்படியானாலும் ராசாக்களிடத்தில் அக்காலத் திற்போனால் அவமானம் நேரிடுமென்றது அதற்குத்தமனகன் சமீப த்திலேயே யிருக்கவேண்டும் ஏனென்றால் யார் சமீபத்திலிருக்கிறா னோ அவனுடனே ராசாக்கள் காரியங்களைச்சொல்லுகிறார்கள் கொ டிகள் கிட்டவிருக்கிற மரத்திலேயே படரும் அரசர்களும் ஸ்ரீகளும் தங்களைக்காத் திங்கிதம் பேசுகிறவர்களிடத்தில் மனதிரங்குவார்க ளென கரடகன் நல்லது நீயவனிடத்தி லெப்படி பேசுவாயென்றது தமனகன் நல்லமழை பெய்திருக்கையி லெப்படிவிரையினின்று மு ளைகள் புறப்படுமோ அப்படிபோல ராசாவின் கேள்விக்கேட்க வெ ன்வாக்கினின்று முத்தரவு புறப்படும் ஆயினு மொருவேளை பிரகஸ் பதியும் பேச்சிற் றவறுவானானால் மற்றவர்களுக்குக் கேட்பானேன் ஆயினுங் காலமறிந்து பேசினால் யாதோரவமானமும்வாராது ராசா தன்காரியம் யாராலே யாகிறதோ அவனிடத்தி லொருவேளை சிறிது குற்ற நேரிட்டாலு மதைப்பாராட்டாம லவனைப் பரிபாலித்த விர்த் தியடையப் பண்ணவேணுமெனக் கரடகன் அரசர்கள் மலைபோல னுசரிக்கிறதற்குக் கடினமாயிருக்கிறார்களென தமனகன் ஆயினுமவ ர்கள் சுபாவமறிந்து பேசித் தனக்கிஷ்டம் பண்ணிக்கொள்ளவேண் டுமென்று கரடகனிடத்திற்குப்போய்த் தூரத்திலேநின்று தண்ட ம்பண்ணி ராசாவினுத்திரவினு லுட்கார்ந்தவுடனே சிங்கம் நெடுநா ளா யுன்னைக்காணோமென தமனகன் இப்போது தேவரீரிடத்திற் குவரத்தக்க காரியம் நேரிட்டதனாற் தங்களுடைய திருவடியண்டை வரலானேன் இல்லாவிட்டால் வந்ததற்குப் பிரயோசனமென்ன ரா சாக்களுக்கொருவராலும் பலனில்லாவிட்டாலு மொருவேளை சிறுது ரும்புப் பல்லுக்குதவுமுதவும் மற்றவைகளுக்குக் கேட்பானேன் மே லும் ஒருவேளை அரசர்கள் குணவானை அசட்டைபண்ணித் தள்ளி விட்டாலுமவன் சற்குணம் போய்விடுமோ நெருப்புத் தலைகீழாகுமா ஆதலாலரசர்கள் பரிசோதித்தறிந்து யோக்கியனை நல்லகாரியத்தி லவைத்தாலவன் ராசாவுக்கு கீர்த்தியைப் பெருகப் பண்ணுவா னு கையா லென்னைத் தாங்கள் சிறுநரியென்று அவமானம் பண்ணலா காத விஷ்ணுகொடுத்திருக்கிற வராக வடிவை யுலகத்தில் பூசிக்கவி ல்லையா யுன்ரூபத்தைப்பாராமற்குணத்தைப்பார்க்கவேண்டும் ஏனெ

ன்றால் மலைபோலிருக்கிறதோர் சிறுசுள்ளாணியானிலைபெறும், நானோ
சுவாமிகாரியத்திற் பற்றுள்ளவன், கருவியுங்காலமுமறிந்து கரும மு
டிக்கமாற்றலுள்ளவன், இந்தவல்லமையெல்லா முமது சார்பிருந்தா
ற்பிரகாசிக்கும், வாள்முதலிய ஆயுதங்களும், வீணைமுதலிய வாத்தி
யங்களும் பூமியும் ஸ்திரீகளும் யோக்கியர்களும், சாஸ்திரங்களுமாகி
ய இவையெல்லாம் பரிபாலனம் பண்ணுகிறவர்களாற் பிரகாசிக்கும்
அண்டையிற் சமர்த்தரில்லாதராஜாவுக்கபகீர்த்திவரும், எனறிப்படி
ச்சொல்லக்கேட்டு சிங்கம் தமனகா, நீ யெனபிரதானி புத்திரனல்ல
வாஎன தமனகன் சுவாமியென்றுவணங்கிச் சும்மாவிருந்தது சிங்கம்
ஏதாவது சொல்லவேண்டுவதிருந்தாற்சொல் என தமனகன், தேவரீ
ர்தண்ணீர்க்குவந்து குடியாமல் மெய்மறந்து சும்மாநிற்கிறீர்களே, எ
ன சிங்கம் மெய்தான் நானிந்தக்காட்டில் வெகுநாட் சுகமாயிருந்தே
ன் இப்போதிதை விட்டுவிடத்தக்கதாகச் சம்பவித்திருக்கிறது, என்
றைக்குங் கேளாத மேகமுழக்கம்போ லொருதொனி இன்றைக்குக்
கேட்டேன், அதனாலேதானந்த முழக்கம்போலவே யிருக்குமல்லவா
அந்தப்பிராணியும் ஆதலாலிதைக்குறித்தென்னசொல்கிறாயோ வது
வேயெனக்குப்பிரமாணம், இப்போது நீவழுக்கி விழுக்கி விழுகைபி
லூன்றுகோல்போற் கிடைத்தாயென தமனகன், சுவாமிதொனியினால்
பயப்படலாகாது முன்னொருவன் ஒருதொனியைக்கேட்டுபயந்துபிற
கு நெருங்கபார்த்தவுடனேயங்கே தோலுங்கோலு மிருக்கக்கண்டா
னென சிங்கம் அதென்னவென்றுகேட்க, தமனகன் ஒருநரி பசியால்
வருந்தியிரைக்காகதிரிந்தொரு போர்க்களத்தில் வரும்போ தங்கே
அசதியிலுண்டான ஒருபெரியதொனியைக்கேட்டு மிகவும்பயந்துநா
ன்செத்தேனென்றுதிடுக்கிட்டது பிறகுசற்றே முன்னே போனவுட
னங்கொரு பெரிய பேரிகைப் பார்த்து, அடுத்திருக்கிற மரத்தினகி
ளை காற்றிலசைந் ததிலடிக்கத் தொனியுண்டாயிற்றென் றறிந்துக்
கொண்டு அதனருகேபோய்ப் பார்த்து, அங்கே பேரிகையின்றோலு
மே யல்லாமல் வேறொன்றுமில்லையெனத் தெளிந்து சந்தோஷமடை
ந்தது ஆதலாற் சத்தத்தினாலேமாத்திரம் பயப்படலாகாது தாங்கள்
கட்டளைகொடுத்தாலிந்தக்ஷணத்திலதின்மூலத்தையறிந்து வருவேன்
எனசிங்கம் அப்படியே செலவுகொடுத்தது பிறகு தமனகன்சஞ்சீவ
கனென்னும் மெருதினிடத்திற் போய்ப்பேசி அதை இணக்கம்பண்ணி
க்கொண்டு சிங்கத்தண்டைவந்து தண்டம்பண்ணி முன்னேநின்றது
சிங்கம் நீயந்தப் பிராணியை யென்னதென்றறிந்து வந்தாயா என த
மனகன் தாங்கள்கட்டளைப்படியே போய்ப்பார்த்[illegible]ழன் தாங்க

ளெப்படிநினைத்தீர்களோ அப்படியே புஷ்டியாகவிருக்கின்றான் அ
வன்றங்கணட்டம்ப விரும்புகிறான் கட்டளையானாற் றிரும்பிப்போய்த்
தரிசனந்தரக் கேட்டுக்கொண்டு வருவேனென சிங்கம் நல்லதப்படி
யேயாகட்டுமென மறுபடி தமனகன் எருதண்டைபோயுபசாரத்தோ
டழைத்துவந்து ராஜாவை தரிசனம்பண்ணுவித்தது, பிறகு பிங்கள
னுக்குஞ் சஞ்சீவகனுக்கும் வெகுசினேகமுண்டாய் ராஜாவுக்கு மற்
றயாரு மவசியமில்லாம லிப்படி வெகுகாலங் கழிந்தது அப்போது
பிரதானி புத்திரர்களாகிய கரடக தமனகரென்னு மிரண்டுநரிகளுக்
கு மிரையொன்று மகப்படாமையால் ஆலோசிக்கத்தொடங்கின தம
னகன் நாம்காட்டிலே தனித்திருந்த சிங்கத்தினுடனே எருதைசினே
கம் பண்ணிவித்தது யானையானது தன் மத்தகத்தைக் கொத்துகிற
தற் கங்குசத்தைத்தானே யெடுத்துப் பாகன்கையிற் கொடுக்கிறது
போலாயிற்று மேலும் முன்னாளாட்டுக்கடாச் சண்டையில் நரிசெத்
ததும் ஆஷாடபூதியின்கூட்டுறவாற் சந்நியாசிபொருளிழந்ததும் இ
டைச்சியின் சேர்க்கையாலம்பட்டத்தி மூக்கிழந்தது மெப்படி யவர்
கள் குற்றத்தினாலே சம்பவித்ததோ அப்படியே நம்முடைய தோ
ஷத்தினாலே நமக்கிரைகிட்டாமற்போயிற்று என கரடகன் அதுவெ
ப்படிச்சொல்லென தமனகன் சொல்லுகிறது ஒருதேசத்திற் றேவச
ன்மாவென்கிறவொரு சந்நியாசி தான்பிச்சை எடுத்துச் சம்பாதித்த
திரவியத்தைக்கந்தைக்குள்ளேவைத்துயார்க்குந்தெரியா மற்றைத்துப்
போர்த்துக்கொண்டு பின்னும் பிச்சையெடுத்துச் சாப்பிட்டுக்கொண்
டுதிரிய அச்சூதையறிந்தஆஷாடபூதியென்னு மொரு திருட்டு பிராம
ணன் இந்தக்கந்தையைமாத்திர மெப்படியாகிலும் திருடிக்கொண்
டால் நாமெப்போதும் திருட்டுவேலை செய்யவேண்டுவதில்லை, நம்மு
டைய தாசிக்கு வெகுநாளைக்கு நடக்குமென்றாலோசித்து ஒரு பிர
மசாரியைப்போல வந்தச் சந்நியாசியி னிடத்திற்போ யவன்காலில்
வீழ்ந்து அடியேனுக்கு ஞானோபதேசஞ்செய்திந்த விராகரமாகிய ச
முசாரசாகரத்தினின்று மலையாமற் சிறிது கடைக்கண்ணாற் பார்த்
தென்னைக் கடைத்தேறப்பண்ணும் ஓமகானுபாவா, ஓசுகதுக்கஞ்சகி
யாத பரமபுருஷா, என்றிப்படி யழுதகண்ணுஞ் சிந்தியமூக்குமாகக்
கலங்கிநிற்க, அவனது பாசங்கென்றறியாத அந்தச் சந்நியாசி இவன்
றலைமேற் கையைவைத்துப் பயப்படாதே என்றான், அது முதலாக
வாஷாடபூதி வெகு பயபத்தியுடனே அவன் காலாலிட்ட வேலை
யைக் கையாற்செய்துக் கொண்டு கந்தைக்குச் சமயம் பார்த்துக்
கொண்டு இருக்கும் காலில் ஒருநாள் ஒரு பிராமணன் வீட்டில் இ
ருவரும விலாப்புறம் வீங்கப் பிட்சைப் பண்ணிக்கொண்டு வெகு

தூரம்வந்தபிறகு ஆஷாடபூதி யொருவரு மறியாமலொரு துரும்பை
யெடுத்துத் தன்றலைமேலே வைத்துக்கொண்டந்தத் துரும்பைக் கு
ருவுக் கெடுத்துக்காட்டி ஐயோ நமக்குப்பிட்சைகொடுத்த பிராமண
ன்வீட்டுத்துரும்பென்றலையி லொட்டிவந்துவிட்டதே அன்னமிட்ட
வீட்டிற்கன்னமிடலாமா உப்பிட்டவரை யுள்ளளவுநினையென்று பழ
மொழியு மிருக்கிறதன்றோ என் வாய்ப்பதறநடுநடுங்கி இதையந்தவன்ன
தாதாவீட்டிற் போட்டுவிட்டிதோ நொடியளவில்வருவேன் என்று கு
ருக்கள்பார்க்கும்படி பரபரப்பாகச்சிறிதுதூரங் காலடிபிட்டத்திற் ப
டும்படி யோடி யொருசெடிமறைவி லுட்கார்ந்திருந்துவிட்டு பின் வி
ரைக்க விரைக்க வோடி யந்தாசாரியன்காலில் விழுந்தெழுந்து சுவா
மி உம்முடைய அநுக்கிரகத்தினு லிந்தப் பாவத்திற்குத் தப்பினேன்
என்றான் இதைப்பார்த்து அந்த வேழைச்சன்னியாசி ஆச்சரியப்பட்
டு இவன் பரசொத்துக் காசைப்படாத பரமாத்துமா வென்று நம்பி
த் தன்னுயிர்க்குச் சமானமாக நினைத்திருந்த கந்தையைச் சீஷன்கை
யிற் கொடுத்து ஒருகுளக்கரையி லிருக்கச்சொல்லித் தான் சலபா
தைக்குப்போய்க் காலலம்பப் போனவிடத்தில் இரண்டாட்டுக்கடா
க்களொன்றோடொன்று முட்டிச் சண்டைசெய்ய அவைகளின் ம
ண்டையிலிருந் தொழுகுகிற வுதிரத்தை புண்ணலாமென் றொருநரி
யோ விரண்டுக்கு நடுவிலகப்பட்டிருந்தது அந்த அனர்த்தத்தைப்
பார்த்துக்கொண்டு சிறிதுநேர மிருந்தான் அப்போதந்தச் சீஷன்
இதுதானல்லசமயம் இதுவிட்டாலினிக்கிட்டுமா காற்றுள்ளபோதே
தூற்றிக்கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கந்தையைச் சுருட்டி
க்கொண்டோடிப்போனான் உடனே சன்னியாசி வந்துபார்த்துச் சீஷ
னைக்காணாமல் ஓகோ நம்மை ஆஷாடபூதி யேய்த்தானே நாம் மோச
சம் போனோமே யென்று திகிற்பட்டு உப்புக்கண்டம் பறிகொடுத்
த பாப்பாத்தியைப்போல் ஒருவருடனுஞ் சொல்லாமற் றேடிக்கொ
ண்டுபோ யெங்குங்காணாமல் அன்றிராத்திரியொரு பெரிய பட்டண
த்தி லோரிடையன் வீட்டுத்தலைக்கடைத் திண்ணையில் வந்துசேர்ந்
து நித்திரையில்லாமற் படுத்தெண்ணமிட்டுக் கொண்டிருந்தான்,
பொருளிழந்த சன்னியாசி இப்படி யிருக்கையில் நாடோறுந் தன் பு
ருஷனில்லாத வேளைபார்த்துப் பரபுருஷனிடத்திற் போகிறவளாகிய
அந்த விட்டிடைச்சி, அன்றையதினமுந் தனக்குத் தூதிகையாகிய
அம்பட்டத்திவந்து கள்ளபுருஷன் வந்திருக்கிற செய்தி சொல்லக்
கேட்டுத் தன்புருஷனில்லாதிருக்கக்கண் டவளுடனேகூடப் போ
னாள் போகும்போது புருஷனெதிரேவரக்கண்டு வேறொரு காரியத்
திற்குப் போனவள்போற் சாக்கிட்டுக்கொண்டு திரும்பி வீட்டுக்கு

வந்துவிட்டாள் புருஷனந்தக் கபடையறிந்து மிகுந்த கோபத்
தோடும்போ யவளை வாய்சலிக்கத்திட்டி யொருதூணிற்கட்டி. கை
சலிக்கவடித் திராத்திரிக்கெல்லா மிப்படியேயிரு வென்றாட்டி யெ
ன்று நித்திரை செய்தான் பக்கத்துவீட்டுக்காரியாகிய அந்ததூதி ம
றுபடியும்வந்து ஐயோ யவனங்கே யுன்விரகத்தினாற் செத்தாப்போ
ற் கிடக்கிறானே. இப்போது அவிழ்த்துவிடுகிறே னென்னைக் கட்டிவை
த்து நீபோயந்தச் சோரபுருஷனைச் சந்தோஷிப்பித்துவா மறுபடி
நானுன்னைக் கட்டிவைத்துப் போகிறேனென்று சொல்ல இதுநல்
ல வுபாயந்தானென்று தூதியைஅப்படியே கட்டிவைத்து விளக்கை
யுமிறுத்திவிட்டு இடைச்சி சோரபுருஷனிடத்திற்குப் போயிருக்கும்
போ திடையன் விழித்துக்கொண்டு தூணிற்கட்டுண்டிருப்பவ ளிட
த்திற்குப்போய்க் கோபத்தாலடித்தா னவளம்பட்டத்தி யாகையால்
அதற்கொன் றுஞ் சொல்லாம லிருக்கக்கண்டவன் சோரம்போனது
மெய்தானென் று மிகவுங் கோபித்து கத்தியை யெடுத்து மூக்கையறி
ந்து மறுபடியும்போய் நித்திரை செய்யும்போது போனவிடைச்சி
சோரபுருஷனை யனுபவித்துவந்து கட்டுண்டிருக்கிற தூதியைப்பார்
த்தென்ன சமாச்சாரமென்றாள் தூதிமூக்குத்தவிர மற்றவையெல்
லாமெதாப்பிரகாரம் மிருக்கிறதென றிறகவளைவிட்டுப் பழயபடி யவ
ளாற்றுன்கட்டுண்டிருக்கையி லிடையன் விழித்துக்கொண்டா னவ்வ
ரவு மிவளறிந்து அதனைப்பார்த்தாயோபாதகா வீணாகவென் மூக்கை
யறிந்து குரூபியாக்கிவிட்டாயே ஒருவனுமொருத்திக்கும் பிறந்தொ
ருவனுக்கு மூன்றானைபோட்டவளானு லென் மூககு வளரட்டு மென்
சபதத்தை லோகரட்சகன் கேட்கட்டுமென்று சொல்லிச் சும்மா வி
ருந்தாள் இடையனுடனே யெழுந்தோடிவந்து பார்க்க பழயபடி மூ
க்கிருக்கக்கண்டு பயந்தாச்சரியப்பட்டிப்படிக்கொத்த பத்தினியொ
ருத்தி யுலகத்திலிருக்கிறதினாலேதானே மழை பெய்கிறது கடலு
ங்கரையில்லாம னிற்கிறதெனநினைத்துப் பெண்ணே குலவிளக்கே நீ
ண்டநெருப்பேயென்று சாஷ்டாங்கமாக விழுந்து கட்டை யவிழ்
த்து விட்டுவிட்டான் இதுயிப்படியிருக்க மூன்மூக்கருப்பட்டு மூனை
குலைந்த தூதியானவளற்ற மூக்கைக்கையிலெடுத்துக்கொண்டு சீக்கிர
மாகத் தன் வீட்டுக்குப்போ யிதையெப்படி மறைக்கலாமென்று வி
சாரப்பட்டுக் கொண்டிருக்கும்போது பொழுதுவிடிந்தது விடியவே
யம்பட்டனெழுந்திருந்து வேலைசெய்யவேண்டும் அடப்பத்தையெடு
த்துக்கொண்டு வாடியென்று கேட்டான் அவள் கதவின்பின்னே யிரு
ந்தபடியே யொரு கத்தியை யெடுத்தவன் முன்னே விட்டெறிந்தாள
வன் கோபித்து யடப்பத்தைக்கேட்டா லொருகத்தியை விசிறியெறி

ந்தாளென்று படபடப்புடனதைமறுபடியவள்முன்னே யெறிந்தான்
யெறிந்தவுடனே ஐயோபாவி அபியாயமாக மூக்கையறுத்து முனை
யைக் குலைத்தாயேயென்றந்த கத்தியையுமறுபட்டமூக்கையுங் கை
யிலெடுத்துக்கொண்டு மிகுந்த வாக்குரோஷத்தோடு தெருவிலோ
டிவந்துவிராபதியாயிருக்கிற வென்னை யிந்ததுஷ்டன் மூக்கை யறுத்
தானே யிந்தவூரில் யாருங்கேட்பாரில்லையே கூகூவெனவேயழுதாளி
தைதூதர்கண்டந்த நாவிதனைப்பிடித்துக் கழுத்தைப்பற்றி நெட்டிக்
கொண்டு நாவிதச்சியையழைத்துக்கொண்டுபோய் ராஜாவுக்கறிவித்
தார்கள் ராஜா அம்பட்டனைப்பார்த்து அடா இவள் மூக்கை யேன
றுத்தாயென அவனொன்று மூத்தாஞ்சொல்லாமல் விழித்தான் பிர
கரசனிந்த துஷ்டனைக்கொண்டுபோய்க் கழுவிலேற்றுங்களென்று க
ட்டளை கொடுக்க விந்தச்சேதியை யந்தப்பொருளிழந்த சந்நியாசி
கேள்விப்பட்டவுடனே ராஜாவினிடத்திற் கோடிவந்து மகாராஜாவே
அவனபராதியல்ல விவ் வாச்சரியமெல்லா நானறிவேன் எப்படியாட்
டுச்சண்டையி னரியிறந்ததோ எவ்வாறுஷாடபூபதியின் சேர்க்கை
யாலென்பொருள்போயிற்றோ வப்படியேயிடைச்சி சகவாசத்தினலி
வள்மூக்கிழந்தாளென்றெல்லாஞ் சாங்கோபாங்கமாகச்சொல்லி யிம்
மூன்றுந் தங்கடோஷமேயல்லாமல் மற்றெவரிடத்திலுமில்லை யாகை
யா லம்பட்டனை யனியாயமாய்க் கழுவேற்றுவானேனென இவையெ
ல்லாங்கேட்டு ராஜாவிவர்களைவிட் டிடைச்சியைப் பிடித்து வரச்சொ
ல்லியவளை மூக்கறுத்தனுப்பினனென இதைக்கேட்டுக்கரடனிடற்கு
நான் செய்யத்தக்கதென்ன என்றுகேட்கத் தமனகன் யாதொன்று
போயிற்றோ அதைமறுபடிச் சேகரிக்கவேண்டும் எதுசம்பாதிக்கவில்
லையோ அதைச்சம்பாதிக்கவேண்டும் எதிராகவரும் விக்கினங்களைத்
தடுக்கவேண்டும் என்றிப்படி யாலோசித்துப் பண்ணுகிறவ னல்ல
வோமந்திரி இப்போதுநமக்கு பிங்களசஞ்சீவகர்களுடைய சினேகத்
தாலெல்லாச்சங்கடமுநேரிட்டது இவர்களுடையநட்பைப்பிரித்தாற்
றானமக் கிவ்வளவன்னங்கிடைக்குமென்றுசொல்ல கரடகன் அந்தப்
பிங்களசீவகர்களுறவைக்கெடுக்கயாராலாகும் மணியினின்று மொளி
பிரிக்கப்படுமோ இதுமுடியாத காரியமல்லவோ என தமனகன் என்
னசொல்லும் உபாயத்தாலாகிறது பராக்கிரமத்தாலாகுமோ ஒரு கா
ஞ் சொர்ணமாலையாலொரு கிருஷ்ணசர்ப்பத்தை கொன்றதறியாயோ
என கரடகன் அதெப்படிஎன்றுவலோடு கேட்கத் தமனகன் சொல்
லத்தொடங்கிற்று

ஒருபெரியமரத்திற் கூடுகட்டிக்கொண் டாணும் பெண்ணுமாகி
யவிரண்டு காக்கை னெடுநாள் வாழ்ந்திருக்கும்போது அந்த மரப்

பொந்தி லொருநாகம் வந்துசேர்ந்து அந்தக்காக்கையிடுகிற முட்டைகளையெல்லாங்குடிக் கக்கண்டு இதற்கென்னசெய்யலாமென் றுமிகவும் விசனப்பட்டுத் தனக்குச் சிநேகமாகியநரியிடத்திற்போய் நடந்தசங்கதிகளைச்சொல்லி இப்போதாகிலு முட்டைகளைக் காப்பாற்றுகிறதற்கென்னசெய்யலாமென நரி ஒருநண்டானது வெகு நண்டாசையைக்காட்டிக்கொக்கைக்கொன்றாற்போல அதை ஒருஉபாயத்தாற் கொல்லவேண்டும் எனகாகம் நண்டுக்கொக்கை யெப்படிக்கொன்றதுசொல்லுமையாஎன நரிசொல்லுகின்றது.

மீன்களையே மிகுதியுந்தின்றுவளர்ந்த வொருகொக்கானது குளக்கரையில்வந்துவிசனமாய்நின்றுகொண்டிருந்தது அப்போது அதிலிருந்தமீன்கள்கொக்கைப்பார்த்து நீ உன்னாகாரத்தை விட்டுச் சும்மாவிருப்பானேன்சொல்லென கொக்கு நான்மீன்றின்பது மெய்தான் ஆகிலுமின்றைக்கிங்கே செம்படவன்வந்தெல்லா மீன்களையும் பிடிக்கவிருக்கிறதினால் என்னுடைய இரைகளெல்லா நிர்மூலமாய்ப் போகுமேயென்றேங்கிச் சும்மாவிருக்கிறேன் என இதைக்கேட்டு மீன்களெல்லாங்கூட்டங்கூடி எவன் நமக்குப்பயஞ்சொன்னானோ அவனேயுபாயஞ்சொல்லுவானென்றுலோசித்துப் பிறகு கொக்கைப்பார்த்து நீயேயெங்களையிப்போதிரட்சி என கொக்கு நான் செம்படவனோடு சண்டைபண்ண சமர்த்தனல்லமேலும் நானேகிழவன் உங்களை வேறோரிடத்திற்கு கொண்டுபோவேன் அதனாலெனக்கு மிந்தத்தள்ளாமையான காலத்திற்பரோபகாரி யென்கிற பெயரும்வரும் நீங்களும் வெகுகாலம் பிழைத்திருப்பீர்கள் என அப்போ தந்தப் பேதமையான மீன்களெல்லாம் பிராணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்பேச்சை நம்பி நல்லதப்படியே கொண்டுபோகவேண்டும் எனக்கெஞ்ச அந்தவஞ்சனையானகொக்கு நடைக்கொவ்வொன்றாகக்குளத்திலிருக்கிறமீன்களையெல்லாமூக்கினாற் கௌவிக்கொண்டுபோய்ச் சிலமீன்களைத்தின்று மற்றமச்சங்களை யொருபெரிய பாறையின்மேலுலரவைத்தது பிறகு அந்தக்குளத்திலிருந்த வொரு நண்டு இந்தக்கொக்கைப்பார்த்து ஓசீவகாருணியனே என்னையு மவ்விடத்திற்கொண்டுபோகவேண்டும் எனவேண்டிக்கொள்ள கொக்குவருங்காலத்திலெதுவும் வலியவருமென் றுள்ளுக்குள்ளே சந்தோஷித்து அப்படியே நண்டையுங் கவ்விக்கொண்டு போகும்போது நண்டுவழியில் மீன்கள் செத்துக்கிடக்கிறதையு மீன்முட்கள் சிந்திக்கிடக்கிறதையு மீன்கள் பாறையின்மே லுலருகிறதையும்பார்த்து ஐயோ பலமீன்களையுங்கொன்று நம்மையுங் கொல்லவந்தது னம்மைக்கொல்வதற்

குமுன்னமே காமினைதக் கொல்வோமென்றொருபாய நினைத்துக்கொக்கைப்பார்த்து நீ யென்னை வருத்தப்பட்டெடுத்துக்கொண்டு வந்தாய் அங்கே யென்னுடைய பரிவாரங்க ளிருக்கின்றன ஆகையாலங்கே யென்னை நீ மறுபடியுங் கொண்டுபோனாலவைகளையுங் காண்பிப்பேன் என அதைக்கேட்டுக் கொக்குப்பேராசைபட்டுத் திரும்பி யந்தக் குளத்திற்கு நேரே வருகையில் நண்டு கொடுக்கினா லந்தக்கொக்கின் கழுத்தை இரண்டுதுண்டாக நறுக்கிக் குளத்தில் வீழ்ந்து சுகமாய் வாழ்ந்தது ஆகையா லந்தக்கொக்கைப்போலப் பாம்பையுங் கொல்ல வேண்டும் என காகம் அப்படி பாம்பைக்கொல்ல நான் செய்யவேண்டிய வுபாயமென்ன என்று கேட்க நரி இப்பட்டணத்திராஜகுமாரி குளிக்கிற மஞ்சனச்சாலைக்குப்போய் அவள் ஸ்நானம் பண்ணும்போதாபரணங்கள் கழற்றி வைத்திருக்கும் அந்த வாபரணங்களி லொன்றை யெடுத்துச் சனங்கள் பார்க்கும்படி கொண்டுவந்து மரப்பொந்திற் போடு என்று சொல்ல காக்கையு மப்படியே செய்ய அந்தவிராஜனுடைய வேலைக்காரர்போ யந்தமரத்தின் பொந்தைப்பிளக்க நாகமானது சீறிவரவே அதை இரண்டு துண்டாக நறுக்கியெறிந்தார்கள் இப்படி காகத்தின் காரியநிறைவேறிற்று ஆகையாலெல்லாமுபாயத்தாற் கைவசப்படும் எவன்புத்திவானோ அவன்பலவான் எவனுக்குப் புத்தியில்லையோ வவனுக்குப் பலமெங்கே பூர்வம் புத்திபலத்தினாலொருமுயல் சிங்கத்தைக் கொன்றது என அதெப்படி என்று கரடகன் கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

ஒரு நெருங்கியகாட்டில் மதோன்மத்த னென்னுஞ் சிங்கமானது அக்காட்டிலிருக்கிற மிருகங்களை யெல்லாங் கொன்று தின்று கொழுத்து வெறிகொண்டு திரிகிறநாளில் மிருகங்களெல்லா மொன்றாகத் திரண்டுபோய் ஓய்மிருகேந்திரா உன்னுடைய காட்டிலிருக்கிற மிருகங்களையெல்லா மிப்படிகொன்றால் மிருகங்கணிர்மூலமாய்ப் போம் ஆதலாற் றினமொவ்வொன் றுமக்கிரை கொடுத்துக்கொண்டு வருகிறோம் அதைநீர் பட்சித்துக்கொண்டிருக்கலாம் என்று பிரார்த்திக்க சிங்கம் மெய்தானென்று நம்பி அப்படியே செய்கிறேன் என்று சத்தியஞ் செய்துகொடுத்தது பின் ஒவ்வொன்றாகத் தின்றுகொண்டு வருநாளில் ஒருநாளொரு கிழமுயலினுடைய முறைவந்தது அப்போதுமிருகங்களெல்லாங்கூடி இன்றைக்குன் முறையோ என்றுசொல்ல முயலானது இன்றைக்கு நமக்குமரணம்வந்தபடியாலிதற்கோ ருபாயம்யோசிக்கவேண்டும் புத்திமானுக்கேது தன்கைகூடாது ஆகையினாலிப்போது உபாயத்தாற் சிங்கத்தை கொல்வோ மென்றாலோசித்து மெள்ளமெள்ள வந்தச்சிங்கத்தின் பசிவேளைதப்பி வரச் சிங்கம்பார்த்து முயலே பாணையுமென்னுடையபசிவேளைதப்பிவருவதில்லை

யெவ்வளவுபிராணிஇப்படித்தாமசமாய்வரலாமாஎன்று மிகுந்த கோபத்தோடுகையைத்தரையிலேமோதிக்கேட்க முயல்ஐயனே இதுவென் குற்றமென்று உன்னுடைய பசிவேளைக்கே வந்தேன் வந்தவழியிலொரு பொல்லாத சிங்கத்தைக்கண்டு பயந்தொளித்திருந்து அந்தசிங்கம் போனபின்பு வந்தேனென்று சொல்லச் சிங்கம்என்னையல்லாமலிந்தக்காட்டில் வேறேசிங்கம்நீபார்த்தாயா காட்டுவாஎன்றுரைக்கஅழைத்துக்கொண்டு போய்ச் சேறுநீரு மிகுந்த வொரு பாழுங்கிணற்றை இதிலேயிருக்கிறது என்றுகாட்ட சிங்கம் முயலின் பேச்சைநம்பிக் கிணற்றை யெட்டிப்பார்த்து அதிற்றோன்றின தன்னிழலை அந்தச்சிங்கமிங்கே யிருக்கிறதென்று நினைத்துக் கோபத்தோடதைக்கொல்லவேண்டுமென்றதிற்பாய்ந்து சேற்றிலழுந்தியிருந்தது ஆகையால் யெவன் புத்திவானோ அவன்பலவானென்றனக்குச் சொன்னேனென கரடகன் சிங்கத்தினிடத்திற்குச் சுகமாய்போ உனக்குமங்களமுண்டாகட்டும் எனப்பிறகு தமனகனந்தச் சிங்கந்தனித்திருக்கிறசமயம்பார்த்துப்போய்த் தண்டம்பண்ணி சுவாமி உமக் கின்றைக்கொரு பொல்லாங்கு நேரிட்டது அதைநானறிந்து கட்டளையில்லாமல் விண்ணப்பம்பண்ணிக்கொள்ளலானேன் என சிங்கம் அதென்னசொல் என தமனகன் உம்முடையமித்திரனாகிய சஞ்சீவிகன் உம்மிடத்தில் விசுவாசங்காண்பித்து உம்முடைய விராச்சியத்தைப் பிடுங்கிக்கொள்ளயோசித்திருக்கிறான் இதைநீர் பொய்யென்று நினைந்துக் கோபித்தாலும் அல்லது தண்டித்தாலும் ராஜனுக்கொரு துன்பம்வரும்போது தன்னலத்தைப்பாராமல்ராஜனுக்குநல்லவுபாயங்களைப்போதித்துச் செய்யத்தக்க காரியங்களைச் செய்வதுதான் மந்திரிகளுக்குநீதித்தொழிலாகையாலுமக்கிதைத்தெரிவித்தேன் என பிங்களன் இதைக்கேட்டாச்சரியப்பட்டுச் சும்மாவிருந்தது பின்னுந் தமனகன் நீரவனை முக்கியப் பிரதானியாக்கினீர் அப்படியேயிருக்கட்டும் எனக்கென்ன ராஜாவும் பிரதானியுஞ் சமானமாயிருந்தால் ராஜலட்சுமி இவ்விருவரிலொருவனைக் கைவிடுவாள மேலு மெப்போதுராஜா ஒருவனையேபிரதானி யாக்குகிறானோஅப்போ தந்தப்பிரதானிக்குக் காரியமுண்டாகிறது அவன்சுதந்தரனாயிராச்சியவாசையால் ராஜாவைக்கொல்லவிச்சிக்கிறான் ஆகையாலிப்படிப்பட்டமந்திரியை வேரோடுகளையவேண்டும் இல்லாவிட்டாலவனாற்றீங்குநேரிடும்இதைச்சொல்லவேண்டுமோ தாங்களெல்லா மறிந்திருக்கிறீர்கள் லோகத்திற் செல்வத்தை விரும்பாதவனருமையென்றிப்படியெல்லாஞ்சொல்லக்கேட்டுச் சிங்கம்நகைத்து சஞ்சீவகனிடத்தி லெனக்கிருக்கிற சிநேகம்போகாது மித்திரர்களனேக வநியாயம் பண்ணினாலு மதைப் பிரியமாகவே நினைக்கவேண்டும் எனத் தமனகன் இதுதான் புத்திக்கு தோஷம்மிதனாலுமக்கபா

மிதனாலுமக்கபாயம்வரும் ஏனென்றால் யாதொருவன் சாதுக்கள்பு த்தியைக்கேளாமற் துஷ்டபுத்தியைக் கேட்கிறானோ அவன்மருந்து தின்னாதரோகியைப்போல விபத்தை யடைவான் சாதுக்கினிமையா யுமிதம்பண்ணுகிறதாயு மிருக்கிறவசனந்துல்லபம் சாதகனுடையவச னம்செவிக்கினிமையா யிருக்குமானாலதுகேட்க லாகாதென சிங்கம் நான்பயங்கொடுத்து ரட்சித்தவனெனக்குத் துரோகம் பண்ணுவா னென்னபேச்சுபேசுகிறாய் போவென மறுபடி தமனகன் துஷ்டர்கு ணமாறுமா நாயின்வாலைகணக்கெடுக்கலாமா எட்டிமரத்துக்கமுதம் வார்த்துவளர்த்தாலு மதற்கு தித்திப்புண்டாகுமா ஆகையாற் றாங் கள்கேளாமலிருக்கயிந்தவிர்த்தாந்தத்தை சொன்னேன் ஏனென்றால் பிறக்கிதப்பண்ணுவது சாதுவுக்கும் முக்கியதர்மமினிமே லென்மே ற்குற்றமில்லை யாதொரு சமயத்தில் ராசாபாமரர்களுடையபுத்தியை கேட்டுச் சங்கடப்படும்போது காரியக்காரர்மேற் குற்றஞ் சுமத்துகி றானதலால் சொன்னேனென் றிப்படிச்சொல்லிச் சும்மா விருந்தது அப்போதுசிங்கஞ் சொல்லுகிறது அதைநான் சஞ்சிவகனுக்குச்சொ ல்லவேண்டுமென தமனகன் அவனுக்கிதைச் சொன்னாலவன் ஜாக்கி ரதைப்பட்டு வேறொருபாயத்தில் பொல்லாக்கு தேடுவான் ஆகையா லிதையவனுடன் சொல்லாதிருப்பதேயோக்கியமேனென்றால்ராசாவி ன்மந்திராலோசனை ரகசியமாக விருக்கவேண்டுமென இதைக்கேட்டு மறுபடிசிங்கம் அந்தசஞ்சீவகன் விரோதப்பட் டென்ன செய்யமாட் டுவானவன்சாமர்த்திய மெவ்வளவென்றுசொல்ல நறியவனை நாமறிய மாட்டோம்அவன் பராக்கிரமமுஞ் சுபாவமு நமக்கெப்படித்தெரியும் ஒருவன்குணத்தை யறியாமற்சேர்க்கலாகாது சேர்த்தாலொரு சீலைப் பேன் மூட்டுப்பூச்சியைச் சேர்த்து நாசமடைந்தாற்போ லாகுமென சிங்கம் அஃதெப்படிசொல்லுமென தமனகன்சொல்லுகிறது.

ஒருராசாவின்பஞ்சணையில் மந்தவிசர்ப்பணி யென்னு மொருசீ லைப்பேன்னெடுநாளாக வாசம் பண்ணிக்கொண்டிருக்கையி லொருநா ளித்வீட்டுக்கு டிண்டிபனென்னு மூட்டுப்பூச்சிவந்தது அதைப் பா ர்த்து சீலைப்பேன் அப்பா நீ பொல்லாதவன் மூட்களைப்போன்ற பற் களினாலே தூங்குதற்கு முன்னமே கடுக்காய் கடிப்பாய் நீ சமயந் தெரியாதவனாதலால் நீராஜசயனத்தி லிருக்கத் தக்கவனல்ல இவ்வி டம் விட்டோடிப்போவென்று கடுகடுத்துச்சொல்ல மூடு நானப்படி ச்செய்யவில்லை நீர் சொன்னபடியே கேட்பேனென்று காலில்விழுந் துபிரார்த்திக்கசீலைப்பேன் மனதிரங்கியல்லது நீவெடுக்கென்றுகடியா

மல்லித்திரைசெய்யப்பார்த்து மெற்றெனக் கடித்துக்கொஞ்ச ரத்த ங்குடித்தீரென்றுசொல்ல அப்போதந்த மூட்டைப்பூச்சி கல்லதென்றி ருந்துபிறகுராசாவிழித்திருக்கும்போதே சுறுக்கென்றுகடிக்க ராஜ ன்றிடுக்கென்றெழுந்திருந் தென்னமோகடித்ததென்று சோதனைகா ருடனேசொல்ல அவர்கள் விளக்குக்கொண்டு சோதிக்க முகடுசீக்கி ரமாய்கட்டிற்சந்தி லொளித்துக்கொண்டது யதற்கிடங் கொடுத்த சீலைப்பே னகப்பட்டது நீயல்லவா வெங்க ளிராசனைக் கடித்தாயெ ன்று நசுக்கிக்கொன்றார்கள் ஐயோ வகைதெரியாமலிறந்தது ஆகை யா லொருவன்குணத்தை யறிகிறதற்குமுன்னே யவனுடனே சகவா சம்பண்ணலாகாதெனக்கேட்டுச் சிங்கம் அந்த சஞ்சீவகனுடைய து ஷ்டசுபாவமென்ன எப்படியென்றெமக்குத் தெரிந்தாலப்போது நி ஜமென்றுசொல்ல தமனகன் அந்தவெருது உம்மைக்கொல்ல நினைத் து தன் கொம்புகளைமுன்னிட்டுக்கொண்டு உம்முடையசந்நிதியில்வ ரும்போதெங்களுக்கு தெரியவருமென்று சொல்லிவிட்டு எருதினிட த்திற்குப்போ யங்கேதன்மனதில் மிகவும் விசனமிருக்கிறதாக தோ ற்றுவித்தது யப்போசஞ்சீவகன் மித்திரா சுகமாவென்று கேட்க தம னகன சேவகனுக்குச் சுகமெங்கேயிருந்துவரும் சம்பத்தும் விபத்து ங்கூடவேயிருக்கின்றனரா சாவுக்குப்பிரியமாயாரிருக்கிறார்கள் யாச கன் சன்மானத்தை யடைவானோ ஆகையாலிந்தக்காலமே தனக்குமி த்திரன்யார் தன்வலியெவ்வளவென் றெப்போதும் விசாரித்துக்கொ ண்டிருக்கவேண்டுமென இதைக்கேட்டு சஞ்சீவகன் அப்படி. என் சொல்லுகிறாயென தமனகன் ராசகாரியத்திலுண்டாகிய வஞ்சகத் தை மற்றொருவரோடு சொல்லலாமோ ராசாவறிந்தாற்கொல்லுவான் ஆனாலும் என்னைநம்பிக்கையாலே சிங்கத்தோடே சிநேகம்பண்ணின தினால் யுனக்குச்சொல்லுகிறேன் அதென்னவென்றால் அந்தச்சிங்க முன்னமே மிகவும்கோபமா யுன்னைக்கொன்று தன்னுடைய சேனைக ளுக்கெல்லாம் நல்லவிருந்திட நினைக்கிறதென்று சொல்ல அதைக்கே ட்டவுடனே சஞ்சீவகன்வருத்தத்தோடு மாலோசித்துக்கொண்டிரு ந்தது தமனகன் வேறேயாலோசனையென்ன யாதொன்றுசம்பவித்த தோ வதற்குத்தகாத நடக்கைநடக்கவேண்டுமெனசஞ்சீவகன் நீசொ ன்னதெல்லாஞ்சரிதான்உலகத்திலுமப்படியேயிறக்கிறதுஎப்படிஎன் றால்சாதாரணமாய்ஸ்திரீகளை துற்சனர்களுக்கு வசனமாயிருக்கிறார்ரா சாக்கள் துஷ்டர்களைபரிபாலிக்கிறார்கள் துஷ்டனுடனேமிகவுஞ்சிநே கித்தாலவன் விபரீதமாக நினைக்கிறான் ஏனென்றால் குருடனுக்குக் கண்ணாடியைக் காண்பித்தாலும் செவிடன்காதி லுபதேசித்தாலும்

அவர்கள் விபரீதமாகவே நினைப்பார்க ளாகையாலே துஷ்டனப்படி விபரீதமாக நினைக்கின்றான் எப்படிச்சந்தனமரம பாம்போடு கூடியிருக்குமோ எவ்வாறுத் தாமரைமுள்ளுக்களோடு கூடியிருக்குமோ வப்படிபெரும்பாலும் ராசாக்கள் துஷ்டர்களாற் சூழப்பட்டிருக்கிறார்கள் ஆகையா லிப்படிப்பட்ட பொல்லாங்கு நமக்குநேரிட்டதென இதைக்கேட்டுத் தமனகனந்தச்சிங்கத்து வாய்பேச்சுமாத்திரந் தித்திப்பேயல்லாமல் மனமிகவுங் கடோரந்தான் பூர்வம்பிர்மாகடலைகடக்கிறதற்கு கப்பலுண்டாக்கினா னிருட்டைபோக்கடிக்க விளக்கைசிருட்டித்தான் யானையையடக்க வங்குச நிருமித்தான் ஆனால் துஷ்டர்களுடைய மனதடக்கும்படி யாதொன்றுஞ் செய்யாமற்போனானென்ன வினவ எல்லாங்கேட்டுச் சஞ்சீவகன்பெருமூச்செறிந்து சொல்லுகிறது பெரியபொல்லாங்கெனக்கு நேரிட்டதிதைத் தப்பித்துக்கொள்ள வெனக்கு சாமர்த்தியமில்லை எமனுடைய கையிலகப்பட்டவனெப்படித்தப்பிப்போவான். எப்படியொரு குற்றமில்லாத வொட்டகை காகமுதலானவை கூடி கொலைசெயதனவோ எப்படிவஞ்சனைபண்ணுகிறதுஷ்டர்களொருவனிடத்திற் குற்றமில்லாமலே கொலைசெய்கிறார்களென தமனக னதெப்படியண்ணே சொல்லவேண்டுமென சஞ்சீவகன் சொல்லுகிறது.

ஒரு காட்டில் மகோற்கடனென்கிற வொருசிங்கம் நரியையும்புலியையுங் காக்கையையுந்தனக்குமந்திரியாக வைத்துக்கொண்டரசாளுகிறநாளில் ஒருநாளந்தக்காட்டில் ஒட்டகமொன்று வழிதப்பிவரக்கண்டு மந்திரியாகிய காக்கை நீயாரெனக்கேட்க வந்த ஒட்டகம் நான் வழிதப்பிவந்து விட்டேனெனச்சொல்ல அதை யிட்டுக்கொண்டுபோய் சிங்கத்தினிடத்தில்விட்டு நடந்தகாரியத்தைச் சொல்லவந்த சிங்கம்கேட்டு பயப்படாதே நம்முடைய மந்திரிகளுடனே நீயுமொரு மந்திரியாயிருமென் றபயஸ்தங் கொடுத்து மந்தானகனென்று பெயரிட்டதை தன்னிடத்தில் வைத்துக்கொண்டது இப்படி வெகுகாலஞ் செல்லுகையி லொருநாள் சிங்கத்துக்குச் சரீரம் அசத்தமாயிருந்தபடியினா லம்மூவரையு மழைப்பித்திரைக்கென்னாலிரை சம்பாதிக்கக்கூடாதாகையால் நீங்கள்போய் எனக்கேதாவ திரைகொண்டு வரவேண்டும் பிறகு நான்தின்று மிருந்ததைநீங்கள் தின்னலாமென இம்மூன்றும் சிங்கத்தின் கட்டளைப்படி யந்தகாட்டிற்போ யிரைதேடிபார்த் தகப்படாமையாலப்போது தாங்களோடு கூடவிருந்த மந்தானகனை தூரத்திற்போகும்படி யொருவேலையிட்டுக் காக மற்ற விருவரையும் பார்த்தினறைக்கு நாம் மந்தானகனை கொல்லுவோம புல்லுந்தழையுந் தின்றவனால் நமக்குப்பிரயோசனமென்ன என மற்றிரண்டுஞ்சரிதா னெனலவனுக்கு நம்முடைய ராசா வபயங்கொடுத் திருக்கிற

இது லவனை நாமெப்படிக்கொல்லக்கூடாதென காகம் ஆனாலுமின்றை
க்கு சிங்கத்தின் கையாற்றப்பாமல் மரணமடைவோம் ஏனென்றால்
பசியெடுத்தால் தாயும்பிள்ளையைவிட்டுவிடுகிறாள் பாம்புத னிட்டமு
ட்டைகளைக் குடிக்கிறது ஆகையாற் பசியாற் பீடிக்கப்படுகிறவ னெ
ந்தப்பாதகந்தான் பண்ணமாட்டா னிதுவுங்களுக்குத் தெரியவில்லை
யாவென்று சொல்லி யுடனேசிங்கத்தண்டைபோய்க் காகஞ்சொல்லு
கிறது சுவாமி இன்றைக்கெதுவுங் கிடைக்கவில்லை என ஆனாலிதற்கெ
ன்ன உபாயம் பண்ணலாமெனச் சிங்கங்கேட்க காகம் தாங்கள் சுவா
தீனத்திலிருக்கையில் வேறே யாலோசிப்பானேன் வெண்ணையை
வைத்துக்கொண்டு நெய்தேடலாமாவென சிங்கம் எங்கிடத்தாதார
மெங்கேயிருக்கிறதென காகம் மந்தானகனென்னு மொட்டையிரு
க்கின்றதே என இதைக்கேட்டுச் சிங்கம் பூமியைக் கையாற்றொட்டுச்
சிவசிவாவெனக் காதின்மேற் கையைவைத்து நானவனுக்கபயங் கொ
டுத்திருக்கையில் நீங்களிப்படிவிபரீதவார்த்தைசொல்லலாமா அடை
க்கலம் புகுந்தவர்களைக் கைவிடலாமா பசுபூமிதானியமிவற்றின் றான
த்தைக்காட்டிலு மிந்தப் புண்ணிய மதிகமென்று சாஸ்திர மிருக்கிற
தே எனக்கேட்டு காகம் ஐயா என்னொரு விண்ணப்பத்தை கேட்டரு
ளும்ஒருகுலத்துக்காக ஒருவனைவிட்டு விடலாமா ஒருகிராம ரட்சணை
க்காக ஒரு குடும்பத்தை தூரக்கலாமா ஒருதேசபாலனத்தின் பொரு
ட்டு ஒருகிராமத்தைவிடலாந் தன்னிமித்தம் பூமியை விடலாம் ஆகை
யாலிது தப்பென்றுகினு மவனைதாங்கள் கொல்லவேண்டாம் நாங்க
ளே கொல்லுவோம் இல்லாவிட்டா லவனே சாவுடன்பட்டு என்னைக்
கொல்லுங்களென்பான் அப்போது நாங்கள் கொல்வோமென்று கா
கஞ்சொல்ல சிங்கஞ் சும்மாவிருந்தது பிறகுகாகம் அதையேகட்டளை
யாக நினைத்துக்கொண்டுபோய் மற்ற விரண்டையு மிட்டுக்கொண்டு சி
ங்கத்தின்கிட்டவந்து சுவாமியின்றைக்கு ஒன்றும ஆகார மகப்படவி
ல்லை அதினா லுங்களுக்கு இன்றைக்கு பட்டினி யிருக்கலாச்சுதே அ
ப்படியிராமலென்னைப் பொசிக்கலாமென நீ எவ்வளவு உன்னை யுண்
டதினாலென்பசிதீருமா உன்னுடன் என்கடவாய்பல்லுக்கு போதுமா
வென்றுகேட்க நரியப்படியானால் என்னைத் தின்னென்று நிற்க நீயும
ப்படிதான் நீ யதிகமல்லவென்றுமறுக்க புலி இவ்விருவரில் நான்பெ
ருத்திருக்கிறதினா லென்னைப் பட்சித்துப் பசிதீருமெனச்சிங்கம் நீதா
னெனக்கு அவ்வளவரை உன்னை பெரிதாக நினைத்துக்கொண்டிருக்
கின்றேயா வென்று சொல்ல ஒட்டக மிதைப்பார்த்துச் சுவாமி
நானல்லாரைக் காட்டிலும்பெருத்திருக்கவில்லையா சித்தமானாலென

ளைக் கொல்லலாமென விதைக்கேட்டவுடனே புலியும்நரியுமாய் விழுந்து அந்தட்சணமே ஐயா அதைக்கொன்றெல்லாம் புசித்தன ஆகையாலெங்கே மிகவுங் கீழ்களிருக்குமோ வங்கேசுகமிராது பிராணனுக்கு நாசம்வருமென்றே நினைக்கவேண்டும் இவ்விடத்திலு மிப்படியேயிருக்கிறது ஆனால் துஷ்டர்கையி லகப்பட்டுச் சும்மாவிருக்கிறதை காட்டிலுஞ் சண்டைசெய்வதே யோக்கியம் ஏனென்றால் சண்டைமுனையிற் செத்தால் சொர்க்கமடைகிறான் சத்துருவை செயித்தால் இராச்சியமடைகிறானாதலால் சூரர்களுக்குச் சாவும்பிழைப்புஞ் சமானமென்றது அதைக்கேட்டுத்தமனகன் சொல்கிறது பகைவர்களுடைய பராக்கிரமத்தை தெரியாமலெவன் பகைத்துக் கொள்ளுகிறானோ யவன்சமுத்திரஞ்சிட்டுக்குருவியினா லெப்படி யவமானமடைந்ததோ அப்படியவமான மடைவானென அப்போது தம்பி அதெப்படியென்று சஞ்சீவகன்கேட்கத் தமனகன் சொல்லுகின்றது.

சமுத்திரக்கரையி லிரண்டு சிட்டுக ளாணும்பெண்ணுமா யொருசெடியின்கீழ் கூடுகட்டிக்கொண்டிருக்கும்போது பெட்டை ஆண்பறவையைப்பார்த்து எங்கே முட்டை யிடலாமென்றுகேட்க ஆணிதுவேநல்லவிடமென்று சொல்ல பெண் இந்தக்கடற்கரையி லொருவேளை யபாயநேரிடுமென ஆண்சிட்டு சமுத்திரத்தில் என்னுடனே பகைத்துக்கொள்ளசாமார்த்தியமில்லையென உனக்குஞ் சமுத்திரத்திற்கும் வெகு தாரதம்மியமிருக்கின்றதே எவன் றன்வலியும் பிறன்வலியும் பார்க்கிறதில்லையோ அவன் விபத்தையடைவான் எவன்பார்க்கிறானோ அவன்சுகமடைவான மேலுந் தனக்கிதம்பண்ணுகிற மித்திரன் பேச்சைக்கேளாத ஆமை எப்படிக்கழியைவிட்டு மரணமடைந்ததோ அப்படியே மரணமடைவானென ஆண் அதெப்படிபெண்ணே சொல்லடியெனப் பெட்டைக்குருவி சொல்லுகிறது.

விகடசங்கடமென்னு மிரண்டன்னமும் கம்புக்கிரீவனென்னுமாமையும் சினேகமாயொருகுளத்தில் வாழ்ந்துகொண்டிருக்கையில் அன்னங்களே இப்போதிங்கேமழை பெய்யாமையாற் குளம்வற்றிப்போமாகையால் இனி வேறொருகுளத்திற்போய் சேர்வது யோக்கியமென்று நினைத்தது ஆனாலிதை நம்முடைய சினேகனுக்குஞ் சொல்லவேண்டு மென்றாலோசித்து அப்படியேயதற்குசொல்லும்போது கம்புக்கிரீவன் நீங்கள்செப்படையினாற்பறந்துபோவீர்கள்நான்வேறொரிடத்திற்கெப்படிவருவேனென விகடசங்கடர்கள் வார்த்தையின் நம்பிக்கைவைத்து ஸ்திரமாயிருப்பாயானால் உன்னையுங்கொண்டுபோகிறோம் கொண்டுபோகையில் வழியிலொன்றும் பேசாமலிருந்தாற்

போகக்கூடுமென்று சொல்லி யொருகழிகொண்டு வந்தாமையைப்பல்லினாலேபலமாய்க்கடித்துப்பிடித்துக்கொள்ளு விட்டுவிடாதே நாங்களிருவரு மிதையிருபுரத்தில் மூக்காற்கவ்விக்கொண்டு ஆகாசமார்க்கத்திற் போகிறோமென்று சொல்லி அந்த கொம்பையிரண்டும் பற்றிக்கொண்டெழும்பி பரந்துபோகையில் இதையொரு பட்டணத்துசனங்கள்பார்த்ததிசயித்து நகைத்தெல்லோருமிருக்கஆயிதென்னஇரண்டுபறவைக ளொருகழியைத் தூக்கிக்கொண்டுபோகின்றன வென்றிப்படி பேரிரைச்சலிட்டுபேசினார்கள் அதைக்கேட்டு கம்புக்கிரீவனிந்தவிரைச்ச லெங்கிருந்துண்டாகிறதென்று சொல்ல வதற்கு வாய்திறந்தவுடனே கழியினின்று விடுபட்டுப் பூமிமேல்விழுந்தது அப்போதங்கேயிருந்த புலாற்தின்பவர்களுடனே கொன்று தின்றார்கள் ஆகையாற் றனக்கிதம் பண்ணுகிறவர்கள் பேச்சை யசட்டை பண்ணலாகாது மேலும் யாதொருகாரிய நேரிடுவதற்குமுன்னே யாலோசிக்கிறவனும் வருகிறபோதே யாராய்கிறவனு மிவ்விருவருஞ் சுகமடைவார்க ளிதைவிட்டியாதொன்று வரத்தக்கதோ அது வரட்டுமென்று யார்சொல்லுகிறானோ அவன்வந்தபின்காப்போமென்னு மீனைப்போல் நாசமடைவான்என சேவல் அதெப்படியென பெட்டைசிட்டு சொல்லுகின்றது.

ஒருபெரியகுளத்தில்வருமுன்காப்போனென்றும் வருங்காற்காப்பவனென்றும் வந்தபின் காப்பவனென்றும் மூன்றுமீன்களநேகநாளாய்வாழ்ந்துக்கொண்டிருக்குநாளி லொருநாள் வலைக்காரர் வந்திதிலே தண்ணீர் கொஞ்சமாயிருக்கிறதாகையால் நாளைவந்திதிலிருக்கிறமீன்களை யெல்லாம் பிடிப்போமென்று பேசிக்கொண்டதை வருமுன்காப்பவன்கேட்டு தன் சிநேகரிடத்திற்போய் நாமிவ்விடம் விட்டுச் சீக்கிரமாகப் புறப்படவேண்டும் இனியிங்கே யொருநிமிஷநேரமும் இருக்கலாகாதென இதைக்கேட்டு வருங்காற் காப்பவன் சொல்லுகிறது|நமக்குவிபத்துவரும்போது பார்த்துக்கொள்ளுவோம் காரியம் நேரிடும்போது அதற்குத்தக்கதாகப் பத்தியுண்டாகுமெனப் பிறகுவந்தபின்காப்பவன் றனிடத்தை விட்டுவிடுகிறதுதான் மூர்க்கத்தனம் ஏனென்றால் எதுவரத்தக்கதோ அதுவரவேவரும் யாதொன்றும்வரத்தகாததோ அதைநாம் வருந்தியழைத்தாலும் வராது ஆதலால் நான் வரமாட்டேனென்று சொல்லி யந்தக்குளத்திலேயே யிருந்தது பிறகுவருமுன்காப்பவன் வேறோரிடத்திற்குப் போய்விட்டது மறுநாளுதயத்திற் செம்படவாவந்து மீன்களைபிடித்தார்கள் அப்

போததில் வருங்காற் காப்பவனகப்பட்டுச் செத்தார்போற் பாசாங்கு
பண்ணிக்கொண்டிருந்தது அதைப்பார்த்து இதுசெத்ததென்றெண்
ணிக்கொண்டு செம்படவனதைத்தரைமேற் போட்டுவைத்தானிதற்
குள்ளே யதுவவன் கண்ணுக்குத்தப்பி தண்ணீரிற்போ யொளித்துக்
கொண்டது பிறகு வந்தபினகாப்பவன் வலைக்குளகப்பட்டிப்பொதெ
ன்ன செய்யலாமென றங்குமிங்கு மோடுவதை செம்படவன் கண்
டுதடியாலடித்துக்கொன்றான் மற்றிரண்டுஞ் சுகமடைந்தன ஆகையா
லெதையுமாலோசித்துச் செய்யவேண்டுமென்று சொல்லி பிறகு புரு
ஷன் சொற்படி யங்கேதானே முட்டையிட்டது அப்போது சமுத்
திரம் தன்வல்வமையை அறியாமல் முட்டைகளை யடித்துக்கொண்
டுபோயிற்று கிட்டு அதைப்பார்த்து வெகுதுக்கமாய்ச் சேவலுடனே
சொல்லுகிறது சுவாமி தங்களுக்குப் பெரியசங்கடம் வந்தது ஏனெ
ன்றால் முட்டைகளை சமுத்திரங் கொண்டுபோயிற்று இப்போதென்
ன செய்யலாமெனசேவல் நீபயப்படாதே நான்முட்டையைக்கொண்
டுவருவேனென் றிராணியைப் பாரென்று சொல்லி எல்லாப் பறவைக
ளையுங் கூட்டமாய்க் கூட்டிக்கொண்டு கருடனைச்சரணமடைந்தது க
ருட னதைவிஷ்ணுவுக்கறிவித்தப்பறவை மிகவும் வருத்தப்படுகிறதா
கையா லிதன்முட்டைகளைக் கொடுப்பிக்கவேண்டுமென விஷ்ணு ச
முத்திரத்தைப் பார்த்திதன் முட்டைகளைச் சீக்கிரமாய்க் கொடுவெ
ன்று கட்டளையிட்டவுடனே சமுத்திரம் முட்டைகளைக்கொண்டுவ
ந்து கொடுத்தது ஆகையாற் சத்துருக்களுடைய பராக்கிரமமறியா
மற் பகைத்துக்கொள்ளலாகாது ஆனாலது வந்தசிங்கத்திற் ககங்கார
த்தினால் தெரியவில்லையென கேட்டு சஞ்சீவகன் தமனகனைப்பார்த்து
நல்லது அந்தச்சிங்கத்தின் சண்டைக்குறிப்பெப்படியிருக்குஞ் சொ
ல்லென தமனகன்எப்போதவன் காதுகளைவெறித்துக்கொண்டுவாலைத்
தூக்குவானோ வப்போது கொல்லநினைத்தானென் றறியவேண்டும் அ
க்காலத்திலப்படியே நீயும் அவனுக்குமுனனே யிருக்கவேண்டுஞ் சு
த்தவீரனாகியஉனக்குத்தெரியாதா எல்லாந்தெரிந்தவர்கட்குச்சொல்
வானேனெனச் சொல்லிவிட்டு தமனகன் மறுபடிகரடகன் என்னமா
ச்சுது சொல்லென தமனகன்காரியமுடிந்த திருவருடையசினேகத்தி
ன்வாயில்மண்விழுந்தது இப்போதுநான் சிங்கத்தின்கோபக்குறியிப்
படி யிருக்குமென்று சஞ்சீவனுக்குச் சொன்னபடியே செய்விக்கிறே
னென்று பிங்களனிடத்திற்போயப்படியேயதை செய்வித்தது பிறகு
சஞ்சீவகன்சிங்கமிருக்குமிடத்திற்கு வந்துபார்க்கும்போது முன்றன
க்குத்தமனகன்சொன்னபடியே யிருக்கக்கண்டு மிகவும்விசனமடைந்
தியாக்கிரமத்தினாலேயே பிராணனை விடவேண்டுமென்று நிச்சயித்

து யுத்தத்துக்காரம்பிக்கவே யிரண்டுக்கும் பெரியசண்டை விளைந்து கரடகனைப்பார்த்து தமனகா துஷ்டா உன்சேர்க்கையால். ராஜாவுக்குஞ் சினேகனுக்குஞ் சண்டை யுண்டாயிற்று ராசநீதியில் சாமபேததானதண்டமென்று நான்குபாயங்களிருக்கின்றன அவைகளிற்சாமமென்னு முபாய முக்கியமானது ஏனென்றால் அதனாற் காரியசித்தி யுண்டாயிருப்போம் மற்றவைகளா லுண்டாகாது பகையிருந்தாலுஞ் சமவுபாயத்தினாலேயேபோ மிப்படியிருக்கையில் நீராசாவைபொல்லாப்பில்விழுவித்தாய்ராசாக்களிற்சிலரீனர்களுடையபுத்தியைக்கேட்டுச் சங்கடமடைகிறார்கள் ஆகையாற் குணவந்தர்களுடையகூட்டுரவு ராசாக்களுக்கிருக்கவேண்டும் கபடியாயிருக்கிற.பிரதானி புத்திசாலியானாலும் அவனொருபோதும் ராசாவண்டையி லிருக்கலாகாது மற்றோர்தாங்களே சம்பத்தையடைய வேண்டுமென்றுநினைத்து ராசாவினிடத்தில் வேறொருவன் சேரலாகாதென றிச்சிக்கிரவனும் ராசாவுக்கு யோக்கியர்கள் ஏனென்றால் பலபெயர் சமர்த்தர்கள் ராசாவினிடத்திலிருந்தால் ராசா பிரகாசிப்பான் ஆசைக்காரனுந் துஷ்டனுமாகிய விவர்களுடைய கூட்டுரவால் ராசா பிரகாசிக்கமாட்டான் தங்களைவிட ராசாவிடத்தில் வேறொருவனிருக்கலாகாதென்று யாசிக்கிறானோ அவனைராசாவுக்குச்சத்துருவென்று நினைக்கவேண்டும் அப்படியே நீ யிந்ததீங்கு விளைவித்தாய் எசமானுடைய தலைகிடைத்தாற்சேவகர்கள் காலியாகாமல் மிகவுமடக்கமாயிருக்கவேண்டும் நீயதைவிட்டு விபரீதமாகநடக்கிறாய் பிதாவைப்போலிருப்பான் புத்திரனென்பதை நீபொய்யாக்கினா யிப்போதுனக்குநானென்சொல்வேன்கொக்கு குரங்குக்குபதேசம்பண்ணி எப்படியிறந்ததோ வப்படி யுன்னாலே மரணமடைவே னென்றெனக்குத் தோற்றுகிறதென்றிப்படி கரடகன்சொன்னதைக்கேட்டுத்தமனகனதெப்படிசொல்லெனக் கரடகன் சொல்லுகிறது.

ஒருநாள் குளிரால் வருத்தப்படுகிற குரங்குக்கூட்ட மின்னும்பூச்சிகளைப்பார்த்து இதுநெருப்பென்றுநினைத்துக் குளிர்காய்வதற்காக அதனருகேபோயிற்று அப்போதங்கே யொருமரத்தின் மேலிருந்த சமுகனென்னுமொருபறவை யிதைப்பார்த்து குரங்கினருகே வந்து யிதுமின்மினிப்பூச்சி நெருப்பென்று சொன்னவுடனே யந்த குரங்குக்கூட்டத்திலொன்று கோபமாய் யந்தப்பட்சியை பிடித்தெனக்கு நீ புத்திசொல்லுகிறவனாவென்று கல்லிலறைந்துக்கொன்றது ஆகையால் துஷ்டர்களுக்குஉபதேசம் பண்ணலாகாதென்று கரடகன்சொல்ல தமனகனொன்றும் பேசாமல் மௌனமாயிருந்து மனதில்

மிகவும் விசனப்பட்டு நானிந்தப் பாதகம் பண்ணினேனென்றுசொல்லமறுபடியுங்கரடகன் சொல்லுகிறது அடா தமனகா இப்படிக்கொத்தநடத்தையினால் துஷ்டபுத்தியைப்போல் நீயுநாசமடைவாயென அப்போது துஷ்டபுத்தி யெப்படிகேட்டான் சொல்லெனக்கரடகன் சொல்லத் தொடங்கினது.

துஷ்டபுத்தி சுபுத்தியென்று இரண்டு செட்டிப்பிள்ளைகள் பணஞ் சம்பாதிக்கிறதற்காகத் தேசாந்திரம் போனார்க ளவ்விடத்திற் சுபதிக்குப் பூமியிலொரு பணப்புதை யகப்பட்டது அதைச்சினேகத்தினாலே துஷ்டபுத்தி யுடனேசொல்லத் துஷ்டபுத்தியந்த திரவியத்தையிங்கேயே புதைத்துவிட்டு கொஞ்சம்பணமெடுத்துக்கொண்டுபோவோமென சுபத்திசினேகத்தினா லதற்குச் சம்மதித்துப் பிறகு அதிற்கொஞ்சம் பணமெடுத்துக்கொண்டு மற்றப்பணத்தை ஒருமரத்தடியிற் பள்ளந்தோண்டி அதில்புதைத்து வைத்துபின்பு வீட்டுக்குப்போய் பழையபடியே சினேகமாயிருக்கையி லொருநாள் துஷ்டபுத்தி தனியேபோயந்தப் பொருளையெல்லா மெடுத்துக்கொண்டு வீட்டுக்குவந்து விட்டான் பிறகுசிலநாள்கழித்து துஷ்ட்டபுத்தியை பார்த்து அந்தநம்முடைய திரவியத்தைக்கொண்டு வருவோமெனப்பின்பிருவரும்போ யந்தவிடத்திற் பார்க்குமளவி லங்கொன்று மில்லாமையால் துஷ்டபுத்தி மிகவும்வருத்தத்தோடு சுபுத்தியை பார்த்திங்கிருந்தபணத்தை நீயேகொண்டுபோய்மேலுங்கபடமாய்வருத்தப்படுகிறாயென்றுசொல்லி கலகப்பட்டிதை ராசாவுக்கறிவித்தால் பிறகிராசாநியாயாதிபதியையழைப்பித்து பஞ்சாயத்திற் றீர்க்கவேண்டுமெனக்கட்டளையிட ஐந்துநாளைக்குள்ளே தீர்த்துப் போடுகிறேனென்று ராசாவுக்கு கெடுவுவைத்துக்கொண்டு பஞ்சாயத்திற் காரம்பித்தானப்போது துஷ்டபுத்தி வீட்டிற்குப்போய் தன் தகப்பனுடனேசொல்லுகிறான் உன்னுடைய ஒரு பேச்சாலெனக்குப் பதினாயிரம் வராகன் கிடைக்குமென அப்போதுகிழவனெப்படி கிடைக்குஞ்சொல்லென துஷ்டபுத்திநீர் மரப்பொந்தி லிராத்திரிக்குப்போ யுட்காந்திருக்கவேண்டுமங்கே நியாயாதிபதி முதலானோர் வந்திங்கிருந்தபணத்தையார்கொண்டு போனார்களென்னும்போது நீர்சுபுத்திகொண்டுபோனானென்று லென்காரிய மாகுமென இதைக்கேட்டு பிதாசொல்லுகிறான் பொல்லாங்கு நேரிடுகிறகாரியத்தை பண்ணிச் சுகமடைய வேண்

டுமென் றிச்சிக்கிறது கொக்கைப்போல மூடத்தனமாயிருக்கிறதென துஷ்டபுத்தி யதெப்படியென பிதா சொல்லுகிறார்.

தான் பொரிக்கிற குஞ்சுகளையெல்லா மொரு பாம்பு தின்னப்பறிகொடுத்துக் கொண்டுவருகிற ஒருமூடகொக்கு அப்போது பொரித்த தன் குஞ்சுகளைக்காப்பாற்றுகிறதைக் குறித்தென் செய்யலாமென்று பெண்கொக்கோடுகூட ஏரிக்கரையி லுட்கார்ந்து ஆலோசித்துக் கொண்டிருக்கையில் அக்கொக்கின் சினேகிதனாகிய குளிரென்னும் பெயருடைய நண்டானது கொக்குகளைபார்த் தின்றைக்கேன் நீங்கள் வியாகூலமா யிருக்கிறீர்களென அவர்கள் தங்கள் விர்த்தாந்தமெல்லாஞ்சொல்லக் குளிரனதைக்கேட்டு ஆண்கொக்கைப் பார்த்து நல்லதுனக்குப் பாம்பைகொல்லுகிற வுபாயமொன்றுசொல்லுளறேன் ஏனென்றால் கீரிப்பிள்ளையின்வளைமுதற்கொண்டு பாம்பிருக்குமிடமட்டுமீன்களை யிறைத்துவைத்தாற் காரியசித்தியாகுமென்றது பிறகுகொக்கு அப்படியே செய்யக்கீரிபிள்ளைகள் வளையினின்றும்புறப்பட்டு மீன்களைத்தின்று கொண்டேபோய் பாம்பையுங்கடித்தெரிந்துவிட்டுக் கொக்கின்குஞ்சுகளையுஞ் சாப்பிட்டது ஆகையாலிப்படிப்பட்டவாலோசனை பண்ணலாகாதென்று துஷ்டபுத்தி பிதாசொன்னதைக்கேளாம லவனைவலுவிலிழுத்துக் கொண்டுவந்து மரப்பொந்திலுட்காரவைத்து விடியற்காலத்தில் நியாயாதிபதிமுதலாகிய பேரையுஞ்சுபுத்திமுதலானோரையு மவ்விடத்திற் கிட்டுக்கொண்டு சாட்சியிந்தமரத்தை கேளுங்களென்றானப்போதந்த பணமுழுதுஞ் சுபத்தியேகொண்டுபோனானென்றொரு சத்தம்பிறப்பட்டது அப்போது சுபத்திஇதென்ன மோசமாயிருக்கிறது இங்கேயொருபிராணியில்லாமற் றொனியேங்கேயிருந்து புறப்பட்டது இதுதெய்வீகமாயிருந்தால்மெய்யல்லவோ சொல்லவேண்டுமென் றிப்படித்தனக்குள்ளெண்ணமிட்டுக்கொண்டந்த மரத்தின்மேலேறி சோதிக்கையிலதில் ஒரு பொந்துகாணப்பட்டது உடனேயிங்கே கிருத்தியமிருக்குமென்றெண்ணி யங்கேநெருப்பைமூட்டிபற்றுவித்தான் பின்புஉள்ளேயிருந்த கிழவன்பாதிவேகிறமட்டும் பல்லைக்கடித்துக் கொண்டிருந்து பொறுக்கப்போகாம லலறிக்கொண்டு வெளியேவந்து விழுந்தான் அப்போதங்கிருந்தெல்லோரு மிதென்ன விதமென்ன வெனக்கேட்க கிழவன் பிள்ளை துஷ்டபுத்தி கபடத்தினால் என்னைப் பலகாரமாகக் கொண்டுவந்திங்கேவைத்தானென்று சொல்லியிறந்துபோனான் நியாயாதிபதி வாயிலோராசாவெல்லாமறிந்து கொண்டவனைக் கழுவிலேற்றினானென்று சொல்லிப் பின்னுங்காடகன் தமனகனைப்பார்த்துப்

பாம்பை வெகுநாள் வளர்த்தாலும் அதுஎப்படியும் வளர்த்தவனைக் கடிக்கும் ஆகையாலெனக்கு உன்னிடத்திற் பயந்தோன்றுகிறதுஇனிமேலுன்னிடத்திற் றேவதத்தனைப்போல் நடந்துகொள்ள வேண்டுமென்ன அதைக்கேட்டுத் தமனகன் தேவதத்தனெப்படி நடந்துக்கொண்டான் சொல்லெனக் கரடகன்சொல்லுகிறது.

ஒருபட்டணத்தில் தேவதத்தனென்னுமொரு சாவகாரி தன்றிரவியம் வீணாய்ப்போனதினால் மறுபடி திரவியமுஞ் சம்பாதிக்க நினைந்துதேசாந்திரம்போகப்புறப்படும்போது தன்வசத்திலிருந்த ஆயிரமிரும்புக் கம்பிகளை யவ்விடத்திலிருந்த தன்சிநேகனிடத்தில் வைத்துவிட்டுப்போனான் போனவிடத்திற் றிரவியம் சம்பாதித்ததைக் குறித்தநேகவுபாயம் பண்ணியும் பணமகப்படாமையால் மீண்டுவீட்டுக்குவந்து தன்னுடைய இரும்புக்கம்பிகளைக் கேட்டான் வைத்துக்கொண்ட சிநேகன் மிகுந்த துராசையினாலிரும்புக் கம்பிகளை எலிகடித்துவிட்டனவென்றான் இவனிந்த பூர்வத்தைக்கேட்டு நல்லதிருக்கட்டுமென்றுசொல்லி வீட்டுக்குபோனான் பிறகொருநாள் சிநேகிதன் பிள்ளையை விளையாடுகிறதற்காக அவனிடத்திலிருந்தெடுத்துக் கொண்டுபோய் மற்றொரு வீட்டிலொளித்துவைத்துபின்புசிநேகிதனிடத்தில் வந்துட்கார்ந்தான் அவனிடத்திலிருந்த வென்பிள்ளை எங்கேயென சாவகாரி உன்பிள்ளையைபறவை தூக்கிக்கொண்டுபோயிற்றுஎன்றான் இதையவன்கேட்டு மிகவுங்கிலேசப்பட்டு இவனையிழுத்துக்கொண்டு ஊரதிகாரியண்டைபோய் இந்த துஷ்டனென்பிள்ளையைக் கொண்டுபோய் ஒளித்துவைத்துவிட்டுப் பிள்ளையைப்பட்சியெடுத்துக் கொண்டு போயிற்றென்கிறான் என்பிள்ளையை எனக்குக் கொடுப்பிக்கவேண்டுமென அதிகாரி யிதைக்கேட்டுச் சாவகாரியை அழைத்து இவன்பிள்ளை யெங்கேயிருக்கிறது சொல்லென அவன் இவன்பிள்ளையைப் பட்சிக்கொண்டு போயிற்றென அதிகாரி யிதைக்கேட்டுக் குலுங்கக்குலுங்கநகைத்து இந்த அசம்பவம் இதுவரைக்கும் உலகத்திலில்லை அப்படியிருக்க நீஎப்படிச் சொல்லுகிறாயென அப்போது அவன் இதோராச்சரியமா எப்படி யிரும்புக்கம்பிகளைஎலிகள் தின்றுவிட்டனவோ அப்படியேயிதுவும் சம்பவித்தது ஆண்டவனேயென இதைக்கேட்டு நியாயாதிபதி முன்னடந்தவைகளைவிசாரித்து அறிந்துகொண்டு அவனுடைய இரும்புக்கம்பிகளை நீ கொண்டுவந்துகொடுத்தால் அவன்உன்பிள்ளையைக் கொண்டுவந்து கொடுப்பான்என்றவுடனே அவ்விருவரும் அப்படிசெய்து தங்கள் வீட்டுக்குப் போனார்களென்று இப்படிப்பட்ட கதைகளைச் சொல்

லிப்பின்னுமந்த தமனகனுக்கும் கரடகன்சொன்ன பொருளைத்தெ ரிந்து கொள்ளாதவன் கல்லுக்குச் சமானம் அவனுக்கு உபதேசித் துப்பலனில்லை யென்றுசொல்லி கரடகத்தமனக நரிகள் இரண்டும் பிங்களனிடத்திற்குப் போம்போது சிங்கம் சஞ்சீவகனோடு கூடச்ச ண்டைபண்ணி அதைக்கொன்று விட்டுவிசனமாய் உட்கார்ந்திருந்த துஇதைக்கண்டு தமனகன் ராசாவைப்பார்த்துச் சுவாமிதங்கள் சத் துருவைக்கொன்றுதுக்கப்படுகிறீர்கள் இதுநியாயமல்லவே சத்துரு வைக் கொல்லவேண்டுமென்று சாஸ்திரமிருக்கிறது பிதாவானாலும் பந்துவானாலும் புத்திரரானாலும் மித்திரரானாலும் இவர்களில்யார்த ன்னைக்கொல்லப் பிரவர்த்திக்கிறானோ அவனைராசாகொல்லவேண்டும் சுதந்தரமாயிருக்கிற பெண்சாதியும் துஷ்டசினேகிதனும் விபரீதசே வகனும் அசாக்கிரதைபான மந்திரியும் நன்றியறியாதவனும் இருக் கலாகாது மேலும் மெய்பொய் கடுமை மேன்மை கொலைதயை உதா ரத்துவம் உலோபத்துவம்பலவழியாகத் திரவியஞ்சம்பாதித்தல்வெ குபெயருடைய சிநேகிதரும் இப்படிப்பட்ட பலகுணங்கள்ராசாவு க்கிருக்கவேண்டுமென்று ராசநீதியி லிருக்கின்றன அப்படியேதாங் கள் இதுசெய்தீர்களென்று சொல்லித் தமனகன் சிங்கத்தைச்சந் தோஷிப்பித்தது பிறகு சிங்கம் அக்காட்டில் முன்போலத்தன்னி ராச்சியத்தை அனுபவித்துக்கொண்டு சுகமாயிருந்தது.

முதலாவது மித்திரபேதம் அல்லது நட்புப்பிரிப்பு

முற்றிற்று.

---

௨

# சுகிர்தலாபதந்திரம்.

## இரண்டாவது.

### அல்லது நட்புப்பேறு.

புத்திசாலிகளா யிருக்கிற சிநேகிதர்கள் திரவிய மில்லாதிருந் தாலும் வேறே சாதனங்க ளில்லாவிட்டாலும் காகமும், எலியும் ஆ மையும், மானும்நட்பினுலொன்றையொன்றுகாப்பாற்றினாற்போலஒ ருவர்க்கொருவ ருதவுவார்களெனச் சோமசன்மாசொல்ல ராசகுமா ரர்கள் அதெப்படியெனச் சொல்லத்தொடங்கினார்கள்.

கோவிரிக்கரையிலிருக்கிற ஒருபெரிய வன்னிமரத்தில் லகுபதனென்னுங் காக மிருந்துக்கொண்டிருக்கையி லொருநாள் விடியற்காலத்திலங்கே எமனைப்போல் மிகவும்பயங்கரமா யொருவேடன் வந்தான் லகுபதனவனைப்பார்த்துப் பயப்பட் டிந்தத்துராத்மா வென்ன பண்ணுவானோ தெரியவில்லை ஆகையாலிதைச் சோதிக்கவேண்டு மென்றிரைதேடுகிற யெத்தனத்தை விட்டிருக்க இதற்குள்ளே யவ்வேடன் வலையைவிரித்து பலவகைபட்ட தானியத்தைத் தெளித்தங்கேயோர்செடிமறைவிற் பதிங்கிக்கொண்டிருந்தான் தன்பரிவாரத்தோடந்த மரத்தில்வந்திறங்கின சித்திரக்ரீவ னென்னும் புறா வங்கே யிறைந்திருக்குந் தானியத்தைப் பார்த்துச் தன்பரிவாரப் புறாக்களுடனே சொல்லுகிறது இந்தநிர்மானுஷியமான காட்டிற்றெளிய மெப்படிவரும் யாராலுங்கொண்டுவந்து போட்டிருக்கவேண்டு மிதுநமக்குத்தெரிந்தாலல்லாமலிதைப் பட்சிக்கலாகாது ஏனென்றால் ஒருபிராமணன் பொன்காப்புக் காசைப்பட்டுப் புலியினாலெப்படி மரணமடைந்தானோ வப்படிக்கிதுவேதோ விபரீதமாகத்தோற்றுகிறதெனப் புறாக்களதைக் கேட்டதெப்படி மாகாராசாவேயெனச் சித்திரிகிரீவன் சொல்லுகிறது.

நான்தென்காட்டில் மேய்ந்துக் கொண்டிருக்கையில் பார்த்தேன் அதைக்கேளுங்கள் ஒருகிழப்புலி பலயீனத்தால் ஆகாரம்சம்பாதிக்கக்கூடாமல் ஓர்ஏரிகரையில் நீராடியிருக்கையில் தற்பைவைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் ஒருபிராமணன் அந்தவழியில்வந்தான் புலி அவனைப்பார்த்து ஓ பிராமணா இந்த பொற்காப்புத்தருகிறேன்வாவென இதைக்கேட்டு அந்தபிராமணன் அப்புலியைப்பார்த்து இந்தகாப்பு நமக்கு வலியக்கிடைக்கிறது மரணத்துக்கு இடமாகும் புலியினருகில் போகலாகாது ஆகையால் இந்தக் காப்பில் ஆசைவைக்கலாகாது நாம்போவோமானால் மரணத்துக்கு நாலண்டையும் வழியாகையால் இதைக்குறித்துப் பிரயத்தினம் அவசியம்பண்ணவேண்டுமென்று தன் துராசைக்கேற்பத் தனக்குள்ளோ ஆலோசித்து நிச்சயித்துக்கொண்டு புலியைபார்த்து! ஐயா புலியாரே காப்புஎங்கேயிருக்கிறதென புலிகையில் வைத்துக்கொண்டு இதோபாரும் பிராமணோத்தமாவெனக் காண்பித்தது பிராமணன் உன்னிடத்தில் எனக்குளப்படி நம்பிக்கையென புலி நான்வைகரையில் மூழ்கிநித்தியஸ்தானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன் நகமும் பல்லும் போன கிழவனாயிருக்கிறேன் இப்போது என்னிடத்தில் நம்பிக்கையில்லையா வேட்டல் ஓதல் கொடுத்தல் தவம்சத்தியம் உறுதிபொறுமை ஆசையுண்மை என்னும் இவ்வெட்டுத்தருமங்களையும் நான் அறிந்திருக்கிறதினால் இந்த அபூர்வவஸ்துவை ஆற்காகிலுங்கொடுக்கஇச்சிக்கிறேன்

இதனால் என்னிடத்தில் நற்குணம் இருக்கிறதென்றும் எவ்வளவானு லும் துற்குணம் இருக்கிறதென்றும் அறியவில்லையாவென அப்போ து பிராமணன் இதுவும்மெய்தான் ஆனாலும் புலி மனிதரை அடித்து த்தின்கிறது என்றுமிகவும் லோகாபவச மிருக்கிறது எனப்புலிசொ ல்லுகிறது நான்தருமசாஸ்திரம் அரிந்திருக்கிறேன் தன்பிராமணன் தனக்கு எப்படி தித்திப்போ அப்படி எல்லாருக்கும் இருக்கும்என்ற றிந்து சாதுகள் பிராணிகளிடத்தில் தயையாயிருக்கிறார்கள் தன்னைப் போலச் சுகதுக்கங்களைப் பிறரிடத்தில் நினைக்கிறார்கள் நீமிகவும் தரி த்திரன் ஆகையாலுனக்குக் கொடுக்க யத்தனிக்கிறேன் சாஸ்திரம் இப்படியேயிருக்கிறது எப்படியும் ஏழைக்கேகொடுக்கவேண்டும் செ ல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது மருந்துநோயாளிக்கு ,எப்படி குணங்கொடுக்குமோ அப்படி நோயில்லாதவனுக்கு ஆகுமா நீ இந்த ஏறியிலேயே முழிகிவந்து காப்பைவாங்கிக்கொண்டு வீட்டுக்குப்போ வென்றவுடனேபிராமணன் ஐயோபிராமணருக்குப்பின்புத்திஆகையா ல் புலியின் பேச்சைநம்பி ஸ்நானம்பண்ணுகிறதற்கு ஏரியில் இரங்கி னவுடனே உலையில்புகைந்து காலைப்பிடுங்கிக்கொண்டுவரக் கூடாமல், திகைத்தான் புலி அதைப்பார்த்து பிராமணா பயப்படாதே நானுன்னை ச் சேற்றில் நின்றும் எடுக்கிறேன் சற்று இருமென்றுசொல்லிக்கொ ண்டு மெல்லெனப்போய் அவனைப்பிடித்துக்கொண்டது அப்போது பிராமணன் எண்ணமிடுகிறான் துஷ்டர்கள் வேதவேதாத்யயனம் ப ண்ணிருந்தாலும்தருமசாஸ்திரம் அறிந்திருந்தாலும் அவர்கள் வார்த் தையில் நம்பிக்கைவைக்கலாகாது அவன்சுபாவம் எப்படியோ அது எப்போதும்போகாது இப்படி யிருக்கையில் நம்முடையசாதிக்கு இ யல்பாயிருக்கிற பேராசையினால் இந்ததுஷ்டனிடத்தில் விசுவாசம் வைத்து மோசம்போனேன் என்று இப்படி பச்சாதபப்பட்டுக் கொ ண்டிருக்கையில் அந்தபுலிகொன்றுதின்றது ஆகையால்மிகவும் ஆ லோசனைபண்ணி ஏதொன்றுசெய்யதக்கதோ அதைச்செய்யவேண் டும் அப்படிச்செய்தால் யாதொருதீங்கும் நேரிடாதென்று இப்படிசி த்திரக்கிரிவன் சொன்ன வார்த்தையைக்கேட்டு ஒருபுறா கர்வத்தோ டு இப்படிஆலோசித்தால் ஒரிரையும் நமக்ககப்படாது மேலும் வெட் கப்படுகிறவன் பொறாமை யுள்ளவன் சந்தோஷப்படாதவன் குரோ தமுள்ளவன் நீராச் சந்தேகமுள்ளவன் பிறர்பொருளாற் சீவிக்கிர வன் இவ்வாறுபெருந்துக்கத்தையே அனுபவிப்பார்களென இதைகே ட்கப் புறாக்களெல்லாம் தானியத்தைத்தின்ன நிலத்திலிறங்கிவலையில கப்பட்டனபுறா அரச னதைப்பார்த்து எல்லாரும் என்சொல்லைக்கே

ளாமற்போனார்கள் இப்போது நான் ஒண்டியாயிருந்து பலனில்லையென்றுசொல்லி அதுவும் வலையில்சிக்கிக் கொண்டதைப் பார்த்து அரசனிடத்திற்கு வரத் தொடங்கினான் அதை புறாக்கள்கண்டு சித்திரக்கிரீவனைப்பார்த்து நாங்கள் நீதன்புத்தியைக்கேட்டு உன்னை அவமானம் பண்ணினோம் அதன்பலன் பிராப்தியாயிற்றென அப்போது சித்திரக்கிரீவன் இப்போது இதைச்சொல்லிப் பயனென்ன இதற்கோர் உபாயமிருக்கிறது எல்லோரும் வலையோடுகூட ஒருமிக்கப்பறந்து வேறிடத்திற்குப் போகவேண்டும் அப்படிசெய்தால்தான் பிராணனைக் காப்பாற்றலாமென இதைக் கேட்டவுடனே எல்லாப்பறவைகளும் வலையோடு கூடச் சடிதியில் பறந்துபோயின அதைவேடன் தூரத்திலிருந்து பார்த்து ஆச்சரியப்பட்டு இவைகள் ஒரேமனதாய் வலையைக் கொண்டுபோயின ஆயினும் இவைகளில் ஒன்றுக்கொன்று சண்டைநேரிடும் அப்போது என்கையில் அகப்படுமென் நினைத்துக்கொண்டு அவைகளின் பின்னே ஓடும்போது புறாக்கள் கண்ணுக்கு மறைந்துபோய் விட்டன பிறகு அவன் வருத்தப்பட்டுத் திரும்பி வந்துவிட்டான்.

இவ்வாச்சரியமெல்லாம் பார்த்திருந்த லகுபதனன் என்னும்காகம் அந்தப் புறாக்களின் பின்னே போயிற்று சுபோதராசா தன்கூட்டத்தைப் பார்த்துக் கண்டகிரந்தி தீரத்திலிருக்கும் சித்திரவனத்தில் என் சினேகிதனான இரணியன் என்னும் ஓர்எலி அரசன் இருக்கிறான் அவன் பல்லினாலே நம்முடைய வலையை அறுப்பான் அங்கே நடவுங்களென் இதைக்கேட்டபடியே எலி அரசன் வளையண்டையிறங்கின அப்போது ஏதாவது ஆபத்துநேரிடுமென்பதைக் குறித்துக் தன்வளைக்கு நூறுவழி செய்துக்கொண்டு உள்ளேயிருந்த எலிஅரண் புறாக்கள் இறங்கின சப்தத்தைக் கேட்டு பயந்து அடங்கிருக்கையில் சித்திரகிரீவ சிநேகித இரணியகனே எங்களோடே ஏன்பேசவில்லை என இதைத்தன் சினேகனுடைய தீங்குரலென் றறிந்து சந்தோஷத்தோடு கூடச் சீக்கிரமாக வளையில் நின்றும் வந்து நான் புண்ணியவானானகையால் சித்திரக்கிரீவன் என்னும்மித்திரன் என் வீட்டுக்கு வந்தன இவ்வுலகததில் மனமொத்த மித்திரனோடு சம்பாஷிக்கிறதிலும் வேறே ஆனந்தம் ஏதென்று உபசாரம் சொல்லிப் பிறகு அதனுடைய அவஸ்த்தைப் பார்த்து மிகவும் துக்கித்து மித்திரா நீயெல்லாரைக்காட்டிலும் சமர்த்தனாமே உனக்கு இப்படிபட்ட காரிய எப்படிநேரிட்டது என புறா எக்காலத்தில் எதுநடக்குமோ அது நடக்கும் விதி வலிது அதன்முன் யாருடைய வுபாயநடக்கும் கடல் பெருகிமேவிட்டால் அதற்குக் கரையேதென இரணியன் இந்தப் பேச்சு மெய்யென்று நாழிகை வழிதூரத்திலிருந்து வஸ்துக்களைத் தெரிந்துக்கொண்டு போகிற நீயின்றைக்கு வேடன்வலையில்பாராமல்

சிக்கிக்கொண்டையே பார் சந்திரசூரியர்களுக்கும் ராகுகேதுகள் பீ டைவருதலும் யானையும் பறவையும் பாம்புக் கட்டுதலும் புத்திசாலி களுக்கு வறுமைவருதலும் தெய்வத்தின் மகிமையே அல்லாமல் வே றல்லவென்று சொல்லிச் சித்திரக்கிரீவன் கட்டுண்டு இருக்கிற வலைக் கயிறை யறுக்கத் தொடங்கிற்று அப்போது சித்திரக்கிரீவன் மித்தி ராமுன்னே என்பரிவாரத்தினுடைய கயிற்றையறு பிறகு என்பாச த்தைத் துணி என கேட்டு எலியென்பது மிகவுமெலிவானது அத ற்குப் பலமும் கொஞ்சம் மத்தனை பெயருடைய பந்தனைகள் எனக்கு எப்படி அறுபடும் உன் தலையை அறுத்துப்பின் என் சாமார்த்தியத் துக்குத் தக்கதாக அவனுடையதலையும் அறுப்பேனெனச் சித்திரக்கி ரீவன் நல்லது முன்னேயிவர்களுடைய சாபத்தை அறுமென இர ணியகன் தன்னைக்காப்பாற்றிக்கொண்டு தன்பரிவாரங்களைக் காப்பாற் றவேண்டும் அறம் பொருள் இன்பம்வீடாகிய இவைகளுக்குப்பிரா ணன முக்கிய காரணமாகையால் அதைக் காப்பாறினால் எல்லாவற் றையுங் காப்பாற்றினாற்போல் ஆகிறது எனச் சித்திரக்கிரீவன் இந்த நீதிசரிதான் ஆயினும் இப்படிப்பட்ட வேளையில் நின்றும் பரிபால னம் பண்ணுகிறதற்கல்லவோ என்னையிவர்கள் ராசாவாக நினைக்கி றார்கள் ஆகையால் என்பிராணனிடத்தில் இச்சையைவிட்டு இவர்க ளைப்பிழைப்பி என அதைக்கேட்டு எலி நீபாமசாது அடுத்தவர்களை ஆ தறிக்கிறவனாயிருக்கிறாய் எசமானனிடத்தில் விசுவாசமிருக்கிற சே வகனும் சேவகனிடத்தில பிரீதியாயிருக்கிற எசமானும் சுகமடைவா ர்கள் என்று சொல்லி எல்லாவற்றின் பாசங்களையும் அறுத்துச் சித் திரக்கிரீவனுடைய கட்டையும் சோதித்தது ஒன்றுக் கொன்று த ழுவிக்கொண்டு பிரியவார்த்தைகள் சொல்லின சித்திரக்கிரீவன் பரி வாரத்தோடு கூடத் தன்னிடத்திற்குப் போன லகுபதன் என்னும் காகம் இவையெல்லாம் பார்த்து ஆச்சரியப்பட்டு இரண்ணியனைநோ க்கி நீபாக்கியவானா இருக்கிறாய் ஆகையால் நானும் உன்சினேகத்தை விரும்புகிறேன்நீதயைசெய்து எனக்குச் சிநேகனாகவேண்டுமென அ ப்போது இரணியகன் நீயாரெனக் காகம் நான் லகுபதனன் என்கிற காக்கையென அதைக்கேட்டு எலி உனக்கு எனக்கும் வெகுதூரம் உலகத்தில் சமானஸ்தர்களுக்கே சினேகமுண்டாகிறது நான் உனக் கிரை நீஎன்னை இன்கிறவன் இப்படியிருக்கையில் இதெப்படியாகும் ஆபத்துக்கே முகாந்தரமாம் நரிசினேகத்தினால் ஒருமான் வலையிலக கப்பட்டதுபோல் உன்னால் எனக்கு பொல்லாங்கு நேரிடும்யென ல குபதனன் கேட்டு மான் எப்படிவலையில் சிக்கிக்கொண்டதென் எலி சொல்லத் தொடங்கிற்று.

மகததேசத்தில் சண்பகவனத்தில் மானும்காகமும் ஒன்றுக்கொன்று நட்பாயிருந்தன அப்படியிருக்கையில் அந்தமான் மனதின்படி புல்முதலானவைகளைமேய்ந்து கொழுத்திருக்கிறதை ஒருநரி பார்த்துத் தனக்குள்ளே ஆலோசித்து இவன்நமக்கு அசாத்தியனாய் இருக்கிறான் ஆகையால்இவனை வஞ்சனையால் கொல்லவேண்டுமென்றுஇப்படிநிச்சயித்து அதன் சமீபத்தில்போய்ச் சிநேகிதா சுகமாவென அதைக்கேட்டமான் நீயாரெனநரிநான் க்ஷுத்திரபுத்தியென்கிற நரிஇந்தக்காட்டில் ஆருமற்றபாவியாய் ஒருவனாகத்திரிந்துகொண்டிருந்தேன்இன்றைக்குஉன்னைப்பார்த்து மிகுந்தசந்தோஷத்தையடைந்தேன் இப்போது உனக்குவேலைசெய்துக்கொண்டு உன்னிடத்தில்இருக்க இச்சிக்கிறேனென்ன இதைக்கேட்டு மான்நல்லதென்றுபொழுதுபோனவுடனே இரண்டுஞ்சண்பகமரத்தின் கீழேவந்தன அம்மரத்தின்மேல் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற மனிதன் சிநேகிதனாகிய புத்திஎன்னும் காகம்இவ்விரண்டையும்பார்த்துமானைஓமித்திரா உனதண்டையில்யிருக்கிறவன்யாரென மான் இந்தச்சம்புகன் என்னுடன்சிநேகிக்க விரும்புகிறானென அப்போது காகம் மித்திரனே சடிதில்வந்த வழக்கமில்லாதவனை நம்பலாகாது ஒருவன் குலமும் நடத்தையும் தெரியாமல் இவனுக்கு இடங்கொடுத்தால் ஒருபூனைக்குச்சரற்கவன்என்னும்கழுகு இடங்கொடுத்து இது இறந்தாற்போல்நேரிடுமென அதைக்கேட்டுமான் சாற்கவன் எப்படிச்செய்தான் யெனக் காகம் சொல்லுகிறது.

பாகிரதிதீரத்தில் திரிகூடம்என்னும் மலையில் ஒருமுதிய அத்திமரத்தின்பொந்தில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற நகமுங் கண்ணும் இல்லாதசாற்கவன் என்னும் ஒருகிழக்கழுகானது மற்றைப் பட்சிகள் தன்னிடத்தில் இரக்கம் வைத்துத் தங்கள் ஆகாரத்தில் கொஞ்சம்கொஞ்சம் நெருக்கிக்கொடுக்கத் தின்றுகொண்டு ஜீவித்திருக்கையில்ஒருநாள் நெடுஞ்செவியன்என்னும் பூனைபறவைகளுடையகுஞ்சுகளைத்தின்னவேண்டி அந்தமரத்தின்கீழேவர அதைக்குஞ்சுகள் பார்த்துப்பயந்து பெருங்கூச்சலிட்டன கழுகுகேட்டு நீங்களேன் பயப்படுகிறீர்கள் இங்கே யார்வந்தானென இதற்குள்ளே பூனைசாற்கவனைப்பார்த்து நானென்செய்தேன் எனப்பயப்பட்டு உடனேமனதில் தைரியம்பண்ணிக்கொண்டு இந்தச்சத்துருவை தப்பித்துக்கொண்டு ஓடுகிறதற்கு நமக்குச் சக்தியில்லை ஆகையால் இவன்சமீபத்தில்போகவேண்டும் பின்னர்எதுவுண்டாகுமோ அதுவுண்டாகட்டுமென்று இப்படி நிச்சயித்து அந்தக்கழுகின் கிட்டப்போய் சமர்த்தனேஉனக்குவந்தனம் பண்ணுகிறேனென கழுகுஅதைக்கேட்டு நீயாரென அப்போதுபூனை நெடுஞ்செவியனென்னும் பூனையெனபின்பு சாற்கவன்

நீசீக்கிரமா யிவ்விடம்விட்டு ஓடிப்போ யில்லாவிட்டால் சாவாயென பூனைநான்என் விர்த்தாந்தத்தைச் சொல்லுகிறேன் அதைக்கேள் பிறருகொல்லத்தக்கதானால் கொல்லு சாதிபேதத்தினாலேயே பிராணிகளைக்கொல்லுவதாவது பூசிப்பதாவது யோக்கியமல்ல ஆதலா லவனவன்நடக்கையைபார்த்து எதுசெய்யத்தக்கதோ அதுசெய்யவேண்டுமெனக்கழுகு. இதைக்கேட்டுப் பூனையைப்பார்த்து நீயேன் வந்தாய் சொல்லெனப் பூனை நான்கங்காதீரத்தில் நித்திய ஸ்தானம் பண்ணிச் சந்திராயண முதலாகிய விரதங்கள் ஆசரித்துக்கொண்டிருக்கிறேன் நீமிகவும் தருமவானாயிருக்கிறாயென்று பக்ஷிகளால் எப்போதுங் கேள்விப்படுகிறதினாலும்வயதில்முதிர்ந்த வித்வானிடத்தில் தருமங்கேட்கவேண்டுமென்று சாஸ்திரம் இருக்கிறதினாலும் நான் உன்னிடத்திற்குவந்தேன் நீதர்மத்தைவிட்டு என்னைக் கொல்லத் துணிந்தாய் இப்படி யில்லறத்தாருடைய ஆசாரமெங்கும் பார்த்ததில் சத்துருவும் தன்வீட்டுக்குவந்தால் சாதுக்கள் அவனுக்குச் சன்மானம்பண்ணுவார்கள் தன்னைவெட்டுகிறவனுக்கு நிழல் கொடுக்கவில்லையாசாதுக்கள் தங்கள்வீட்டுக்கு யெவன் வந்தாலும் பூசிக்கிறார்கள்குரைச்சலொன்றும் பண்ணுகிறதில்லை அதிதி யாருடைவீட்டுக்குவந்து முகம்வாடிப்போகிறானோ அவன் தன்பாவத்தை அவ்வீட்டு எசமானனுக்குக்கொடுத்து அவன்புண்ணியத்தைக் கைக்கொண்டுபோகிறான் ஆகையால் எல்லாரிடத்திலுந் தயை செய்கிறார்கள் சந்திரன் சண்டாளன் வீட்டிலும் பிரகாசிக்கிறானென இதைக்கேட்டுக்கழுகு பூனையிறைச்சிகளைத்தின்றது மேலும் கொலைசெய்கிறதென்று நினைத்துஇப்படி நான்சொன்னேனென அதைக்கேட்டுநெடுஞ்செவியன் பூமியைத்தொட்டுச் சிவசிவாவென்று உச்சரித்துக் காதின்மேற்கையைவைத்து நான் தருமசாஸ்திரங்கள்கேட்டு மிகுந்தவைராக்கியமடைந்து பொல்லாத கருமங்களையெல்லாம் விட்டுவிட்டேன் அநேகசாஸ்திரங்களிற் கொலைசெய்வதுபோல வேறொருபாதகமில்லையென்றுசொல்லியிருக்கின்றது எவர்கள் மற்றொருவனைக் கொன்றுதங்களுக்குச் சுகத்தைவிரும்புகிறார்களோ அவர்கள் நரகத்தை யடைகிறார்கள் ஆகையால்கொலைசெய்யாமலிருப்பதுபோல வேறொருதருமமில்லையென்று நினைத்துக்காட்டிலிருந்துகொண்டுகாய்கனிகிழங்குகளைச்சாப்பிடுகிறவர்கள் பாதகம்எப்படி பண்ணுவார்கள் என்று சொல்லிக் கழுகுக்கு நம்பிக்கைவரப்பண்ணி அதன் வீட்டில்இருந்தது பிறகு அந்த ருத்திராக்ஷப்பூனை பட்சிகளின் குஞ்சுகளை நாள்தோறும் அங்கேகொண்டுவந்து தின்றுகொண்டிருக்கத் தலைப்பட்டது அப்போது குஞ்சிழந்தபரவைகள் எல்லாம் கிலேசப்பட்டுஒன்றாய்க்கூடித்தங்கள் குஞ்சுகளைச் சோதிக்கத்தொடங்கின பூனையிதையறிந்து அவ்வி

டம்விட்டு ஓடிப்போயிற்று அந்தப்பட்சிகள் அங்கே பார்த்துக்கொண்டே. கழுகின் பொந்தண்டை வந்துபார்க்கையில் அக்குஞ்சுகளுடைய எலும்புகளும் சிறகுகளும் விழுந்துகிடக்கக்கண்டு நம்முடைய குஞ்சுகளையிந்தத் துரோகிக்கழுகே பக்ஷித்ததென்று நிச்சயித்து அந்தக் கழுகைக் கொத்திக்கொன்றன ஆகையால் ஒருவனுடைய குணம்தெரியாமல் அவனுக்கு இடங்கொடுக்கலகாதென அப்போதுநரியொருவன்சுபாவம் சினேகிக்கிறதற்கு முன்னே தெரியுமா நல்லோர்களுக்குச் சுபாவத்தினாலே காரியம் இல்லை அவர்களுடைய சினேகம் கண்டமாத்திரத்தினாலே ஆகிற்றென மான் அதைக்கேட்டுக் காகத்தைப் பார்த்து எப்படியெனக்கு மித்திரனோ அப்படியேயிவனு மிருக்கட்டும் நீஒன்றுக்கும் தடைசொல்லாதே என்றுசொல்லி நரியைத்தன்னிடத்தில் வைத்துக்கொண்டது பிறகு மூன்றும் தங்கள்மார்க்கத்தின்படி வயற்றைநிறப்பிக்கொண்டது ராத்திரிக்கு அந்த யிடத்தில்வந்து கொண்டிருந்தன இப்படி இருக்கையில் ஒருநாள் நரி மானைப்பார்த்து மித்திரா இந்தக்காட்டில் இவ்வளவென்று நேர்த்தியானபயிர் இருக்கிறதை யுனக்கு காண்பிக்கிறேன் என்றுசொல்லி அதையிட்டுக்கொண்டுபோய் காட்டிற்று அன்று முதலாய் அந்த மான் போய்த்தினமும் பயிரைமேய்ந்துக்கொண்டு இருக்கையில் அதைக் கொல்லைக்காரன்பார்த்து அங்கேவலைகட்டினவன் பின்பு மான் அங்கேவழக்கப்படி மேயப்போய் அதிற் சிக்கிக்கொண்டது இப்போது என்னை மித்திரனைத்தவிர யார்விடுவிப்பான் என்றுமனதில் எண்ணிக்கொண்டிருக்கையில் அங்கேநரிவந்து என்னுடைய மனோரதம் நிறைவேற்றிற்று இப்போதுநான் இதன்எலும்பையும் மாமிசத்தையும் நிரம்பதின்னுவேன்என்று வாயூரமனதில் எண்ணிக்கொண்டு சும்மாயிருந்தது அதைக்கண்டு மான்மித்திராவென்சும்மாயிருக்கிறாய் என்னுடையவலையைச் சீக்கிரமா யறுத்து என்னை விடுவிடு சங்கட காலத்தில் சினேகிதார்கள் உடையிழந்தவன்போல் உதவுகிறார்கள் எனச் சம்புகன்விரதத்தினம் ஆகையால் நான் இந்தத் தோல்வலையை தீண்டமாட்டேன் நாளைக்கென்ன சொன்னாலும்கேட்பேன் சினேகிதனுக்காக நான்பிராணனை விடத்தக்கவனென்று சொல்லி அதன்கண்ணுக்குத் தப்பித்துக்கொண்டு அங்கே ஓரண்டை ஒளித்துக்கொண்டிருந்தது காகம் இராத்திரிக்கு மான்வரவில்லை என்று அதைத் தேடும்பொருட்டு இங்குமங்குந்திரிந்துக்கொண்டு அங்கேவருகையில் அந்தமானின் அவஸ்தையைப் பார்த்துச் சினேகிதா உனக்கிந்த அவஸ்தை யிப்படியேன் வந்ததென மான் இது உன் வார்த்தையைக் கேளாமையால் வந்த பலனென காகம் உன் கூட்டாளியான சம்புகன் எங்கேபோனானென மான் என்னுடைய இறைச்சியைத் தின்கிறதற்காக இங்கேதானே ஓ

ளித்துக்கொண் டிருப்பானென அதைக்கேட்டு காகம் தனக்கிதம் ப
ண்ணுகிற மித்திரன் பேச்சைக்கேளாதவனுக்கு விபத்துச்சீக்கிரமாக
வரும் பின்னும் அவன்சத்துருக்குச் சந்தோஷம் வருகிறதெனச்
சொல்லிக்கொண் டிருக்கையில் கொல்லைக்காரன் கையில் ஒருதடி
யை எடுத்துக்கொண்டுவர அவனைப்பார்த்து காகம் மானுக்குமித்தி
ரா நீயிப்போது மூச்சையடைக்கிக்கொண்டுவந்தால் அவன் உன்னைப்
பார்த்து நீசெய்தாயென்றெண்ணிக் கொண்டு கட்டியவலையை அவிழ்
த்துச்சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப்போவான் அப்போது நான்
கத்துகிறேன் அதைக்கேட்டமாத்திரத்தில் நீமிகவும்விரைவாய்ஓட்ட
ம்பிடியென்று சொல்லித்தான் அப்படியேபொய்யாக மானைக்கண்
ணைக்குத்திக்கொண் டிருந்தது இதற்குள்ளே அந்தக்கொல்லைக்காரன்
மானைப்பார்த்துச் செத்ததென்றெண்ணி கட்டியிருந்தவலையையவிழ்
த்து ஒருவிடத்தில்ஒன்றாகக் கூட்டிவைக்கப்போனான் காகம் அதைப்
பார்த்துச் சங்கேதப்படிகத்தமான் அதைக்கேட்டவுடனேஓட்டம் பி
டித்தது அதைக்கொல்லநினைத்த அந்தக்குடியானவன் தடியைவிசிறி
யெறிய அதுபதிவிருந்தநரிமேற்பட்டு இறந்தது ஆகையால்புண்ணிய
மாவதுபாவமாவது மிகுதியினால் அதன்பலனுடனே யுண்டாகிறதெ
ன்று சொல்லிப்பின்னும் எலியெப்படி மானுக்கு நரியின்சினேகம்
போலே உன்னுறவு வுபயோகமன்றெனக் காகம் உன்னைதின்றால் என
க்குபோதுமாநீ பிழைத்திருந்தால் நான் சித்திரக்கிரீவன்போல சுகம
டைவேனென்று உன்னட்பை விரும்புகிறேனெனப் பின்னும் இர
ணியகன் நீயெனக்குப்பகைவன் உன்னுடனேநான் சினேகம்பண்ணு
கிறதில்லை சத்துரு தனக்குஅநுகூலமாயிருந்தாலும் அவனோடுசிநேகி
க்கலாகாது தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும் எது த
க்கதோ அதுசெய்யவேண்டும் தண்ணீரில்வண்டியும் பூமியின்மேற்க
ப்பலும் நடக்குமா இதனாற் சத்துருக்களிடத்திலும் நம்பிக்கைவைக்
கலும் ஆகாதென்றிப்படி பலவிதமாய்ச்சொல்லிக் காகம் நானுன்னு
டனே சினேகிப்பே னில்லாவிட்டாற் பட்டிணியாக விருந்திங்கையே
பிராணனை விடுவேன் நெருப்பின் வெப்பத்தினாற்பொன் முதலான
வை யுருகியொன்றாகிறது யாதேனுமொரு நிமித்தத்தினாலே விலங்கு
பறவை மித்திரத்துவத்தை யடைகின்றனபயத்தினாலாகிலும் மூடர்
களுக்குச் சினேகமுண்டாகின்றது சாதுக்களுடைய சினேகமா க
ண்டமாத்திரத்தில் உண்டாகிறது அன்பனே சீக்கிரமா யுடைகிறது
பிறகு பொருந்துகிறதில்லை பொன்குடஞ் சீக்கிரத்தில் லுடையா
து உடைந்தாலு மொன்றாகும் இப்படியே துற்சனர்களுடைய
சினேக மிருக்கிறதென இதைக்கேட் டிரணியகன் உன் வார்த்தை
யினால் நான் மெத்தவுஞ் சந்தோஷத்தை யடைந்தேன் இப்போது

னக்கு மெனக்கும்சிநேகத்துவ மிருக்கட்டுமினிமேல் நாமிருவருமொருமனதா யிருக்கவேண்டும் உபகாரம்பண்ணுகிறவன் மித்திரனென்றும் அபகாரம் பண்ணுகிறவன்சத்துருவென்றுமறிந்து மனக்கலக்கமில்லாமனடக்கவேண்டுமென்றிப்படிப்பேசி நிச்சயித் திரணியகன் லகுனனுக்குச் சிறிதாகாரங்கொடுத்து தன்வளையிற் போயிற்றுசிநேகலாபம்பெற்ற காகமுமவனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு தன்னிடத்திற்குப்போயிற்று அதுமுதல் யிவைகளத்தியந்த சிநேகமாயொன்றுக்கொன் றுகாரங் கொடுத்துக் கொண்டு பலவார்த்தைகள் பேசிக்கொண் டிருக்கையில் ஒருநாள் லகுபத னெலியைப்பார்த்து மித்திரா இப்போதிங்கே இரை யகப்படாமையால் வேறூரிடத்துக்குப்போக விச்சிக்கிறேனென அதைக்கேட் டிரணியக னெங்கேபோகிறாயெனவப்போது தண்டகாரண்யத்திற் கற்பூரகௌரமென்கிற தடாகத்திலிருக்கிற வாமையாகிய மந்திரனென்பவன் எனக்குச் சிநேகனா யிருக்கிறான் அவனெனக்கு விதம் விதமானமீன்களைக்கொடுத்து போஷிப்பான் அதைக்குறித்து நானவனிடத்திற்கு போகிறேனெனக் கேட்டிரணியகன்மித்திரா அவ்விடத்திற்கென்னையுங்கொண்டுபோகவேண்டும் நான்தேசாந்திரம்போக விரும்புகிறேனென அப்போது காக்கை நீயப்படி விரும்புவானேனென இரணியகனங்கேபோனபின்புசொல்லுவேனெனலகுபதனன் இரணியகனை எடுத்துக்கொண்டந்தவிடத்திற்குப்போயிற்று பின்பவைகளைப்பார்த்துமந்தரன் அவ்விரண்டுக்கு மாதித்யம் பண்ணிற்று இப்போது லகுபதனன்மந்திரனை பார்த் திந்தவிரணியகன் மிகவும்பரோபகாரி இவன்சித்திரக்கிரீவனை அவன்கூட்டத்தோடு கூட வலையினின்றும் விடுவித்தான் அப்போது இவன் நட்புநிலைமையைப்பார்த்துநானும் இவனுடனே நட்புக்கொண்டேனென அதைகேட்டுகூர்மன் சந்தோஷப்பட்டு இரணியகனைப் பார்த்துமித்திராநீயிந்த மனிதசஞ்சாரமில்லாக்காட்டில் வருவாயெனஅப்போது எலிசொல்லுகிறது.

சண்பகவதியென்னும் பட்டணத்தில் சூடால்கரணனென்னும் ஒருசந்நியாசி மிகுந்தசோற்றைக் கப்பறையிற்போட்டு உரியின்மேல் வைத்துவிட்டு நித்திரை பண்ணிக்கொண்டிருப்பான்பின்பு அந்தசோற்றை நான் தின்றுக்கொண்டு சும்மா இருக்கிறநாளில் அங்கேவீணாகர்ணனென்னும் ஒருசந்நியாசிவந்து அவனோடுகூட அனேககதாப்பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையிற் அந்தச்சூடாகரணன் கையில் ஒருதடியினாலே பூமியைத் தட்டிக்கொண்டு சோற்றைக்காப்பாற்றிக் கொண்டிருந்தான் அப்போதுவீணாகர்ணன் என்னுடைய கதையை

அனுதரவுபண்ணிநடுவேவேறேயென்ன வியாபாரத்தி லிருக்கிறாயெ
னச்சூடாகர்ணன் உன் வார்த்தையை அனுதாவு பண்ணவில்லை இவ்
வெலிஎன்பாரத்திலிருக்கிற அன்னதானத்தை நாள்தோறுந்தின்னு
கிறது அதையோட்டுகிறேனென வீணாகர்ணன் அப்போதுஉரியைப்
பார்த்துக்கொஞ்சம்பலமுள்ள எலி இவ்வளவுபாரம் எப்படி குதிக்கிற
துஇதற்கேதோஒருகாரணம் இருக்கவேண்டும் அதுதான் ஏதுவாயி
ருக்கலாமென்று ஆலோசித்துப்பார்த்தால் மிகவும் இங்கேதிரவியமி
ருக்கவேண்டும்உலகத்தில் திரவியமுள்ளவர்கள் பலமுள்ளவராயிருக்
கிறார்கள் அசாத்தியமான காரியங்களைச்சாதிக்கிறார்கள் ராசத்துவத்
துக்கும் இதுகாரணமாகும் எல்லாம் இதனால் ஆகின்றதென்று சொ
ல்ல அந்தசந்நியாசியதைக்கேட்டு மெய்தான்என்றுநம்பிப்பூமியைவெ
ட்டி ஐயோ என்திரவியத்தையெடுத்துக்கொண்டான் அன்று தொட
ங்கி நான் இளைத்து போனேன் பின்பு எனக்கு இரையுங்கிடையாததி
லும் மெள்ள நடந்துக்கொண்டிருக்கையில் அந்தசந்நியாசி பார்த்துப்
பார்த்திந்தஎலி இப்போதுதன்னுடைய சாதித்தன்மையை அடைந்
திருக்கிறது முன்னிருந்ததன்மதம் போய்விட்டது ஆகையால் பணம்
இல்லாதவர்களைஎல்லாரும்அற்பமாய்நினைக்கிறார்கள்என இதைக்கேட்டு
நான்இப்போதுயிங்கேஇருக்கிறது சரியன்று இதைவேறொருவரோடு
ஞ்சொல்லலாகாது பொருள் இழவுக்கிருக்கச்சித்திரமுந்தானமும்மா
னமும் அவமானமும் ஆயுளுந்தனமும் ஆகிய இவைகளைப் புத்திமா
ன்வெளிப்படுத்தலாகாது தன்விதி பிரதிகூலமாய் இருக்குங் காலத்தி
ற்பராக்கிரமமும்முயற்சியும்வீணாகின்றனபணம்இல்லாதவனுக்குவன
வாசத்தைக்காட்டினும் சுகமில்லை எந்தயிடத்தில் நாம்பணக்காரராயிரு
ந்தோமோ அந்தவிடத்தில் ஏழையாயிருக்கிறது உத்தமம் அன்றென்
றுமறுபடி இழந்தபணத்தை எடுத்துக்கொள்ள ஆயத்தப்பட்டேன்
அப்போது சந்நியாசி என்னைத்தடியால் அடித்தான் அதனால் மிக
வும் துக்கப்பட்டு உன் சினேகிதனோ டிங்கேவந்தேனென மந்தரன்
மித்திரா நீ இதனால் அதைரியப்பட்டு உரைவிடந் துறந்தோமென்று
வருத்தப்படவேண்டாம். சாதுக்கள் எங்கே போனாலும் மரியாதை
பெருகிறார்கள்சிங்கம் வேறொருகாட்டுக்குப் போனாலும் புல்லைத்தின்
கிறதில்லை இலையையே தின்னும் உற்சாகமுள்ளவன் சந்தோஷமுள்ள
வன் தைரியசாலி சூரன் களங்கமில்லாதவன் இவர்கள் வீட்டிலே
இலட்சுமி தானேவந்தடைகிறாள். நீ பணமிழந்தாலும் எப்போதும்
சந்தோஷத்தோடு யிருக்கிறாய் ஆகையால், உனக்கிருக்கிறசுகம் பண
த்தாசையால் மயங்குகிறவர்களுக்கில்லை இன்னும் கேள் மேகச்சாயை

துஷ்டனுடைய தயை இளம்புல் பாலஸ்திரீ யெவ்வனம் தனம் இவைகள் வெகுநாளைக்கு நில்லாது ஆகையால் இவை யிகழ்ந்து போனால் அழுதுகொண்டு ஆகாரத்தைக் குறித்து ஏங்கியிருக்கலாகாது ஏனென்றால் எவன் நற்புத்தி விடுகிறானோ அவன்பிறக்கிறதற்கு முன்னேதானே தாய்முலையிற்பாலை அமைத்து வைக்கிறான் அப்படிப்பட்டவனாயுசுள்ளவரைக்கும் காப்பாற்ற மாட்டானோ நீநல்லவிவேகியா யிருக்கிறதினால் இவையெல்லா முனக்குத் தெரிந்தே யிருக்கும் இனிச்சினேகமாய் யென்னிடத்தில் சுகமாயிருமென இவையெல்லாம்கேட்டு லகுபதனம் மந்திரா நீசகலகுண சம்பன்னன் மேலும் சற்குணன் சாதுக்களுக்குவந்த ஆபத்தை சாதுக்களே நிவர்த்திபண்ணுகிறார்களென்று அறிந்து நாங்களுன்னை நாடிவந்தோமென்றுசொல்லிநீண்ட பெரிய மரத்தின்மேல்போய் உட்கார்ந்து தன் சுபாவப்படியே இங்குமங்கும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஏதோ ஒருபயமுகாந்தரத்தை அறிந்து அவ்விரண்டுக்கும் நீங்களுங்களிடத்தில்ஒளித்து கொண்டிருங்களென மந்தரன் தண்ணீரில்போயிற்று எலி வளையில் நுழைந்தது காகம்விருட்சத்தின் நுனியிலிருந்துபார்க்கையி லே தொன்றுந் தோணப்படாமையால் பின்பு அம்மூன்றும் ஒன்றுக்கொன்று பேசிக்கொண் டிருக்கையில் அங்கு அவைகளின் சமீபத்தில்சித்திராங்க னென்னும் ஒருகலைமான் வந்து நான்வேடர் பயத்தால் உங்களிடத்திலிருக்கலாமென்று வந்தேனென யதைக்கேட்டுமந்தானதற்குச் சம்மதம்பண்ணி இதுவுன்வீடு நானுன்சேவக னென்றெண்ணிக்கொண்டு சும்மாயிருக்க வேண்டுமென முகமலர்ந்து மனங் கலந்த இன்சொல் சொல்லப்பிறகு இது மிவைகளுடன் நட்பு கொண்டிருந்தது அப்படியிருக்கையில் ஒருநாள் சித்திராங்க னென்னும் மான்புல்லைமேய வேரிடத்திற்குப் போய்மீண்டு சாயங்காலம் வாராமையால் மேயப்போனமான் இன்றைக்கேன் சாயந்திரம் வரவில்லை யென்றுவிசனப்பட அதையறிந்தெல்லாம் விசன மடைந்தன மறுநாள்விடியற்காலத்தில் காக்கைபறந்து நாலுபக்கத்திலும் பார்த்துக்கொண்டு போகையில் சித்திராங்கன் தோல்வலையில் அகப்பட்டிருக்கிறதைக்கண்டு அதன்கிட்டப்போய் மித்திரா உனக்கிந்தவஸ்தையெப்படி நேரிட்டதென இப்போதிதைக்கேட்டுப் பிரயோசனமில்லை நீபோயிரணியகனை சீக்கிரமாயிட்டுக் கொண்டுவந்தா லவ்வேடன் வருகிறதற்குள் என்பாசத்தையறுத் தென்னை விடுப்பான் வேடன்வந்தால் ஒருபாயமுண்டாகுமென இதைக்கேட்டவுடனே விரையாகப்போய் அவைகளுடனேநடந்தகாரியத்தைச் சொல்லி இரணியகனையிட்டுக்கொண்டு

வந்தது இந்தயிரணியகன் மானைபார்த்து சமர்த்தனுயிருக்கையில் வலையிலெப்படி யகப்பட்டாயென மான் ..லைமையிருந்தாலும்வரு வதுவரும் இப்போதுஎன்னைச்சீக்கிரமாய்விடு எனக்குப்பழயபயமிரு க்கிறது முன்நான் குட்டியா யிருக்கையில் வேடன்வலைகட்டியென்கூ ட்டத்தை வளைத்தான் மற்றவைகள் பெரியமானுக யிருந்தபடியால்கு தித்துவலையைத் தாண்டிப்போயின எனக்கு குதித்தோட சக்தியில் லாதிருந்தால் வேடன் பிடித்து ராஜனிடத்திற்கொண்டுபோனுன் ரா ஜா வாங்கித்தன் பிள்ளைகையில் கொடுக்க அங்கேநான் வெகுநா ளிருக்கையில் ஒருநாள் மேககற்சனையைக் கேட்டு மிகவுஞ் சஞ்சல ப்பட்டு காற்று மழைப்பால் பீடிக்கப்பட்டு மான் கூட்டங்களோடும் போது அவற்றின் பின்னாலே ஓடுவேனேவென்று மனுஷர்பாஷையி லெனக்குள்ளே பேசிக்கொண்டேன் இராஜகுமார னிதைக்கேட்டு நாற்றிசையும்பார்த்தென்னையும் பார்த்தான்பின்புசற்றுநேரஞ் சும் மா விருந்து இதுமனுஷனைப்போ லெப்படியுச்சரித்தது ஆகையால்இ துவொருவிசித்திரப் பிராணியா யிருக்கிறதென்று நினைத்து பயத்தி னுற் சுரத்தில்விழுந்தான் பிறகுவிடியற்காலத்தில் சோனர்களை அ ழைப்பித்து அவர்களுடனே யிதைச்சொல்ல அவர்களெல்லா மிருக ங்களும் மனிதரைப்போல் பேசுகின்றன ஆயினும் நமக்குமுன்னே பேசுகிறதில்லை அதுவும் வுன்னைப்பாராமல் பேசிற்று இதற்காகநீபய ப்படவேண்டாம் இதுயாதொரு விசித்திரபிராணியென்று இதனுல் உனக் கெவ்வளவும் பயமில்லையென இதைக்கேட் டிராஜகுமாரன்எ ன்னைவிட்டுவிட்டான் பிறகுயிக்காட்டில்வந்தேன் இப்படிமுன்னொரு தரம் வலையிலகப்பட்டேன் ஆகையா லென்னைச்சீக்கிரமாய்விடச்சொ ல்லுகிறேனென இதற்குள்ளே மித்திரத்துவத்தினாலே மந்தரனுமங் கேவந்து இரணியகனைப் பார்த்துமித்திராயிப்படி தாமசம்பண்ணுகி றது சரியன்று இப்போது வேடன்வந்தால் நாமெல்லாம் ஓடிப் போவோம் வலையி லகப்பட்ட சித்திராங்கனைப் பிடித்துக்கொள்வான் இதைக் குறித்து எனக்கு கிலேசமா யிருக்கிறது நினைப்பின்படி ம னதி·லிருக்கிறதை யரிகிற சிநேகனும் மநோகர ஸ்திரீயும் பிறர்துக் க்ம் அரிகிறபிரபுவும் கிடையாது அருமையென்று இப்படிமந்தரன் சொல்லிக்கொண் டிருக்கையில் வேடன் சடுதியில் எமனைப்போல் தூரத்தில் வருகிறதை லகுபதனன் கண்டு எலியைப்பார்த்து மித்தி ரா வேடன் வந்தான் இப்போது பெரியச் சங்கடம் நேரிட்டதென அ தைக்கேட்டு இரணியகன் அதிசீக்கிரமாய்ச் சித்திராங்கன்வலையை அறுத்தது அறுத்த வுடனே கிட்ட வந்த வேடனைப் பார்த் தெல்

எல்லாம்ஓட்டம்பிடிக்க அப்போதவன்விசனமடைந்துநாலண்டையும் பார்க்கையில் மந்திரன் தன்னடையின்படி நடந்துக்கொண்டிருந்த துவேடன் அதைப்பார்த்துப்பிடித்து தன்வலையில்சேர்த்துக் கட்டிக் கொண்டு கொஞ்சம்சந்தோஷத்தோடேபோகும்போது அதைப்பார்த்துமானும்எலியும்காகமும் மிகவும்சிரமப்பட்டு இப்போது யென்ன செய்யலாமென்று வேடன்பின்னேபோகத்தொடங்கின அப்போ திரணியகன் ஒருசங்கட நிவர்த்தியாகிறதற்குள்ளே மற்றொருவன் வந்துநேரிட்டது ஆகையால்சிவனுக்குதேகத்தோடுகூட வனேகதுக்கங்களையனுபவிக்க வேண்டியிருக்கிறது இத்துன்பம் சினேகத்தினால்நமக்குவந்தது எவன்மித்திரனிடத்தில் விசுவாசம்வைக்கிறானோ அந்தவிசுவாசம்அவனுக்கு தாய்தந்தை சகோதரன் பிள்ளை சுற்றங்களிடத்திலிராதென்றுஇப்படிவெகுவிதமாய்துக்கித்து பின்னும்வேடன் தூரமாகப்போவதற்குமுன்னே மந்தரனைவிடக்க வுபாயம்பண்ணவேண்டும் பிறகு ஆகமாட்டாதென அப்போ அவைகள் என்னசெய்யலாம் சொல்லெனஎலிசித்திராங்கன் ஏரிக்கரையில்செத்தவனைப்போல்கிடக்கவேண்டும்அவன்மேல்காகம் உட்கார்ந்துக்கொண்டுபொய்யாகக்குத்தவேண்டும் அப்படியிருந்தால் அதைவேடன் பார்த்து மந்தரனைபூமியில்வைத்துவிட்டு மானண்டைபோவான் இதற்குள்ளேநானமையின்கட்டை சோதிப்பேன் பிறகு ஆமை தண்ணீரி லோடிப்போமென அதைக்கேட்டெல்லா மவ்வாறேசெய்து மந்தரனைவிடுவித்தான் பிறகந்தவேடன் வாய்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் இழந்தவள்போல் வெட்கி மிகவும் வருத்தமடைந்து கைக்குவாராத பெரிய லாபத்தையிச்சித்துகைக்குவந்தசிறியலாபத்தையிழந்தேன் யாருக்குமதிகஆசை நஷ்டம் கிடைத்தமட்டும்போதுமென்று நினைக்கிறவனே மகாபுருஷனென்று இங்ஙனமெண்ணிக்கொண்டு தன்வீட்டுக்குப்போனவுடனே அந்தகாகமும் ஆமையும் மானும் எலியும் மிகவுஞ் சந்தோஷமடைந்துதங்களிடத்தில் முன்போல்வாழ்ந்திருந்தன.

இரண்டாவது சுகிர்தலாபதந்திரம்

அல்லது நட்புப்பேறு

முற்றிற்று.

---

௨

மூன்றாவது

# சந்திவிக்கிரகம்.

அல்லது அடுத்துக்கெடுத்தல்.

முன்னேபகையாளிகளாயிருக்கிறவர்களுடைய விசுவாசத்தில்நம்பிக்கை வைக்கலாகாது நம்பினால் எப்படிகாகம் கோட்டான்களின் குகையைக்கொளுத்தி நாசம்பண்ணினதோ அப்படி நேரிடுமென அதைக்கேட்டு இராசகுமாரர்கள் அதெப்படி சொல்லுமெனச் சோமசன்மா சொல்லுகிறான்.

தென்தேசத்தில் மயிலைநகரத்தின்சமயத்தில் ஒருபெரியஆலமரத்தில் மேகவர்ணனென்னும் காகராசன் தன் கூட்டங்களோடு கூட இருக்கையில் அங்கேஉருமாத்தனென்னும் இராசகோட்டான் கூட்டத்தோடு மலைக்குகையிலிருந்துவந்து ஆலமரத்தைவளைத்து கொண்டு இராத்திரியில் அகப்பட்ட காகத்தையெல்லாங் கொன்றுவிட்டு நாள்தோறும் போய்க்கொண்டிருந்தது அதனால் அவ்விடத்தை விட்டுவிடும்படி காக்கைகட்கு நேரிட்டதனால் மேகவர்ணன் தன்மந்திரிகளையழைத்து பகைவர்நாள்தோறும் இங்கு ராமாறுவந்து காக்கைகளைக் கொல்லுகிறார்கள் நமக்கோயிரவில் கண்தெரிகிறதில்லை மேலும் அவர்கள் இருப்பிடமும் அறியோம் அறிந்தால் அங்கேபோ யவர்களைக் கொல்லலாம் பகைவரை யசட்டைபண்ணினால் அதுநோய்போல்பெருகிப்பொல்லாங்குவிளைவிக்கும் ஆதலால் இப்போதுசந்திவிக்கிரகம் பேதம்கலகமென்னும் இவற்றுள் தக்கது இதுவென்னசொல்லுவீர்களென இதைக்கேட்டு மந்திரிகள் அரசன் கேட்பதற்கு முன்னேதானேபிரதானிகள் இதைச்சொல்லவேண்டும் இல்லாவிடில் கேட்டபிறகுஆயினும் விரைவாய்சொல்லவேண்டும் அப்படிசெய்யாமல் சும்மாயிச்சகம்பேசுகிறவனை அரசனுக்குச்சத்துருவென்று நினைக்கவேண்டுமென்று இவ்வாறுசொல்லிப் பின்பு மந்திரிகள் அறிந்து என்னசெய்வோமென்று ஒன்றுக்கொன்று ஆலோசிக்கத்தொடங்கின அப்போதவைகளில்உத்தமசீவியென்பது அரசனைநோக்கிமகாராசாவே வலியவர்களுடனே பகைபண்ணலாகாது சமாதானமேதகுந்தது பகைவர்களைவணங்கிகாலம்பார்த்துமோசஞ்செய்கிறவர்கள் சுகமடைகிறார்கள் ஆற்றில்தண்ணீர்நிறப்பிப் பெருகையில் வணங்கியசெடி நாசமடையாமல்முன்போல்நிமிர்ந்திருக்கிறதே நெருக்கமானகாலத்தில்துஷ்டருடை

னே சமாதானம்பண்ணி உயிரைக்காப்பாற்றினால் பின்புள்ளாச்செல்வமும் சம்பாதிக்கலாம் மேலும் தனக்குப்பலபேர் பகைவர்களிருந்தால் அவர்களில் ஒருவரோடு வுறவுகொண்டு எல்லாரையுங் கெடுக்கவேண்டும் நிலமும் நட்பும்பொருளாகிய இவற்றின் இருப்பைத் தன்னிடத்திலும்மாற்றானிடத்திலும் இவ்வளவென்று ஆராய்ந்துகொள்ளக்கூடுமானால் பின்பவன் முன்னெதிர்க்கவேண்டும் இல்லாவிடில் கூர்மவிர்த்தியை அனுசரித்துத் தனக்குப்பலமுள்ளகாலத்தில் கிருஷ்ணசற்பத்தின் வியாபாரத்தை யனுசரிக்கவேண்டும் கெலிப்புந்தோற்பும்ஒருவன்பங்கல்ல ஆதலால்மாற்றானுடைய வலியின்மையும்பார்த்து எதுசெய்யத்தக்கதோ அதுசெய்யவேண்டும் அச்சமயத்தில் கொக்குப்போல உறங்கியிருந்தது சமயத்தில்தன் குத்தைபோலிருக்கபெரியோருஞ் சொல்லி யிருக்கிறார்களேயென இப்படியதன் வாக்கியத்தைக்கேட்டு இராசன் இரண்டாம் பிரதானியைப்பார்த்து உன்கருத்தென்னசொல்லென இரண்டாமந்திரி அவன் சொன்னவற்றில் சிறிதுநன்மையில்லைபெரியசங்கடம்நேரிட்டபோது பகைவருடனேசந்திபண்ணலாகாது நெருப்பினாற்காய்ச்சினநீர் அந்த நெருப்பை யவியாதாநம்மைக்கோட்டான்கள் வருத்துகின்றதென்று அவர்களோடு சந்திபண்ணினால்கொல்லுவார்கள் விஷமஞ்சுரமப்பியங்கனத்தால்வளர்கிறபோலும் நெய்யினால் நெருப்பு விர்த்தியாகிறது போலும் பொல்லாங்குசம்பவிக்கும் சத்துருவலியன் நாமெளியோம் என்பேரானால் அதற்குச் சிந்தையில்லை யானை பெரியதாயிருந்தாலும் அதைசிங்கக்குட்டிகொல்லநிற்கும் ஆதலால் மனோபலத்தோடு பகைவரைக்கொல்லவேண்டும் அரசனுடைய கொடுந்தண்டத்தைப்பார்த்து வைரிகள் இயல்பாய்ப்பயமடைகிறார்கள் எங்கும்பெயர்பெற்றிருக்கிற பராக்கிரமசாலியாயும் எல்லாராசியிலும் அறியப்பட்டவனாயு மிருக்கிறவன் எவனோ அவனேபாக்கியவான்இல்லாவிடில் தாயின்மௌனத்தை கெடுத்துப்பயனென்னபராக்கிரமத்தால் உயிர்த்திருக்கிறவனேஉயிருள்ளவன்மற்றவர்கள் பிணத்துக் கொப்பானவர்களென்று இப்படியதுசொன்னவற்றையெல்லாம் அரசன்கேட்டு மூன்றும்பிரதானியைப் பார்த்துஉன்கருத்தைச்சொல்வாயென அது வாசனேகேள் பகைவன்தன்னிலும் வலியவனாயிருந்தால் அவனோடேபொருத்தலாவது பொருதலாவதுஒன்றுஞ்செய்யாமல் தன்னிடத்தைவிட்டு வேறிடத்தில்போகவேண்டும் இதுவேநல்லது இவ்வேளை சண்டைசெய்ய லாகாதென்று வெதிரியின்பலம்பார்த்து எவன்தேசத்தை துறந்துபோகிறானோ அவன்பாண்டவர்களைப்போற்சுகமடைகிறான். இதைவிட்டெவன் செருக்குடனே சத்தஞ்செய்கிறானோ அவன்முதலறக்கெடுகிறானென இதை

கேட்டரசன் நாலாமந்திரியைக்கேட்க நாலாமந்திரிதன்னிடம்விட்டுப் பெயர்தல்தகுதியாகக்காணவில்லைமுதலை தன்னிடத்திலிருந்தால்மலை யொத்தயானையும் இழுத்துக்கொண்டு போகிறது அதுதன்னிடம்விட் டுப்பெயர்ந்தாலதைநாய்களு மிழுத்துக்கொண்டுபோகிறது ஆகையா ல்தன்னிடத்திலிருந்து நட்புள்ளவர்களை உதவிக்காக அழைத்துக் கொண்டுபகைவர்களைக் கெடுக்கவேண்டும் எவன்சத்துருவருகிறனெ ன்றுபயந்துதன்னிடம்விட்டுபோகிறனே அவன்மறுபடியு மவ்விடத் திற்குவருகிறதில்லை பல்பிடுங்கினபாம்பும் பயமில்லாதயானையும்இட ம்விட்டுபெயர்ந்த அரசு எல்லாராலும் அவமானமடைகின்றன மே லும்தன்னிடத்திலிருந்தால் ஒருவனேநூறு பெயருடன் யுத்தம்பண் ணுகிறன் ஆதலால்துக்கத்தையும்மதிலையும் ஏர்ப்படுத்திக்கொண்டு அ வற்றின்சார்பால்பகைவருடனேயுத்தம்பண்ணவேண்டும்அவனல்வெ ற்றிபெற்றல் லட்சுமியைபெறலாம்செத்தால் சொர்க்கம்பெறலாம்ஆ கையாலவ்விரண்டையும்துறக்கலாகாது நிலத்தில்சிக்கெனஊன்றிவே ரையுடையமரம்காற்றினல்விழாது அந்தமரமே தன்னிடத்தில் இரா விட்டால் வாயு அதைதள்ளுகிறதாகையாலேதொன்று செய்யத்தக்க தோ அதையிங்கேயிருந்துகொண்டே செய்யவேண்டுமென இப்படி அதன்கருத்தையரிந்துக்கொண்டு ஐந்தாமந்திரியை உன் அபிப்பிராய சார்பைவிட்டாற்சமர்த்தர்களும் பராக்கிரமம் குறைச்சல் அடைகிறர் கள் ஆதலால்யாவரையாகிலும் உதவிக்குச் சேகரித்துக் கொள்ளவே ண்டும் அதுவும் இருப்பிடத்திலிருந்தே சம்மதிக்கவேண்டும் உறை விடம்விட்டுப் பிரிந்தவனுக்கு யாவரும் வாய்ப்பேச்சினல் ஆகிலும் சகாயம்பண்ணர்கள் எப்போதுமக்கினிக்குப் புல் சருகு முதலியவற் றின்சேர்க்கையால் காட்டைக்கொளுத்த வலியுண்டாகிறதோ அப் போதுவாயுமித்திரன் தன்மயமாய் உதவிபண்ணுகிறது அந்நெருப் பேவிளக்குவடிவமாய்அந்தரம்நிற்கும்போது காற்றேஅதையவிக்கிற தும்மேலும் வலியவர்களுடைய சார்பிருந்தால் எல்லோருக்கும் பெரு மையுண்டாகிறது தாமரையிலைச்சார்ந்த நீர்த்துளி முத்தினெளியை அடைகிறதுசார்பில்லாமல் யாதொரு காரியமும்ஆகிறதில்லை யாகை யால்மற்றொருவனை அனுசரிக்கவேண்டும் இதுவேயென்கருத்தெனப் பிறகுமேகவர்ணராசன் பிதாவின்மந்திரியாகிய சிரஞ்சீவியைப் பார் த்து கும்பிட்டு உம்முடைய சந்நிதியில் எல்லோரையும் கேட்டு அவர் கள்சொன்னவுத்திரங்களையும்உம்மைக்கேட்பித்தேன் இவற்றில் எது தக்கதோ அதைசொல்லுமென இப்படிராசாசொன்னதைகேட்டு கிழ

மந்திரிஎல்லோரும்நூற்சார்பாலேயேசொன்னமையால் யோக்கியமா கவேயிருக்கின்றன சத்துருபலவானாயிருந்தாலும் அவனுக்குவிசுவா சங்காண்பித்து அவனைக் கெடுக்கவேண்டும் இல்லாவிட்டால் துக்க முதலியவற்றிலிருந்து தனக்கும் சத்துருவின் பலாபலங்களை அறி ந்துஎதுசெய்வதோ அதுசெய்யவேண்டும் இதுவிகிதமாம் மாதர்கள் முகநட்புள்ளவர்கள்பகைவர்கள் சூதாடுகிறவர்கள் இவர்களிடத்தில் மெய்யாகவேநடக்கவேண்டுமென இப்படிபெரிய மந்திரியின்வசனங் களைக்கேட்டுமேகவர்ணன் பிலனுடைய பிரைசல்களை எப்படி அறிய லாமென சிரஞ்சீவி மறைந்தபொருள்களைப் பிராமணர்கள் வேதத் தினுலேயும்பசுவாசனையினுலேயும் அரசன் வேவுகாரரை யனுப்பினு ம்மற்றவர்கள் தங்கள் கண்களாலும் இப்படி பல்விதமாய் அறிகிறார்க ளெனக்கேட்டு மேகவர்ணன் நல்லது இந்தப்பிரதானிகள் ஏன்பலப லவிதமாய்ச் சொன்னார்களெனச் சிரஞ்சீவிநாரதன் தருமராஜனுக்கு ச்சொன்னதைக்கேள் அரசன்தனக்கு உபயோக்மானவற்றைக்குறித் துஒருநாழிகை விசாரியாவிட்டாலும் உடனேகெடுதிவரும் உடைய வன்கண்ணோடாப்பயிர் அழியாதாஆதலால் மந்திரி முதலானவர்களு டையசமாச்சாரங்களைக் கணந்தோறுந் தெரிந்துக்கொண்டு எப்போ தும்தான் எச்சரிக்கைபா யிருக்கவேண்டுமெனக் கேட்டு மேகவர்ண ன்காகங்களுக்கும் கோட்டான்களுக்கும் வைரமெப்படிவந்தது சொ ல்லுமெனக்காலங்கண்டகிழமந்திரி சொல்லத்தொடங்கியது.

ஒருநாள் மயில்முதலாகிய பறவைக ளெல்லாங் கூடியிருந்தது நமக்கெல்லாம் குருடன்அரசனாயிருந்து நம்மைக்கொல்லுகிறவேடர் களில்நின்று நம்மைக் காப்பாற்றுமல் இதாகிதமுந்தெரியாமல் இருக் கிறான் இத்தன்மையுடைய இறைவனிருந்து பயனென்னை நமக்கு அரசனே வேண்டாமென்போனுமல் மகானில்லாமல் கப்பல் கரை காணுதது போலே அரசன் இல்லாவிட்டால் நிலை கெட்டுப்போ வோம் ஆகையால் எல்லாப்பறவைகட்கும் அரசனாகக் கோட்டானைநி யமிக்கவேண்டுமென நிச்சயித்து இராச பட்டாபிஷேகத்துக்கு வே ண்டிய பதார்த்தங்களை சேகரித்துபின்பு பலவாத்தியங்களை முழக் கிக்கோட்டானைச் சிங்காதனத்தின்மேல் உட்கார வைக்கவேண்டுமெ ன்று இருக்கையில் ஒருகாகப்வந்து அவற்றைப்பார்த்து என்னகாரி யம் இதென்னகாரியமென அப்போது எல்லாப்பறவைகளும் பறவை களில்வஞ்சமுள்ளதுகாகமும் மனிதரில் நாவிதனும் விலங்குகளில் நரியும் மாதர்களில்பணிப்பெண்ணும் சதுரர்களா யிருக்கிறார்கள் ஆ தலால் இச்செய்தியைசொல்லி இதன் உடன்பாடும் பெறவேண்டுமெ

ன்றதைப்பார்த்து· எங்களுக்கு அரசனில்லாமையால் இக்கூகையை அரசனாக்கிக்கொள்ளுகிறோம் இதற்கு நீயும் உடன்படென இதைக் கேட்டு அக்காகம் குலுக்கென்று நகைத்துச் சிரக்கம்பணம்பண்ணி ஓஓ இதுமுழுதும் கெட்டகாரியம் அழகும் வல்லமையும் உண்டாகிய மயில்முதலாகிய அநேகம்பறவைகள் இருக்கையில் இந்தப்பகற் குருடாகியகுருவி அரசுக்குத்தக்கவனோ குளிக்கப்போய் சேற்றைப்பூசிக்கொள்ளலாமோ தோலோதோல் இதற்குநான் உடன்படேன் கருடராசனிருக்கையில் மிக்வும் பயங்கரசுபாவமும் வலியின்மையுள்ள இக்கூகையை அரசனாக்கி உங்கட்குப் பலனென்ன ஒருவன் சுவாமியாயிருக்க வேறொருவன் குணசாலியாய் அகப்பட்டாலும் அவன் உபயோகியாகான் பராக்கிரமமுங்குணமுமுள்ள அரசன் உலகத்தில் ஒருவனேபோதும் பலபெயர் அரசர்களானால்மனிதர்கள் துன்பமடைகிறார்கள் கருடன்பேரினாலேயே எல்லாவரங்களும்பெற்று மனிதர்கள் நம்மிடத்தில் மதிப்புண்டாயிருக்கிறார்கள் வலியவர்களுடைய பெயரினாலே யெளியவர்களுக்குக் காரியமாகின்றது முன்னொரு முயல் சந்திரவிம்பத்தைக்காட்டிச் சுகமடைந்ததை அறிவீர்களா என அதைக்கேட்டபறவைகள் முயல் எப்படிச் சுகமடைந்தது அண்ணே சொல்லவேண்டுமெனக் காகம்சொல்லலுற்றது.

ஒருகாட்டில்சதுரதந்தனென்னும் அரசயானை பலயானைகளோடுகூடிக்கொண்டிருக்கும்போது அங்கே மழைபெய்யாமையால் ஆறு ஏரிகுளம்குட்டை கசங்களெல்லாம்வற்றிப்போக அப்போது யானைகளெல்லாம் தாகித்துச் சதுரந்தனைப்பார்த்து சுவாமி நாங்கள் எல்லாம் தாகத்தின்பொருட்டுச் செத்தாற்போலானோம் சிலதண்ணீர்க் காகச்செத்தார்கள் ஆகையால் மிகவும் தண்ணீருள்ள இடந்தேடிப் போயிருப்போமானால் எல்லாம் சுகமடைவோமென இவற்றின்பேச்சைக்கேட்டுத்தன் மனதில்யோசித்து இதற்குஐந்துநாளைப்பயணதூரத்தில் பெரியபாதாள கங்கையில் நிறைந்திருக்கிறது அங்கே போனால் எல்லோருக்கும் மிகவும் தண்ணீர்கிடைக்குமென்று இப்படி உறுதிசெய்துக்கொண்டு அப்படியே அங்கேபோய்த் தெளிந்த நீரைக்கண்டுஅந்திவரைக்குஞ் சலக்கிரீடைசெய்துக்கொண்டிருந்தது கரையில்வந்திருந்தன அப்போது அங்கே வாசம்பண்ணிக்கொண்டிருந்த வெகுமுயல்களிற் சில யானைகளின்காலின்கீழ் அகப்பட்டிறந்தன சிலசிலமுயல்களுக்குக் கால்கைகள் ஒடிந்தன சிலவற்றிற்கு உடல்கள் நெருங்கினசிலவற்றிற்குக்குடல்கள் சரிந்தன சில இரத்தத்தால்நிறைந்தனஇப்படிபொல்லாங்கு நேரிட்டவுடன் சில முயல்கள் ஒன்றாய்க்கூட

இன்றைக்குயானைக் கூட்டம்வந்து நம்மையழித்தது இப்படியேதின
முமிருக்கும் இங்கேவேறே தண்ணீரில்லை இதனாலுமக்குமீளா சங்க
டம்நேரிட்டது யானைதொட்டாலும் பாம்புமோர்ந்தாலும் அரசன்
நகைத்தாலும் துர்சனன் மரியாதைபண்ணினாலும் உயிர்ச்சேதம்
வரும்ஆதலால் இதற்கேதாவது உபாயம் யோசிக்கவேண்டுமென அ
ப்போது சிலமுயல்கள் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு பூமியை
விட்டுவிடலாமென்று இருக்கிறதினால் இவ்விடத்தைவிட்டு விடவே
ண்டுமென இதைக்கேட்டு வேறுசிலமுயல்கள் நம்முடைய பெரியோ
ர்கள் வாழ்ந்த இடத்தை விட்டுவேறிடத்தில் போகாமல் யானைகள்
அஞ்சத்தக்க தந்திரம் எடுக்க வேண்டும் நஞ்சில்லாப் பாம்பும்பட
மெடுத்தால் அதற்கு நல்லாதிருந்தும் பயங்கரமா யிருக்கிற படத்தி
ன் வடிவைப்பார்த்து மனிதர்கள் பயப்படுகிறார்கள் என அதைக்
கேட்டுஒருமுயல் யானைகள்பயப்படும்படி ஓர்வுபாயம் சொல்லுகிறே
ன் விசயதந்தன் என்னும் நம்முடைய சுவாமி சந்திரமண்டலத்தில்
இருக்கிறான் அவன் தூதனுப்பினானென்று ஒருநிமித்தம் வைத்து
ஒரு பொய்தூதனை அவர்களிடத்திற்கு அனுப்பினால் நமதுகாரியம்
ஆகுமென இதைக்கேட்டவுடனே யெல்லாம் அப்படியேநிச்சயித்து
நெட்டைக்காரனைப்பார்த்து நீசாதுரியவான்எதிரிகளைச் சமாதானம்
பண்ணுகிறவன் ஆதலால் தூதகாரியத்தில் நிபுணனா யிருக்கிறாய்
மௌடியம் இல்லாமையும் சோர்பாமையும் பொய்யாமையும் ஊகித்
தரிதலும்தூதலக்ஷணமென்றுசொன்னவற்றிற்குநீயேவாசஸ்தான
மென்றுநினைக்கிறோம் ஆகையால்நீபோனால் நம்முடைய காரியங்கை
கூடும்மூடதூதனை அனுப்பினால் காரியங்கெட்டுப்போமென்று சொ
ல்லி அதையனுப்ப அதுபோய் யானைகள் வரும்வழியில்ஓர்உயர்ந்த
மேட்டில் உட்கார்ந்திருந்து யூகபதியைப்பார்த்துச் சொல்லுகின்றது
அடாதுஷ்டனேயேவெட்கத்தைவிட்டு இந்தமடுவில்வந்து பலவகைப்
பட்ட விளையாட்டுவிளையாகிறாய் ஆதலால் நான்எல்லாரையும் அடி
த்தெரித்துவிடுவேனென இதைக்கேட்டு யானையுன்பேச்சைக்கேட்டு
நான்மிகவும் ஆச்சரியப்பகிறேன் நீயாரென முயல்விஜயபந்தராஜனு
டையதூதன் அவன்கட்டளையை உனக்குச்சொன்னேனவன் .சந்தி
ரமண்டலத்தில் இருக்கிறபடியால் சந்திரன் உன்னிடத்திற் கனுப்பி
னானென இதைக்கேட்டு இவன்வலியனுடையதூதனென்று எண்ணி
அதைப்பார்த்துச் சந்திரனுடைய கட்டளை என்னவென அதுநீஇங்
கேவந்து நாணமில்லாமற் கிரீடைசெய்து வெகுமுயல்களைக்கொண்
டு ஆகிலும் நான் ஒருதரம் பொறுத்தேன் உனக்குஉயிர்மேல் ஆசை
யிருந்தால் இங்கேவரவேண்டாமென்று சந்திரனுடையகட்டளையா

யிருக்கிறதை உனக்குநான்சொன்னேனிப்போது இதற்குப் பிரிதியு
த்திரவுசொன்னால் சுவாமி திருவடிக்கு அறிவிப்பேனென யானை அ
வனிடத்திற் கென்னை யழைத்துக்கொண்டுபோ நான் உன்எசமானு
க்கு நமஸ் காரம் பண்ணி வேறொரு குளத்திற்குப் போவேனென
இதைக்கேட்டு முயல் நீதனியாய் என்னோடு கூடவா உனக்குச் சுவா
மியைக் காண்பிக்கிறே னெனப் பிறகு இரண்டும் போகையில் ஓர்
ஏரியின் அருகே போய் முயல் யானையைப்பார்த்து சந்திரன் இந்த
த்தண்ணீர்க்குள்ளே வந்திருக்கிறான் அவனை நமஸ்கரித்துவிட்டுக் க
டுகெனப்போ இல்லாவிட்டால் அவனுடைய சமாதிக்குப் பங்கம் வ
ந்தால் அவர்க்கு வெகு கோபம் வருமென அப்போது யானை மற
ந்து சந்திரபின்பத்துக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு அதுமுதற்கொ
ண்டு முயல்கள் அங்கே சுகமுற்றிருந்தன அப்படிப் பெரியோர்
களை அடுத்திருந்தால் மலையால் வந்த வினை சூரியன் முன் பனி
போலே நீங்கும் கொல்லையிற் குற்றியை அடைந்தபுல் உழவருழுப
டைக்குக்கெடுமோ துஷ்டர்களுடைய கூட்டுறவுக ளெப்போதிருந்தா
லும் கெடுதிவரும் மூன்றொருமுயலும் ஆந்தையும்சண்டையிட்டுகூர்
மபல்லனருகேபோனவுடனே இரண்டையும் அதுகொன்றதறியீரோ
எனக்கேட்டுப்பறவைகள் காகத்தைப்பார்த்து அதெப்படியென கா
கஞ் சொல்லத்தொடங்கிற்று.

முற்காலத்தில்நான் குடியிருந்த ஒருமுதுமரப்பொந்துவிருந்தக
பிஞ்சல னென்னும் குருவியும்நானும் மாலைக்காலத்தில் பலபலபேச்சு
கள்பேசிக்கொண்டு சுகித்திருக்கையில் ஒருநாள் அவன் வேறொருப
ட்சியோடு கூடப்போய் மீண்டுவராமையால்நான்ஐயோ அவன்வலையி
ற்பட்டானோ ஆறாவது கொன்றார்களோ தெரியவில்லை எப்போதும்
வேறோரிடத்தில் தங்குகிறவனல்லவே என்றிப்படி விசனப்பட்டுவழி
பார்த்துக்கொண்டிருக்கும்போது மூன்றுநாள் இவன்பொந்தில் ஒ
ருமுயல்வந்து நான்பலபலவிசமாய்த்தடுத்துச்சொல்லியுங்கேளாமல்
முரட்டுத்தனமாய் குடிபுகுந்து எங்கேயோ சிலநாள் கபிஞ்சலன்
மனதின்படியே நெற்களைத்தின்று கொண்டிருந்தது பிறகுதன்னிடத்
துக்குவந்துபார்க்கையில் தன்வீட்டில்முயல்யிருக்கக்கண்டு அதைப்
பார்த்து அடாகாகமே உனக்கே வீட்டிலிருக்கை நன்றன்றுபொட்
டெனப்புறப்பட்டுபோவென இதைக்கேட்டு முயல் அடாபேதாய் இ
து உன்வீடன்று என்வீடோ வீணாகப்பொய்சொல்லிப்பயனில்லாம
ல்நட்பையேனிழக்கிறாய் பாவி கிணறுகுளம் கோயில் சந்திரன் இவ
ற்றின்சொத்தும் அவற்றைவிட்டுநீங்கினபிறகு அந்நீங்கினவனிடத்தி

விராபற்றும் ஒருவன்வீட்டைப்பிறனொருவன் பத்தாண்டளவுய்யாவ
ருமறிய அநுபவித்தால் அவ்வீடு அவனதே இந்தவிஷயத்தில்சாட்
சியும் எழுத்தும்பிரமாணமாகா இந்நியாயம் மனிதர்களிடத்தில்இருக்
கிறது பறவைகளிலஎதுவலிதோ அதைக்கொள்ளுமென்றுஇப்படித்த
ர்மநியாயம் இருக்கிறதினால் வீணனதேதனை ஆந்தை தேர்பசஸ்திர
த்தைகுறித்துப் பேசுகின்றமையால் நீயும சாஸ்திரிகளிடத்திற்போய்
இதைக்குறித்துகேட்டு அவாகளயாரை இருக்கலா மென்கிறார்களோ
அவர்களிருக்க உடம்படுவோமென்று சொல்லி நிச்சயித்து இருவரு
ம விசாரம்பண்ணிக்கொண்டு போகையில் இவ்வழக்குஎப்படி ஆகி
றதோ பார்க்கலாமென்று நானும் அவர்களை தொடர்ந்துபோனேன்
அங்கே கூர்பல்லனென்னும பூனை இவர்கள் பேச்சைக் கேட்டு இவ
ர்கள்வழக்குத் தீர்ப்புக்குப்பேசுகிறார்கள் இவர்களை மோசம் பண்ண
வேணுமென்று நிச்சயித்து அந்த வழியில ஆற்றங்கரையில் கண்
ணை மூடிக்கொண்டு சூரியனைப் பார்க்கிறது போல் அபிநயித்துக்
கொண்டு ஆ ஆ இந்த அசாரமான சமுசாரத்தில் உண்டாகிற
இன்பங்கணத்திலழிந்து கனப்போல் பொய்யாகிறதினால் தரும
த்தைவிட வேறொருகதியில்லை அறத்தைவிட்டு எவன் நாளைக்கழிக்கி
றானோ அவன் மரப்பாவையொத்தவன் அவனைமூச்சுவிட்டுக்கொண்டிருக்
கையில்தானே பிணமென்று எண்ணவேண்டும எப்படித் தயிரியம்
சாரம் நெய்போ எள்ளில் விசேஷம எண்ணெயோ அப்படிப்பிழைத்தி
ருக்கிறதில் சாரந்தருமமாம் இதைத்தாந்து மிகவுஞ்சோற்றைத் தி
ன்றுக் கொண்டேகாலங்கழிக்கிறவர்கள் நிலச்சுமையா யிருக்கிறார்க
ளென்று துக்கப்பட்டிருக்கிறேன் ஓசனங்களே தருமம்பலபல இடை
யூர்களோடுங் கூடிக்கொண்டே யிருக்கிறதாகையால்சுருக்கமாய்ச்சிறு
துதருமஞ்சொல்லுகிறேன பிரர்க்குதவிசெய்வதற்கு புண்ணியம்பிற
ரைவருத்துவதை ஒத்தபாவமுமில்லை மேலுந்தனக்குத் துன்பந்தருவ
து பிறனுக்குந்தருமமென்று இப்படித்தர்மரகசியங்களைக்கேட்டுஉள்ள
த்தில்வைக்கவேணுமென இப்படி அதன்வாக்கியத்தைக்கேட்டு மு
யலகபிஞ்சலா தருமஞ்சொல்லுகிறவனை ஆற்றங்கரையில் உட்கார்ந்தி
ருக்கிறான் அவனைக்கேட்பமெனக்கபிஞ்சலவன் இவன் நமக்கியல்பா
னபகையாளி ஆகலால் தூரத்திலிருந்தே சொல்லவேண்டு மென்று
நிர்ணயித்து அவனைப்பார்த்து ஓதபோநிதியே நீ அறமுணர்ந்தவன் ஆ
கையால் எங்களிருவருடைய வழக்கைக்கேட்டுத் தருமநூற்படிநியா
யஞ்சொல்லிப் பொய்சொல்லுகிறவனைக் கொல்லவேண்டும்என இவ்
வார்த்தையைக்கேட்டுப் பூனைக்காதின்மேற் கையைவைத்து இப்படி

ப்பட்டபேச்சை மறுபடியும் சொல்லாதேயுங்கள் நரகத்திற்குக்காரண
மாகிய இந்தவீட்டுகோன் அறத்தை அனுசரித்துக்கொண்டு இருக்கிறே
ன் மேலுங்கொலைசெய்கிற புலி முதலானவற்றைக் கொல்லுகிறவர்க
ளும் நரகத்திற்குப்போகிறார்கள் என்றுசாதுக்கள் சொல்லுகிறார்கள்
ஆனால்மற்றவர்களுக்குக் கொலையினால் நரகமவருமென்பதில் ஆச்ச
ரியமென்ன யாகருமத்தில் பசுவைக்கொல்லுகிறவர்கள்வேதத்திலு
ள்ள பொருளையறியாதவர்கள் அந்தவிஷயத்தில் ஏழுவருடத்தில நெ
ல்லைக்கொண்டுவந்து ஓமம்பண்ணவேண்டுமென்று சொல்லியிருக்கிற
து பசுக்களைக்கொன்று மரங்களைவெட்டி ஓமமபண்ணி சுவர்க்கங்கி
டைக்கிறதானால் நரகத்துக்கென்போகிறார்கள் ஆதலாலிவையெல்லா
ம வஞ்சகர்களுடையகாரியமென்று அறிந்திருக்கிறமையால் உங்களை
ச்சுதந்தமாய்க் நினைத்தேன்உங்களுக்கு வழக்குமாத்திரந்தீர்ப்பேனானா
கிழவனானபடியால் எனக்குத்தூரத்துச் சொற்கேளாது நீங்கள்கிட்ட
வந்து ஒருவருக்கு ஒருவரிருக்கின்ற வழக்கென்னவோ அதைச்சொன்
னால்கேட்டு இம்மைக்குநலமதருவதாகிய நடுவுநிலைமையைச் சொல்லு
றேன் ஆகையினால பிழுங்கோபத்தாலாகிலும அபிப்பிராயத்தீர்ப்புசொ
லலுகிறவன் நரகத்திற்போவானாதலால்நீங்களஎன்கதினருகேவந்து
உங்கள்வழக்கைத தெரிவியுங்களென அவை இப்படிப்பசப்பு வார்த்தையி
னால் அதினிடத்தில் நம்பிக்கைவைத்துக் கிட்டேவர அவற்றைக்கை
களினால் ஒருமிக்கச்சேர்த்துப்பிடித்து வழக்கா இரண்டையுந்தின்றது
ஆகலால் தீயோரைச்சேர்ந்தால் இப்படிக் கெடுத்ததீங்கு நேரிடுமெ
ன்றறிந்துசெய்யத்தக்கதெதுவோ அதைச்செய்யவேண்டுமென அப்
படிக்காகம்சொன்னதைப் பறவைகள் எல்லாங்கேட்டு இவன்சொன்
னது நன்றென்று எண்ணி இப்பொழுதுசேகரித்த பொருள்களையெ
ல்லாம இப்படியேவைத்து மற்றொருவனை அரசனுக்கு வகைக்குறித்
து மீண்டுஎல்லாம் கூடுவோமென்று உறுதிசெய்துக்கொண்டு எல்லா
ருந்தந்தமிடத்திற்குப் போயினார்கள் அப்போது சிங்காதனத்தருகே
மனையாளோடுகூட உட்கார்ந்திருந்த கோட்டான் பெட்டையைப்பா
ர்த்துபெண்ணே மங்களஸ்நானமாகியும இப்போது இராச்சியாபிஷே
கம எனபண்ணுவியிருக்கிறார்களெனப பேடு உன் இராச்சியாபிஷேக
த்துக்குக்காகம இடையூறுசெய்தபடியால் பறவைகள் எல்லாந்தங்க
ள் வீட்டுக்குப்போயின காகமாத்திரம் இருக்கிறதென இதன்வார்த்
தையைக்கேட்டுக் கோட்டான் அந்தக் காகத்தை நோக்கி அடா துஷ்டா
நான் உனக்கு என்னகெடுதி செய்தேனென்று எங்காரியத்தைக்கெ
டுத்தாய் இதனால் இன்றுமுதற்கொண்டு உன்குலத்துக்கும் என்குல

த்துக்கும் தீராப்பகை இருக்கட்டும வாளினால் வெட்டினாலும பாண
த்தினாலெய்தாலும் அக்காயமாறிக்குணப்படும சொல்லின்காய மப்ப
டி ஆறாதென்று சொல்லிவிட்டுத் தலைகொட்டையோடுகூடத் தன்னிட
த்துக்குப்போயிற்று பின்னர் அக்காகம் மனதிற்றிகைப்பட்டு நுணலை
தன்வாயாற் கெடுமென்பதுபோல் இந்தப்பேச்சைச்சொல்லினான் வி
ண்டபகை சமயமறிந்தே தன் சமர்த்தனாயிருக்கிறவன் சபையிற்பிறரைநிந்
திக்கலாகாது மேலும் ஒன்றுசெய்வதை மனங்கலந்த நட்டோ
ரை உசாவிச்செய்யவேண்டும் அப்படிசெய்யாமல் இப்போது சங்கட
த்தில் அகப்பட்டேனென்று இப்படி பச்சாதாபப்பட்டு அவனுந்தன்
வீட்டிற்குப் போயினன் அதுமுதற்கொண்டு கோட்டானுக்குங்காகக்
கும்பகை தலைமுறை தலைமுறையாகவிடாமல் தொடர்ந்துவருகிறதெ
ன அப்படிக்கிழமந்திரியின மொழியைக்கேட்டு மேகவர்ணராசன் ம
றுபடியும் அதைப்பார்த்து ஐயா இப்போதென்ன செய்யலாமென அ
வன் பார்ப்பானிடத்திலிருந்த ஆட்டைச் சிலவஞ்சகர்கள் எப்படிவஞ்
சித்துக்கொண்டுபோனார்களோ அப்படிநான் கோட்டான்களிடத்திற்
குப்போய் அவர்களைவஞ்சனைபண்ணிக் கொல்லுகிறேனென அதைக்
கேட்டு இராசன் அவர்கள் ஆட்டை எப்படிக்கொண்டுபோனார்கள்
சொல்லுமென மந்திரிசொல்லுகிறான்.

ஒருதேசத்திலே மித்திரசர்மனென்னும் பிராமணன் மாசிமாத
த்தில் யாகஞ்செய்யவேண்டிப் பசுசம்பாதிப்பதற்காக வேறோர்வூர்க்
குப்போய் ஒருவனைப்பசுகேட்க அவன் இவன்நற்காரியத்தைக்குறித்
துக்கேட்கின்றானென்று அதற்குடம்பட்டு நேர்த்தியான ஒருபெரியஆ
ட்டைக்கொடுக்க வாங்கிக்கொண்டுவருகையில் அவ்வாடு இங்குமங்கும
ஓடத்தொடங்கினதினால் அதைத்தோளில் போட்டுக்கொண்டு நடக்
கையிலதை சிலவஞ்சனைக்காரர்கள் தூரத்திலிருந்துப்பார்த்து பார்ப்
பானைவஞ்சித்து அந்தப்பசுவைவாங்கிக்கொண்டோமானால் நமக்கெல்
லோருக்குப்பசிதீர்த்துக்கொள்ளலாமென்று ஆலோசித்து அவர்களிலொ
ருதூர்த்தனவந்து ஓ பஞ்சாக்கினிவளர்க்கின்ற பிராமணா நீசீலனாயி
ருந்து இழிப்பான காரியத்தை ஏனபண்ணுகிறாய் மிகவும் ஈனமுள்ள
நாயைத்தோள்மேல் எப்படிக்கொண்டுவருகிறாய் நாயுங்கோழி சண்டா
ளன்கழுதை ஆகிய இவைகளைத்தொடலாகாதென்று சாத்திரமிருக்கி
றதேயென்றுசொல்லக்கேட்டுப் பிராமணன் கோபித்துக்கொண்டு நீ
யாகப்பசுவை நாயென்றெப்படிச்சொல்லுகிறாய் நீ கண்கெட்டையா
என்னுமெனத் தூர்த்தன்பிராமணா கோபித்துக்கொள்ளாதே சுகமா
ய்ப்போவெனப்பிறகுபிராமணன் சிலதூரம்நடந்துபோனான் மறுபடி
யும் இரண்டாந்தூர்த்தன்வந்து ஓ அந்தணா இக்கன்றின்மேல்உனக்கே

ன்ன பட்சமிருந்தாலும் செத்தபிறகு அதைத்தோளின்மேலெடுத்து
க்கொண்டுபோதல்சரி அன்றசெத்த மிருகங்களைத்தொட்டால் சாந்
திராயணத்தையும் பஞ்சகவ்வியத்தையும் அல்லாமல் அந்தத்தீட்டுப
போகாது இப்படிக்கொத்த ரிஷபத்தைத் தோள்மேல் ஏன்சுமந்து
போகவேண்டுமென அப்போது அப்பிராமணன் அப்படியேசொல்லி
விட்டுப்போகத் தொடங்கினான் உடனே மூன்றாங்கபடி எதிரிட்டுஓஐ
யனே கழுதையைத் தீண்டுகிறவனுக்குச்சசேலஸ்நானஞ்சொல்லியிருக்க நீ
அதையெப்படிக் கொண்டுபோகத்துணிந்தாய் என அந்தணன் இந்தஆ
ட்டைக்குறித்து மனிதர்கள் பலவிதமாகச்சங்கிக்கிறபடியால் இதுவே
தோஒரு ராட்சசனோ பின் அவ்வஞ்சகர்கள் அதைக்கொன்று தின்றா
ர்கள் ஆகையால் நான்சத்துருவை வஞ்சித்து உன்கருமத்தை முடிப்
பேன் நானென்ன உபாயஞ்சொல்லுகிறேனோ அப்படியேசெய் நீசத்
துருபட்சத்திலிருக்கிறாயென்று என்னைநிந்தித்து வேறொன்றின் இர
த்தத்தை யென்மேலெல்லாம்பூசி ஆலமரத்தின் கீழே எறிந்துவிட்டு
நீ கூட்டங்களோடுகூடமலையின்மேல் போயிருந்தால்கோட்டான்கள்
உங்கள்பகைவர்களுக்கு இவன் விரோதியாயிருக்கிறானென்று எண்
ணிக்கொள்ளுவார்கள் பிறகுநான் அவர்களுக்குநம்பிக்கைவருவித்து
த் துர்க்கமுதலானவற்றின் உளவறிந்து சத்துருநாசம்பண்ணுவேன்
அதுவரைக்கும் நீ அங்கேயிரு இவ்வாலோசனை நான்முன்னமேசெய்
து இப்போது உனக்குச்சொன்னேன் என இப்படி அதன் உள்ளுறை
யைக்கேட்டு மேகவர்ணன் அத்தியந்தப்பிரியமான பிராமணனை நீது
ரும்புபோலநினைத்தாயெனப்பிரதானி ராசகாரியத்துக்காகச்சேவகர்
கள் இப்படியேசெய்யவேண்டும் இடர்வருங்காலத்தில் சேவகர்கள் உ
தவுவார்களென்று அரசர்கள்தாம்அபிமானத்தினால் இவர்களைப்பரிபா
லிக்கிறார்கள் அப்படிஉதவாவிட்டால்பரிபாலனத்துக்குப்பயனென்னே
யென்று இப்படிச்சொல்லிப்போய்க் கலகத்துக்கு ஆரம்பித்தது இந்
தரகசியம் இரண்டாம்பேருக்குத்தெரியாது அதனால்மற்றபறவைகள்
அதைக்கொல்லத் தீர்மானிக்க அப்போது மேகவர்ணன் நீங்கள் அவ
னைத்தண்டிக்கவேண்டாம் இவன் பகையாளிக்கு நன்மை பண்ணுகிற
துஷ்டனாகையால் இவனைநானே சிக்ஷித்துக் கோபம் ஆறுவேனென்
று சொல்லியெழும்பி மூக்கழகையால் அதைப்பொய்யாகக்குத்திச்ச
ங்கேதப்படி ஆலமரத்தின்கீழெறிந்து கூட்டத்தோடுகூடவேறிடத்தி
ற்குச்சென்றது பொழுதுபோனவுடனே ராக்கோட்டான் அவ்விடத்
திற்குவந்து மரத்தைச்சுற்றி முற்றுகை போட்டுக்கொண்டு காகங்க
ளைப் பார்க்கும்போது யாதொன்றும் அங்கேயில்லாமையால் தன்கூட்
டத்தைப்பார்த்துக்காகங்கள் எவ்வழியாய்ப்போயின அவ்வழி உங்க
ளுக்குத்தெரிந்திருந்தால் இப்போது அவர்களைக்கொல்லுவோம்பகை
வர்கள் துர்க்கமுதலியவற்றைச்சேர்வதற்குமுன்னே ஆனால் அந்தக்கூ
ட்டத்திலுள்ள காகங்களையெல்லாம் அல்லாமல்பின்பு வெல்லக்கூடா

தென்றுசொல்லிக்கொண்டு இருக்கையில் சிரஞ்சீவியென்னுங் காகம்
மெல்லெனகத்தினன் அதைக்கேட்ட மாத்திரத்தில் வெகுகோட்டா
ன்கள்போய் அதைக்கொல்லத்தொடங்குப்போது சிரஞ்சீவி அக்கொ
டியவன் எனக்கு இப்படிப்பட்ட அவஸ்தைவரப்பண்ணினன் ஆகை
யால் நான்உங்கள் அரசனைசரணமாக அடைகிறேனென்ன இதைக்கே
ட்டுசேவகர்கள் உருமர்த்தனனுக்குச்சொல்ல அவன் அதைக்கேட்டு
ஆச்சரியமாய் அதனருகேபோய் ஒசிரஞ்சீவியை கூப்பிக்கொண்டுமு
ன்னால் நீர்காகங்களை அடிக்கிறென்று கோபமாய் அந்தக்கொடியமே
கவர்ணன் உமமுடனேபோர்செய்ய ஆயுத்தப்பட அப்போது நானரா
சனே இது உனக்குத்தக்கதென்றுவலிபனுடனே எளியவன்போர்செ
ய்தால் விளக்கை அ க்க விட்டில்போய் அழுகிறப்போல்கெடுதியுண்
டாகும் ஆதலால் அவருடனே சமாதானம்பேசி அவர்கள்கேட்பதை
க்கொடுத்துப் புத்திமானனவன் உயிரைக்காப்பாற்றவேண்டுமேபணம்
எப்போதும் ஈட்டிக்கொள்ளலாமே உயிரிழந்தார் பெறக்கூடாதென்று
இப்படிச்சொல்ல என்னைநீபகைவர்பக்ஷமாய்பேசுகிறாயென்றவைது
இந்த உபத்திரவம்பண்ணினன் இப்போது உனக்கு உம்முடையதிரு
வடிகளே துணை எனக்கு இந்தக்காயமகுணப்பட்டால் காகங்களைமுழு
தையுங்கொன்று உலூகராசன் குருடிக்கண்ணன் கொடுங்கண்ணன்
கொள்ளிக்கண்ணன் குரூரநாசன் பிரகாசனென்னுந் தன்னுடையஐ
ந்துமந்திரிகளையும்பார்த்துச்சத்துருமந்திரியாகிய இவன்நமக்குக்கை
வசமானன் இவனை என்ன செய்யலாமென அப்போது குருடிக்கண்
ணன் இவன் அவனுக்குமுதல்மந்திரி காலவிசேஷத்தால் அவனுக்கி
வன்பிறதிகூலமாக்கோற்றப்பட்டான் அவன் ஒருநாளும் இவன்வா
ர்த்தைக்கு வேறுநடக்கிறவன் அல்ல ஆதலால்இவனைக்கம்பிடத்தி
ல்வைத்துக்கொண்டு இவன்கையாலேசத்துருவோடு சந்திசெய்யவே
ண்டும் இதுவேதக்கது சாமபுகலாக நான்குஉபாயத்தில் தண்டங்க
டைப்பட்டது ஆகையாலே அந்தப்பிரயோகங்கடைசிற்பண்ணவே
ண்டுமே கர்மத்தினல்செய்கிறகாரியம் எப்போதுங்கெடுகிறதில்லை ஆ
கையால் அவர்களிடத்தில் தண்டத்தை ஆலோசிக்கலாகாது சற்கரை
யைதின்று பித்தமபோவதனால் கைப்பானமருந்தையேன் தின்னவே
ண்டுமே ஆதலால்சாமோபாயமே என்சம்மதம் இதுவேநல்லதென இ
தைக்கேட்ட உருமர்த்தனன் இரண்டாம் அமைச்சனைப்பார்த்து உன
னுள்ளுறையேது அதைச்சொல்லெனக் கொடுங்கண்ணன்வேந்தனே
இக்காகங்கள் நமக்கியல்பான பகைவர்கள் ஆகையால் இவர்கள் சாமர்த்
தனங்கக்கதன்று தண்டமே தகுந்தது வெல்லக்கூடாத பகைவர்கள்
இருந்தால் அவர்கட்கு விரோதமாகிய தாயாதிகளை வருத்தவேண்டுமே
இல்லாவிட்டால் பணங்கொடுத்தாவது பொய்பத்திரம பிறப்பிக்கா
லது அவர்கள் ஒருவர்க்கொருவர் பகைபெறழுப்பவேண்டிய நடுவிற்
புகைசனுண்டானல் முத்தும் பந்தனைப்படுகிறது ஆதலால்இன்னதக

ரித்து என்சொல்லைக்கேட்டுச் சுயபக்ஷத்தை ரட்சித்துக்கொண்டு பரபக்ஷத்தைப் போக்கவேண்டும் இக்காகம் வைரியாயினுங்கொல்வதுதகாதென்று ஒருவேளைபகைவனும நன்மைசொல்லுகிறான் ஒரு திருடன் ஒருவனைப்பிழைக்கதும் ஒருராட்சதன் இரண்டுபசுக்களைப் பிழைப்பித்ததும அறியீரோவென அரசன் அதைக்கேட்டு அதெப் படியெனக் கொடுங்கண்ணன் சொல்லத்தொடங்கிற்று.

ஒருநகரத்திலிருக்கிற ஏழைப்பார்ப்பான் தனக்கொருவன்கொடுத்தபசுவின் கன்று இரண்டையும் புல்முதலானவைகள் போட்டுமிகவும் பெருக்கத்தொழுக்களைக்கதான அக்கடாரிகளைப் பார்த்து அவற்றைக்கொண்டுபோக ஒருதிருடன் தருமபெடுத்துக்கொண்டுபுறப்பட்டு வரும்வழியில் கோரப் பல்லும் நீண்ட மூக்கும் செம்பட்டமயிரும் சிவந்தகண்ணும் கறுத்தவுடம்புமாக இருக்கிறது ஒரு ராக்ஷதனைக்கண்டு பயந்து அவனைப்பார்த்து நீயாரென அவன் நன்சத்தியவசனனென்னும் ராக்ஷதன் நீயார்சொல்லென இவன்நான் திருடன் வழியில் பிராமணன் வைத்துக்கொண்டிருக்கிற பசுக்களை திருடப் போகிறேனென ராக்ஷதன் மித்திர அவ்வந்தணன பரிசுத்தன் ஆகையால் நானும அவனைத்தின்பேன் பின்பு இருவர்காரியமும் ஆகுமென இப்படி பேசிக்கொண்டிருவரும் அங்கேபோதும்போது அந்தணன் தூங்கிக் கொண்டிருந்தமையால் அவனைத்தின்ன இராக்கதன்போக அவனைப்பார்த்துச்சோரன் மித்திரா நான பசுவிரண்டையுங்களவு செய்தபிறகுநீ அவனைத்தின்னென ராக்ஷதன் சினேகிதனே பசுக்கூச்சலால்பார்ப்பான் விழித்துக் கொண்டால் நம்முடையகாரிய மெல்லாம் கெட்டுப்போம் ஆதலால்நான் முன்னே புசிக்கிறேன் பின்னர்நீ அச்சமில்லாமற்கோக்களைக்கொண்டு போவெனக்கள்ளன் நீ அவனைத்தின்னத்தொடங்கும அரவத்தாலவேறொருவன் வந்தால் அவன்என்னைக் கொண்டுபோகவொட்டான் ஆதலால பசுக்கள்இரண்டையுங்கொண்டுபோனபின்பு நீஅவனைத் தின்னென்று இப்படியிருவரும்வாதபரடக்கையில்அவ்வேதியன விழித்துக்கொண்டானப் போதுகள்ளன்ஓ பிராம்மணா இவ்வரக்கன் உன்னைத்தின்ன பேனென்றானென அதைக்கேட்டு இராக்கதன இக்கள்ளன் உன்மாடுகளைக்களவாடவந்தானென இப்படி இருவர்பேச்சையுங்கேட்டு பார்ப்பானேலூர்குவசம்பட்டு இஷ்டதேவதையைத் தியானத்தால இராக்ஷதனிலநின்றுந்தன்னைக்காம்பாற்றிக்கொண்டு கையில்தடியெடுத்துவந்து கள்ளனை அடித்துத்துரத்தினன் ஆதலால யாதொருவனும் ஒருக்கால்இதஞ்சொல்லுகிறானென்கிறேனென இப்படியவனுள்ளதையறிந்து அறிமர்த்தனன்கொள்ளிகண்ணனைப்பார்த்துநீ மனதிலுள்ளதைச் சொல்லுவாயென அவன்ம

காராசனே காமமும்போகமும்எனக்குடன்பாடல்லசமாதானத்தால் பகைவனுக்குச் செருக்குஉண்டாகும்மற்றும் உமதுபேதத்தை அவனிருந்தால் ஒருவேளைமோசஞ்செய்வான் ஆதலால்விவேகி கொடையால பகைவனைவாசம்பண்ணி ஆசையென்மேலும் பெருகச்செய்தால் பின்பு அவன்தனக்குத்தானேகைவசமாவான்மேலும் இவர்களோடு வருத்தமாய் நம்மிடத்தில் வந்தமையால் விரோதிகளிடத்தில் இருக்கிற துறைச்சல்களை அறிவித்து நமக்குச் சந்தோஷம்வருவிப்பான் அதுபற்றி இவனைபாதுகாக்கவேண்டும் இங்ஙனஞ்செய்தால் ஒருவர் ஒருவர் இன்சொற்களால் காலம்போக்குஞ் சம்பவிக்கும்மேலுந்தம்முடைய மர்மங்களையும்வெளியிட்டால் அவர்கள் வயிற்றிலிருந்தபாம்பும் நாசமடைந்தார்போல் கெடுவார்களெனஉலூகராசன் அதனெப்படியெனக்கொள்ளவிக்கண்ணன்.

விஷ்ணுவர்மனென்னும் ஒருமன்னனுக்கு வயிற்றிலொருநோயுண்டாகி நாளுக்குநாள்உடம்பு மெலிந்து போகிறதினால் அவன்தேசாந்தரங்கட்சப்போய்ஒருகோயிலிலிருக்கையில் இவ்வூரிலிருந்து அரசுசெய்துகொண்டிருக்கிறபலியென்பவனுடையகுமாரிகள் இருவருப்பலியினிடத்திற்வந்தபோது அவர்களில்ஒருத்தி அரசனைநோக்கிராசனே வெற்றியடைவாயென்றாள் மற்றொருத்தி நல்ல போகம்பண்ணுவாயென அதைக்கேட்டவுடனே அரசனுக்குக்கண்கள்சிவந்து அமைச்சர்களைப்பார்த்து இந்த கெட்டபேச்சுகாரியை நோயாளிக்குக்கொடுத்தால் இவள்நல்லபோகங்களை அனுபவிப்பாளென அமைச்சர்கள் இராசன் சட்டளைப்படியே கோயிலில இருந்தராசகுமாரனாகியபிணியாளனுக்கு அவளைக்கொடுத்தார்கள் பின்பவள் கணவனையீசுரனைப்போலெண்ணிப் பணிவிடைகள்செய்து அவனையிட்டுக்கொண்டு மற்றொருதேசத்திற்குப்போகும்போது வழியில்ஒரிடத்திலிறங்கிவேலைக்காரனைக்கூட அழைத்துக்கொண்டு சமையலுக்கானகடைசரக்குகள் வாங்கப்போனபோது வியாதிபஸ்தனாகிய ராசகுமாரன்நித்திரைபோனான் அவ்வேளை அங்கொருபுற்றிலிருந்த பாம்புராசன் கிட்டவந்துபேச அவ்வொலியைக்கேட்டு அவன்வயிற்றிலிருந்தபாம்படஞ்சத்தித்தது அப்போது இரண்டிற்கும்வாக்குவாதம உண்டாக இதற்குள்ளே அவன் பெண்டாட்டி வந்து மரத்தின் மாவில்நின்று அவற்றின்பேச்சுக்களைக்கேட்டுக் கொண்டிருந்தாள் புற்றுப்பாம்பு வயிற்றுபாம்பைபார்த்து அடா துராத்மாவே இந்த அழகுள்ள இராசபுத்திரனை என்வருத்துகிறாயெனவயிற்றரவு ஆகாரநிறைந்ததடத்தில இருந்தேற என்னை நீயேன்

நிற்கிறாயெனப் புற்றரவு துஷ்டா கடுகுதின்றனையால் நீ இறப்பாய் அ
வன் சுகமடைவான் இது ஒருவருக்குந் தெரியாதெனப் பயின் அவ்வயிற்
றரவு வெந்நீராலுனக்குமாயுர் வருமென இப்படி அவ்விரண்டு ரகசிய
ங்களைக்கேட்டு அவள் அவ்வண்ணமே செய்து அப்பாம்பைக்கொன்றாள் அ
தனால் மன்னவன் நோய்தீர்ந்து தன்னகரத்திற்கு மனைவியோடுகூட வ
ரும்போது அந்நெறியில் அவள் தந்தையுஞ் சுற்றமும் பார்த்து இரு
வருக்குஞ் சக்காரம்பண்ணி அவர்களை வழியனுப்பபின் இருவருந் தங்
கள் தேசத்துக்குப்போய் அரசாண்டிருந்தார்கள் ஆகையால் பரஸ்பர
மரகசியங்களைக் காப்பாற்றுவிடின் இப்படி நஷ்டம் நேரிடுமென இதை
க்கேட்டு அறைவன் குரூராக்ஷனைப் பார்த்து உன்னிடம் என்னவென அவ
ன் இம்மூவர்சொன்னது உத்தமமாகயிருக்கவில்லை சமாதான பேதமெ
ன்னும் உபாயங்கள் வலியில்லாதவர்களைக் குறித்திருக்கின்றன வலியு
ள்ளவர்கள் சத்துருக்களிடத்தில் தண்டமே செய்யவேணும் அதைத்
துறந்து சமாமுதலாகிய தந்திரத்தை யோசிக்கிறவனைப் பகைவர் பயந்
தவனென்றெண்ணி அவன்மேல் வருவார்கள் ஆகையால் வேந்தன் த
ண்டத்தினாலேயே பாக்கியஞ் சேர்க்கவேண்டும் பராக்கிரமமில்லா
விடில் எது தெய்வத்தால் நேரிடுகிறதோ அதை நுகரவேணும் மேலும்
உலகத்திலெல்லோரும் லட்சுமியை விரும்புவார்கள் அப்படி விரும்பி
னாலும் மனவூக்கத்தோடு தண்டத்தால் எதிரிகளை அவமானம் பண்ணு
கிறவர்களுக்கே லட்சுமி கைவசமாகிறாள் சோம்பலானவர்கள் அரு
மையான பொருளைக் குறித்து இலக்குமியைப் பிரார்த்திக்கிறார்கள் ப
ராக்கிரமமுள்ளவனே தன் சௌரியத்தினால் இலக்குமியைப் பலவித
மாக அனுபவிக்கிறான் ஆதலால் பலவான பகைவனைக் கொல்லவே
ண்டுமென இதைக்கேட்டு அரசன் பிரகாரகனைநோக்கி உன் மனதி
லென்ன இருக்கிறதென அவன் மகாராசாவே இவன் தங்களை அடைக்
கலமாக அடைந்தபடியினால் இவனைத் தலைவனாக்கி முற்காலத்தில் இரா
மச்சந்திரன் விபீஷணனைத் தலைவனாக்கி இராவணாதிகளை எப்படி அழித்
தானோ அப்படி சத்துருக்களைத் தாமழிக்கவேண்டும் மேலும் சரண
மடைந்தவனைக் கொல்லுகிறவன் ரௌரவநரகத்தை யடைவானென
று சிபிச்சக்கிரவர்த்தி தன்மாமிசத்தை வேடனுக்குக் கொடுத்துப் புறு
வை விடுவித்தானென்று பாரதத்திற் சொல்லியிருக்கிறது அப்படியே
ஒருவனிடத்தில் அடைக்கலனாய் வந்து நிற்கும்போது அவனுக்
கு ஆதித்தியஞ் செய்வதைக் குறித்து அவன் நெருப்பில் குதித்தானெ
ன இதைக்கேட்டு அரியர்த்தனன் அதெப்படி சொல்லெனச் சொல்லு
கிறது;

ஒருவனத்தில் ஒருவேடன் கையில் குருவிக்கூடுங் கண்ணியும்
தடி முதலான வேட்டைக்கருவிகளும் எடுத்துக்கொண்டு திரியாநிற்
கையில் அசதியிற்பெருமழை வந்து இருட்டிக்கொண்டு பிரளயகாலம்
போலக்காற்று எழும்ப அப்போது அவ்வேடன் நடுக்கமெடுத்து மர
த்தின் சார்பில் நின்று பகவானே இந்தவேளையில் உன்னைவிடவேறொ
ருவருங்காப்பவரில்லையென அவ்வேளையில் அம்மரத்தின்மேல் இருக்
கும்புறா தன்பெட்டை வரவில்லையென்று விசனமாய் இன்றைக்கு
என்னுயகிவரவில்லை அவளை யாராயினும் பிடித்தார்களோ என்னமோ
அவளில்லாமல் இவ்வனம் எங்கும் பாழாகத்தோற்றுகிறது மனையா
ளில்ல தவீடு சுடுகாட்டைப்போலிருக்கிறது கற்புங்கணவன் இன்புறு
ம்வகைச்செயலுமுள்ள இல்லாளையுடையான் எவனோ அவனே பாக்
கியவானென்று இப்படி அழுது புலம்புகிறதைக்கேட்டு அவ்வேடன்
கைக்கூட்டில் அகப்பட்டிருக்கிற பெண்புறா துக்கித்து முன்பிறப்பிற்
றீவினைசெய்தவர்களுக்குப் பலவகைப்பட்ட தலையுஞ் சிறையும் நோயு
ம் வருமையுஞ் சம்பவிக்கின்றன அதிருக்கட்டும் எச்சமயத்தில் எது
நேரிடுமோ அதெப்போதும் பிசகுகிறதில்லையென்று சொல்லிப் பிறகு
தன் பதியைக் குறித்து ஓ ஓ என் பிராணநாதா நமது வீட்டுக்கு வந்
த இவ்வேடனுக்குக் குளிர் முதலாகிய துன்பத்தை நீக்கி உதவிசெ
ய்யவேண்டும் வந்த விருந்தை ஒப்பாவிட்டால் அவன் தன் பாகத்தை
இவ்வாழ்வானுக்கு கொடுத்து இவ்வாழ்பவன் புண்ணியத்தைக் கொ
ண்டு போகிறான் ஆதலால் இவன் நம்முடைய பெண்டிரைப்பிடித்தா
னென்னுந் துக்கத்தை மனதில் வையாம லிவனுக்கு இயன்றமாத்தி
ரம் பூசிக்கவேண்டுமென இப்படிப் பெண்புறாவின் வாக்கியத்தைக்
கேட்டு வேடனை உன்வரவு நல்லவரவாக்கு நீ மனதிற் சிறிதும் ஐய
மில்லாமல் உன் வீடாக நினைத்து வேண்டுவதைக் கேளென வில்லிக்
கப்போதே என் குளிரைப் போக்கடி எனக் கப்போதும் காட்டில்
இருந்தொருகொள்ளி எடுத்துக்கொண்டு வந்து சருகுகளின்மேல்வை
த்து மூட்டி வேடனைப்பார்த்து நெருப்பு மூண்டெரிகிறது இதில் நீர் கு
ளிர்காய் முன் தீவினையால் நான் பறவையாய் இருக்கின்றமையால்
என்னண்டை உன் பசிக்கேற்ற பதார்த்த மில்லை இப்போது அனேக
துன்பங்கட்கு யிடமாய்ப் பரோபகாரமாகாமலு மிருக்கிற இச்சரீரத்
தை வைத்துக்கொண்டிருந்து பலனென்ன இதனால் நீவுன் ஆத்மா
வைச் சந்துஷ்டி செய்வீரென்று இப்படிச்சொல்லிக்கொண்டே பிறர்
உதவியின் பொருட்டு எரிகிற அக்கினியில் ஆனந்தத்தோடுவிழ அப்
போது வேடன் ஆ ஆ என்பொருட்டு இஃதுடலைத்திறந்தது மேலும்

நான் தீயொழுக்கம் உள்ளவன் வேறொன்றின் தசையினால் சீவனம பண்ணுகிறேன் பரோபகாரமுஞ் சிறிதாயினுந் தயையுங் கனவிலுமறி யேன் ஆதலால் ஊனைப்பெருக்கினபாவி கோரணாக காண்பித்ததனால் இதுமுதலாக பசி தாகம் குளிர் வெயில் பொருத்தல் இவற்றால் உட ம்பை உலர்த்தி நான் பாபமில்லாதவனாகக் கடவேன் என்று சொல் லிப் பச்சாதாபத்துடனே தன் கூடு தடி கண்ணி முதலான ஆயுதங்க ளைமுறித்து எறிந்து விட்டு அந்தப் பெண்புறாவை விட்டுவிட அது உயிரிலுஞ் சிறந்த தன்னாயகன் தருமத்தின் பொருட்டு உடலைக் கொ டுத்தானென்றெண்ணி அதுவும் அந்த நெருப்பிற் குதித்து இறந்தவு டன் அது ஒரு திவ்விய ஸ்திரீயாய்க் கணவனோடு கூடச் சொர்க்கத்து க்குப்போயிற்று வேடனும் இராகத்தினால் பரிசுத்தனாய் நெருப்பில் தேகத்தைப்போட்டு விட்டு நற்கதியை யடைந்தான் அதனால் அபய மென்று அடைந்தவர்களைக் காக்கவேண்டுமென இதைக்கேட்டு அரி மர்த்தனன் எனக்கு இப்படியே அபிப்பிராயம் இருக்கின்றது இவன் சத்தியவானும் புத்திமானுமாயிருக்கிறான் கபடியல்லன் இவற்றை அ றியாமல் மேகவர்ணன் அவனை மானபங்கஞ்செய்தான் இவனைக்கொ ன்றால் நான் விசுவாசகாதகனாவேன் பிரதி அத்தி கள்ளுண்டல் களா வாடல் இவற்றிற்குப் பிராயசித்தம் உண்டு விசுவாசகாதகத்துக்கு அ து இல்லையன்றோ ஆகையால் இவனுக்குச் சமானம் பண்ணி நமது கிறகத்தில் இட்டுக்கொண்டு போகவேண்டுமென்று உறுதிசெய்ய இ ராசன் சிரஞ்சீவியைப்பார்த்து சொல்லுகிறது நீ என் கோட்டையில் வந்து சுகமாயிரு நான் உன்னை பாதுகாப்பேனென இதைக்கேட்டு சி ரஞ்சீவிகளிப்புற்று மகாராசாவே நான் விஸ்தரித்துச் சொல்லுவது என்ன என் குடிப்பிறப்புப் பிரபுவுக்குச் சகவாசத்தால் வரத்தெரியு மென அப்போது குரூராசன் இப்போது கோட்டான் குலமெல்லா ம் ராசன் குற்றத்தால் பாழாகும் பிறர் குற்றங்களை அரசனுக்கு அறி விக்கவேண்டும் அரசன் அதைக்கேளாவிடில் அதற்கென்ன உபாயம் இருக்கின்றதென இங்ஙனம் சொல்ல அரசன் அதைக் கேளாமல் சி ரஞ்சீவியைத் தன் அரணியில் கொண்டுபோய் வைக்கப் பின்னர் சிர ஞ்சீவி நம்மைக்கொல்லவேண்டுமென்று அவன் எல்லாரிலும் கெட் டிக்காரன் மேலும் எசமானனுக்கு நன்மையே செய்பவன் மற்றவர்க ள் எசமானனைப்போல மூடர்களாகையால் அவனொருவ னில்லாவிடி லவர்களைவெல்வது அருமை அன்றென்று இப்படி மனதுக்குள் குதூ கலிப்புடனே ஆலோசித்துக்கொண்டிருக்கையில் அரிமர்த்தனன் கா ரியக்காரர்களைப்பார்த்து இச்சிரஞ்சீவிக்குத் துக்கமெல்லாம் காட்டுங் களென ராஜா கட்டளையின்படியெல்லாம் பார்த்து நாம் இதற்குள் இ

ருந்தால் நமது எண்ணம் முடியாது பின்னும் நம்முடைய வஞ்சனைக ளையும் தெரிந்துக்கொள்ளுவார்கள் ஆதலால் கோட்டைக்கு தலைவர்க ளில் இருந்து மனோபீஷ்டத்தை முடிக்கவேண்டுமென்று தனக்குள்ளே நிர்மானித்து அரசனைநோக்கிச்சொல்லுகிறது ராசனே நான் வாயசம் ஆதலால் உள்ளே இருக்கத்தக்கவனல்லன உமது கடைவாசல் காத் திருந்து கஷ்டமில்லாமல் சேவித்துக் காலம் தள்ளுவேனன்புள்ளவ னும் மனதழுக்கில்லாதவனுமாகிய சேவகனெங்கிருந்தாலும் சிரத்தை யில்லையென்று இவ்வண்ணம்சொல்லிக் காகமங்கேயிருந்தது அப்போ து குரூரநாசன் ராசா அமைச்சர்முதலிய நீவிரெல்லோரும் மூர்க்கர்க ளாயிருக்கிறீர்களென் றெண்ணுகிறேன் முற்கலத்தில் நடந்த ஒரு கதையுமிருக்கிறது முதல் மூடன நான் இரண்டாவது வேடன மூன் றுவது அரசன் நான்காவது அமைச்சனென்று சொல்லிவிட்டு ஒரு பறவைபறந்துபோயிற்றென அப்போது அவர்கள் அதெப்படியெனக் குரூரநாசன சொல்லுகிறது.

பொன்னாக எச்சமிடுகிற ஒரு பறவை மலையின்மேல் நெடுநாளா யிருக்கையில் அங்கே ஒருநாள்போனவேடன் அதுபொன்னாகமலவி சர்ச்சனம பண்ணப்பார்த்து மிகவும் ஆச்சரியமாய் நான் பாலியமுத் தலாகததிரிந்துவருகிற வெகுகாடுகளில் பார்த்து பலஜாதிப்பறவைக ளிலும் இப்படி ஒன்றைப்பார்த்ததில்லை ஆகலால் இதை உயிருடனே பிடித்துக்கொண்டு போவோமென்று எண்ணி மரத்தில் வலைகட்ட அ ப்போது இப்பறவை வழக்கப்படிவந்து சடுதியில் அவ்வலையிற் சிக்கி ற்று வேடன் அதைக் கூட்டிலடைத்து தன் குடிசைக்குக்கொண்டுவ ந்து இது நம்மிடத்திலிருப்பதை அரசனறிந்தால் இப்பறவையைக் கொண்டுபோவதுமன்றி நம்முயிரையும் வாங்குவான் ஆதலால் இக்கு ணநிதியை அரசனுக்குக்கொடுப்போம்மென்று நிச்சயித்துப் பறவை யைத்தந்து அரசனுடனே நடந்த செய்தியை விண்ணப்பம் பண்ண அப்போது அவன் இரத்தினம் இழைத்த ஒரு கூட்டில் வைக்க அ தைப்பார்த்து மந்திரி அசம்பாவிதமான இவ்வேடன்பேச்சைக்கேட் டு இதை ஏன் வாங்கினீர் விட்டு விடும் என இதைக்கேட்டு அப்பற வையை மன்னவன் விட்டவுடனே அது ராசன் அரண்மனைச்சிகரத்தி லுட்கார்ந்து முன்னே நான் மூடன் இரண்டாவது வலைக்காரன் மூன் றுவது இராசன் நான்காவது மந்திரி மூடர்களென்று இப்படிச் சொ ல்லிப் பறந்துபோய் விட்டதென்று இச்சங்கதியைச் சொல்லிப் பின் னிஷ்டமித்திரர்களைப்பார்த்து இன்றையவரைக்கும் இவ்விராசாவின் சார்பில் இருந்தேன் இனிவேறொரு மலையைச்சார்ந்து இருக்கவேண் டும் சரியானது குகையைப்பார்த்துக் குடிபுகுந்து சுகமடைந்தாற்

போல வருவதற்கு முன் ஆலோசிக்கிறவன் இன்பமடைவான் என அப்போது அவைகள் அதெப்படியெனக் குரூரநாசன் சொல்வான்.

ஒரு வனத்தில் வசித்திருந்த கிரகிரனென்னும் சிங்கம் ஒருநாள் இரைக்கு நெடுநேரந்திரிந்தும் யாதொருபக்ஷணமுங்கிடையாமையினால் பொழுதுபோனவுடனே ஒரு பெருங்குகையைப்பார்த் திதிலடைகிறதற்கு யாதேனும் ஒரு பிராணிவரும் அதைத்தின்று பசியாறலாமென்று தனக்குள் தீர்மானித்து அதில் ஒளித்துக்கொண்டிருக்கையில் அக்குகையில் வசிக்கிற அவிபுச்சனென்னும் நரிவந்து அங்கே சிங்கத்தின் காலடிகளைக்கண்டு சந்தேகித்துச் சிங்கம் இதிலிருக்கிறதையும் இல்லாததையுஞ் சோதித்து பின்பு உள்ளே புகவேண்டுமென்றெண்ணித் தூரத்தில் நின்றுகொண்டு ஓ குகையேயென்று இரண்டுதரங்கூவியழைத்துக் குகாய் நீ என்னோடு பேசாமலிருக்கிறதென்ன உனக்கும் எனக்கும் பிரதிதினஞ் சம்பாஷணை நடந்துக்கொண்டிருந்ததே இன்றைக்கேன் பேசவில்லை விரைவாய்ச் சொல் இல்லாவிட்டால் நான் மற்றோரிடத்திற்கு போய்விடுவேனென்று சொல்லி மீண்டுங்கூப்பிட்டது அப்போது சிங்கம் நினைக்கிறது இக்குகை நாள்தோறும் பேசிக்கொண்டிருக்கும் இன்றைக்கு நமது பயத்தினால் அவனோடே பேசவில்லை அதற்கு பதிலாக நாம் உத்தரங்கொடுப்போமென்று ஆலோசித்துப் பிரதித்தொனியினால் அங்கே இருந்த பிராணிகளெல்லாந்திடுக்கிடும்படி அந்த நரியைக்கூவ நரி அப்பா நான்பிழைத்தேனென்று வேறோரிடத்திற்கு ஓடிப்போய் விட்டது ஆதலால் யாதொன்றையும் முன்னே ஆலோசித்துச்செய்யவேண்டுமென்று தன் மித்திரர்கட்குச்சொல்லி அவர்களோடுகுரூரநாசமந்திரி தேசாந்திரம் போயிற்று பின்னர்க்காகமந்திரி இப்போது கூட்டத்தைக் கொல்வதற்கு வருத்தமில்லை விவேகமில்லாத மந்திரியையுடைய அரசன் சீக்கிரத்திற் கெடுவான் விவேகமந்திரி வஞ்சனையாக மித்திரர்களைப் பகைவரென்றறிந்துக்கொள்வான் அப்படி அறிகிறவன் இவனிடத்தில் இப்போது ஒருவனுமில்லை ஆதலால் நம்குலத்தின் மங்களத்தைக் குறித்து யாதாயினும் பிரயத்தனஞ்செய்யவேண்டுமென்று மனதில் நிச்சயித்து அன்றுமுதல் தினந்தினம் ஒவ்வொருவிறகு கொண்டுவந்து வழியண்டைபோட்டுக்கொண்டே வந்து போராகக்குவித்தமாத்திரம் அதைப்பார்த்துச் சூரியன் உதித்தவுடனே கோட்டான்களெல்லாங் குருடுகொண்டிருக்கையில் விறகுகளையும் சுள்ளிகளையும் குகையின்வழியில் கும்பலாகச்சேர்த்துத் தான் மெள்ள மேகவர்ணன் இடத்திற்குவந்தது அப்பொழுது மேகவர்ணராசன் என்னசெய்தியெனச்சிரஞ்சீவி நான் பகைவர்குலவேரைப் பிடுங்கத்தக்க உபாயஞ்செய்திருக்கிறேன் நீங்கள் ஒவ்வொருத்தர் ஒவ்வோர் எரிக்கொள்ளி விழுக்கடு

கொண்டுவந்து என் சாகையின்மேற்போட்டால் கோட்டான்கள் எல்லாம் இறக்குமென இதைக்கேட்டுக் காகராசனென்ன உபகாரஞ்செய்தாய் சொல்லென மந்திரிமகாராசாவே இது சொல்லத்தக்க சமயமன்று நான் சொல்லுகிற செய்தியைப் பகைவர் அறிந்து வேறோரிடத்தில் ஓடிப்போனால் நம்முடைய இத்தனைமுயற்சியும் வீணாய்ப்போம் போலும் கடிதிற்செய்யத்தக்க காரியத்தில் தாபஞ்செயலாகாதெனக் கேட்டு காகராசன் தன்பரிவாரத்தோடு எரிக்கொள்ளிகளைக் கொண்டுவந்து உலூகங்களிருக்குங் குகைவழியிற்போட அப்புகையினால் கோட்டான் பயந்து கலக்கமுற்றிரைச்சலிட்டுக்கொண்டு வெளிவழியே போகையில போக வழியில்லாமையால் அப்போது குரூரநாசன் சொன்னதை நினைத்துக்கொண்டு அவன் வார்த்தையை கேளாமைக்குப்பலன் இதுதானிதுதானென்று அழுகுரலோடு சொல்லிக்கொண்டிருக்கையில் நெருப்புச்சுவாலை யதிகரித்துக் கோட்டான்கள் இறந்தனபின்பு மேகவர்ணராசன் முன்விட்ட தன் மரத்திற் குடிம்பய்ச்சுகமாக இராச்சியத்தை அனுபவித்துக்கொண்டிருக்கையில் சிரஞ்சீவியைப்பார்த்து நீ பகையாளிவீட்டிலிருந்து எவ்வாறு காரியத்தை முடித்தாயெனச் சிரஞ்சீவி குரூரநாசன்தவிர மற்றவர்களெல்லாரு மூடராகையால் அவர்கள் அவன் புத்தியைக்கேளாமல் அவனை அவமானம்பண்ணி என்னைத்தங்கள் துற்கத்தில் இட்டுக்கொண்டுபோனார்கள் அதனால் அவன் தன் சிநேகம் பந்துக்களோடுகூட மறுதேயத்திற்குப் போனான் மற்றக்கோட்டான்கள் மூடராகையால் எரிந்தார்கள் இவ்வாறே முன் ஒரு காலத்தில் சத்துருநாசத்தின் பொருட்டு ஒரு கிருஷ்ணசற்பமந்த தவளைகளை தோளிற்சுமந்துகெடுத்ததென அதைக்கேட்டு காகராசன் நகைத்துப் பாம்பு தவளைகளை தோளிற்சுமந்து கொன்ற விதமென்ன சொல்லுமையாவெனச் சிரஞ்சீவி சொல்லலுற்றது.

ஒரு தேசத்தில் மந்தவிஷனெனும்பாம்பு இரைகிடையாமல் மிகவும் பசித்து ஓர் ஏரிக்கரையண்டைவரும்போது அதிலே தவளைகள் நிரப்பியிருப்பதைக்கண்டு இங்கே யாதொருகபடம் பண்ணினால் அல்லாமல் நமக்கு இரை அகப்படாதென நிச்சயித்து கண்ணைவிழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்க அப்போது ஒரு தவளை பாம்பே நீ இரைதேடுமுயற்சியைவிட்டு சும்மாயேன் உட்கார்ந்திருக்கிறாயென அதைக்கேட்டுச் சற்பம் அமாக்கியனாகிய எனக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கும் இன்றைக்குப் பிரதேசகாலத்தில் இரைக்காகத் திரிந்துக்கொண்டிருக்கையில் ஒரு தவளையைப்பார்த்து அதைப்பிடிக்கப்போகையில் அது அங்கிருந்து மிகவுஞ்சற்பாத்திரனாகிய ஒரு பிராமணனண்டை ஓடிப்போயிற்று அது தெரியாமல் நான் இங்கு மங்கும் பார்த்துக்கொண்டிருக்கையில் அங்கே நீராடிக்கொண்டிருந்த ஒரு பிராம

ணப்பிள்ளையின்காலை இதுதான் தவளையென்று நினைத்து அவன்கலை
கடித்தேனவனக்கணமேயிறந்தான் அப்பிள்ளையின் பிதா மிகவுந் துக்
கத்தாலே என்னைப்பார்த்துத் துஷ்டப்பாம்பே யாதொருகுற்றமுஞ்
செய்யாத என் பிள்ளையைக் கடித்தபடியினால் நீ மண்டூகங்களுக்கு
வாகனமாகக்கடவாயென்று இப்படி சபித்ததினால் நான் உங்கட்கு ஊ
ழியஞ்செய்யவந்தேனென்று இங்ஙனம் அப்பாம்பின்பேச்சைக்கேட்
டு அது எல்லாத்தவளைக்குஞ்சொல்லத் தவளைகளெல்லாம் தங்கள் அ
ரசனுடனேகூட வெளியே வந்து மிகவுங்களிப்புடனே அந்தவிஷசற்
பத்தின்மேல் உட்கார்ந்தன அது அவ்வற்றிற்குப்பலவிதநடைகளைக்கா
ண்பிக்கும்போது தவளைகள் யானை குதிரை தேர்களிலும் இவ்வாக
னம் நன்றாயிருக்கிறதென்று மெச்ச சந்தோஷிக்கப் பின்பு அந்த பா
ம்பு இரண்டு மூன்று நாள்வரைக்கும் இப்படியே நகர்ந்து பிறகு மந்
தகதியாய்ப்போகத் தொடங்கிற்று அப்போது புசங்கம் நான் பசித்தி
ருக்கிறதினால் நடக்கக்கூடவில்லையென மண்டூகராசன் நீ சிறு தவளை
யாகப்பார்த்துத் தின்றுக்கொண்டிருவென இதைக் கேட்டுச் சற்பம்
எனக்கு இவ்வண்ணமே அந்தணன் சாபமிருக்கிறது அப்படியே தா
ங்கள் கட்டளையிட்டீரென்று சொல்லி நாள்தோறும் தவளைகளை தின்
றுக்கொண்டிருக்கும்போது அங்கே வேறொராவுவந்து இதன் நடத்
தைப்பார்த்து நம்முடைய க்ஷணங்களை நீயேன் சுமக்கிறாய் இது மிக
வும் வருத்தம் உனக்கு இது யோக்கியம் அன்று என அதற்கு வந்த
வுடன் நானிவையெல்லாமறிவேன் சிலநாளில் என் கருத்து நிறைவே
றும் அக்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேனென்று இவ்
வாறுசொல்லிப் புன்சிரிப்புடனே பழையபடி நடந்துக்கொண்டிருந்த
து எல்லாமண்டூகங்களையும் தின்று கடைசியில் அவற்றின் அரசனை
யும் பக்ஷித்து எந்தச்சமயத்தில் செய்யவேண்டுமோ அப்படிச்செய்து
சத்துருக்களை தேகத்தோடுகூட நாசம்பண்ணவேண்டும் நெருப்புத் தன்
பராக்கிரமத்தாற் காடுமுழுதையுந் தகிக்கிறது மாவேர் நல்பூமியிலிருக்
கின்றன மிருதுத்தன்மையினால் தண்ணீருங்காற்றுஞ் செடிமரங்களை
வேரோடுபிடுங்குகின்றனவென இங்ஙனம அதன வாக்கியங்களைக்கே
ட்ட மேகவர்ணன கடையானவர் இடையூறுவருமென்று பயத்தினா
ல் காரியங்களைத்தொடங்குகிறதில்லை இடையானவர் காரியங்களைத்
தொடங்கி விக்கினம் வந்தால் விட்டுவிடுகிறார்கள் ஆயிரமிடையூர்கள்
வந்தாலும் எடுத்த கருமத்தை முடிக்கிறவர்கள் தலையராவர் ஆதலா
ல் நீ அநேகவித கஷ்டப்பட்டுப் புத்தியினாலே வெகு பகைவர்களைக்
கொன்றாய் இது யோக்கியமாகவேயிருக்கிறது சத்துரு அக்குணி இர
ணம் இவற்றின் சேஷம் வைத்தால் மீண்டு வளருமென்று அறிந்துநீ
வைரியைக்களைந்தாய் ஆயுதத்தால் ஒருவன் சாகிறான் புத்தியினால் அ
னேகம்பேயா ஒருமிக்கச் சாகிறார்களென்று இராசன் சொன்ன மொ
ழியைக்கேட்டுச் சிரஞ்சீவி எல்லாம் உன் பிரதாபத்தாலாயிற்று உன்
னைப்போல் இருக்கிற சத்துருக்களுக்கு ஈசுரனும் விதியும் நல்லபுத்தி
யைக்கொடுக்கும் அசத்துக்குத் துற்புத்தியைக்கொடாநிற்கும் இது

லெல்லாமல் தடியெடுத்துக்கொண்டடிக்கிறதில்லை நாமுனதை அனுசரித்துக்கொண்டிருக்கிற பதியிலதனால் பயன்களை அடைகின்றார்களென்றிப்படிச்சொல்லி மேகவர்ணன் அம்மரத்தின்மேற் சுகமாய் அரசுசெய்துக்கொண்டிருந்தது.

இங்ஙனஞ் சோமசன்மா இராசகுமாரர் கட்காக கூகையின் கதையாகச் சந்திவிக்கிரகமென மூன்றாந்தந்திரஞ் சொல்லினான்.

மூன்றாவது-சந்திவிக்கிரகம்-அல்லது- அடுத்துக்கெடுத்தல்

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

நான்காவது

லப்தஹானி.

---

அல்லது-பேறழிவு.

சோமசன்மர் அரசகுமாரரைநோக்கி இடருறுகாலையில் அறிவு குன்றாதவன் குரங்கு முதலையினின்று விடுபட்டாற்போல பெருந்துன்பத்தில் நின்று மீளுவானெனச் சிறுவர்கள் அதெவ்வண்ணஞ்சொல்வாயென ஆசிரியன சொல்லலுற்றனன்.

கங்கைக்கரையில் நாவல் மரத்தின்மேல் சுமுகனென்னும் ஒரு வானரம் சிலகாலம் வாசம்பண்ணிக்கொண்டிருக்கையில் அங்கே வந்த ஓரிளைத்தமுதலையைப்பார்த்து நீ என்கிருகத்துக்கு விருந்தாகவந்தமையால் உனக்கு நாவற்பழந்தருகிறேனென்று சிலபழங்கொடுக்கத்தின்று அத்தியந்தசந்தோஷத்துடனே தன்னிடத்திற்குப்போய் அன்

ருதொடங்கித்தினந்தினம்வந்து நானாவார்த்தைகள் பேசிக்கொண்டு
இரண்டிரண்டுபேரும் அந்நியோன்னியமாய் இருக்கையில் ஒருநாள் முதலை சிலக
னிகள்கொண்டுவந்து தன் இல்லாட்குக்கொடுக்க அது தின்று அக்க
னி அமிர்தம்போலிருக்கக்கண்டு தன்னுடையகணவனைப்பார்த்து பிராணநாதா
இந்தத்தித்திப்பானகனிகள் எங்கிருந்துக்கொண்டுவந்தாயென ஆண்முத
லை சுமுகனாமென்னும் என்னண்பன் எனக்குநாள்தோறுங்கொடுக்க
நானங்கேதானே அவற்றைப் புசித்துக்கொண்டுவந்தேன் இன்றைக்
குதின்றுமிருந்ததை உனக்குக் கொணர்ந்தேனென்ன இம்மொழிகளைக்
கேட்டுப் பெண்முதலை இத்தீங்கனிதின்பவன் ஈரல் அமிர்தத்திற்கொ
ப்பாயிருக்கும் அதைக்கொணர்ந்து எனக்குக்கொடு அதனால் மூப்புச்
சாக்காடில்லாமல் உன்னோடு நெடுங்காலஞ் சுகித்திருப்பேனென்ன இ
தைக்கேட்டுமுதலை எனக்கு உயிருக்குயிராயிருக்கிற நண்பனாகியவான
ரத்துக்கு நீயேன் இந்தத்தீங்கு நினைக்கிறாயென அது நான் உனக்கு
அகத்தியமாயிருந்தால் அதன்கலைக் கொணர்ந்துக்கொடு இல்லாவிட்
டால்நான் உயிர்வைத்துக்கொண்டிரேனென்ன ஆண்முதலைதாயேசகோ
தரனிடத்திலும் மித்திரன் அதிகமாதலால் அவனைக்குறித்து நீ அட
ம்பண்ணவேண்டாமென்று கோவாக்கட்டையைப் பிடித்து வேண்டி
க்கொள்ள பெண்முதலை நீ என்றைக்கும் என்பேச்சிக்குக் குறுக்காக
ச்சொன்னதில்லை இன்றைக்குமாத்திரம் என்னகுறைச்சல் பண்ணுகி
றாய் ஆகலவிதோ நான் சீவனைவிடுகிறேனெனப் பிடிவாதஞ்செய்யக்
காரர் பெண்ணின் நிச்சயத்தைஅறிந்து அச்சுமுகன் எனக்குச் சொ
ல்லக்கூடாதவனாயிருக்கிறான் நீபாபிடித்ததை விடாமலிருக்கிறாய் ஆக
லால் நான் இருதலைக்கொள்ளி எறும்புபோல ஆயினேனென்று இங்
ஙனஞ்சொல்லிச் சுமுகனிடத்திற்குப்போயிற்று அப்போது சுமுகன்
நண்பனே இன்றைக்கேன் விசனமாயிருக்கிறாயென முதலை மற்றொ
ன்றுமில்லை உன்மச்சினிச்சி என்னைப் பார்த்து துஷ்டா நன்றிகெட்ட
வனே நீயாராலே சீவனம்பண்ணுகிறாயோ அவனை ஒருநாளைக்காயி
னும் நமது வீட்டிற்கு அழைத்துவந்து விருந்திடவேண்டாமா அவன்
வீட்டுக்குமாத்திரம் வெட்கமில்லாமல்போய் நல்லபழங்களைத்தின்னு
கிறாயேயென்று இப்படித்திட்டிக் கோபித்தாள் ஆதலால் நீ என்வீட்
டுக்குவா என்னைக் குறித்துப் பலபல பதார்த்தங்கள் தேடிவைத்துக்
கொண்டு வழிபார்த்து உட்கார்ந்துக் கொண்டிருக்கிறாளென்ன வான
ரம் நண்பனே எனக்குத்தண்ணீரில வரக்கூடாது நீ என்பிரியமுள்ள
மச்சினிச்சியை அங்கே கூட்டிக்கொண்டுவாவென மகாச்சுகமுடனே
நான் கங்கைக்கரையிலிருக்கிற நீ என் முதுகின்மேல் உட்கார்ந்துக்
கொண்டுவர நோவாமல் கொண்டுபோவேனென அதில் நம்பிக்கை
வைத்துக் குரங்கு அப்படியே உட்கார்ந்துக்கொண்ட மாத்திரத்தில்
முதலைத் தண்ணீரிற் குதித்துப்போகையில் வானரம் எனக்கு அச்ச
மாயிருக்கின்றது மெள்ளமெள்ள நடவென்றது அதைக்கேட்டுமுதலை
இப்போதுசுகமுடன் நம்முடைய ஆதீனத்திலிருக்கிறான் இனியவனு
க்குநம்கருத்தை இவனிடம்வெளிவிடுவதற்குக்குறையென்னவிருக்கிற

உரலிலகப்பட்டது உலக்கைக்குத் தப்புமாவென்ன இங்கனந்தனக்
குள்தீர்மானித்துக்கொண்டு மித்திராஉன்னிஷ்டதேவதையைநினை
பெண்சாதியின் பிடிவாதத்தால்உன்னைக்கொண்டுபோகிறேனெனக்
குரங்கு நானென்ன பிழைசெய்தேனென முதலைநீநேற்றுக்கொடு
த்த மாதுளங்கனிகளை என்மனைவிதின்று அதன்மேல் இத்தன்மை
யான தீங்கனியைத்தினந் தின்னுகிற பாக்கியவான் ஈரல் கேவலம்
அமிர்தத்தை ஒத்திருக்கும் ஆதலால் நீஅவன் ஈரலைஎனக்குக்கொ
ணர்ந்து கொடாவிடில் நான் பிராணனை வைத்திரேனென்றாள் அ
தைக்குறித்துத் தான் உன்னைக்கொண்டுபோகிறேனென அதைக்
கேட்டு வானரம் ஓகோ இப்படியன்று எனக்கு முன்னமே தெரிந்
தால் அந்த மரத்தின்மேல் ஒளித்துவைத்திருக்கிற அந்தஈரலை
உனக்கு அங்கேயே கொடுத்திருப்பேன் என்னை வீணாகக்கொண்டு
வந்தாயெனக் கிலேசப்பட அப்போ மகரம் என்மித்திரா அதை
கொடுத்தால் அவள்சந்தோஷமாவாளென்று சொல்லி வானரத்
தை அதிசீக்கிரத்தில் முன்னிடத்திற்குகொண்டுவந்து விட்டவுட
னே வானரங்குதித்து மரத்தின்மேலேறிக்கொண்டு இன்றைக்குக்
காலன்கையிலிருந்து விடுபட்டேனென்று எண்ணிக்கொண்டிருக்
கையில் முதலைமித்திரா ஈரலைச்சுருக்காய்க்கொடு உன் அண்ணியா
ருக்குக் கொடுத்துவிட்டு வருகிறேனெனக்கேட்டு வானரம் நகைத்
து மூடா துஷ்டா ஈரலுடம்பை விட்டிருக்குமா அதிருக்கட்டும்
நீவிசுவாசகாதகனாதலால் இங்கிருக்கவேண்டாம் சீக்கிரத்திலும்
புறப்பட்டுப்போ உன்னைப்பார்க்க என்கண் நாணுகின்றதென்று
இங்கனம் சுமுகன் சொன்னவுடனே முதலைப்பச்சாதாபப்பட்டு
நான் இவனுக்குவழியில உண்மைசொல்லிவிழுந்தேன் இப்போது
மறுபடி விசுவாசம்வரப்பேசி இவனைக்கொண்டுபோகவேண்டுமெ
ன்று ஆலோசித்து மித்திரா நான் உன்னைப் பரீட்சிக்கலாமென்று
இவ்வாறு சொன்னேன் மேலும் உலகத்தில்நடவாத உன்பேச்சை
நிசமென்றெண்ணித் திருப்பிக்கொண்டு வரவில்லை ஈரல்சரீரத்தை
விட்டு வேறிடத்தில் இராதென்பது சிறுபிள்ளைக்குந் தெரியாதா
நான் இதுவிளையாட்டுக்குச் செய்தேன் ஆதலால் நீஎன்வீட்டுக்குக்
கிலேசமும் பயமுமில்லாமல்வா உன்பொருட்டு என்பெண்டாட்டி
வழிநோக்கிக் கண்பூத்துப்போகக்காத்துக்கொண்டிருக்கிறாளெனச்
சுமுகன் பசித்தவனதுவிசுவாசத்தில் நம்பிக்கைவிடலாகாதென்று
பிரியதரிசனனைக் கங்காதத்தன் அஞ்சி மீண்டுங் காணவில்லையென
அப்போது முதலை பிரியதரிசனனுக்கு அவனேனஞ்சினனென
வானரஞ் சொல்லலுற்றது.

ஒ கிணற்றிலிருந்த கங்காதத்தன் என்னும் ஒருபெருந்தவளையை மற்றைத்தவளைகள் மிகவும் வருத்தப்படுத்திக்கொண்டு இருக்கிறதினால் அதுராட்டினத்தொட்டி நெறியே வெளியில்வந்து இந்தத் தாயாதிகள் வலியரும் பலருமாய் இருக்கிறார்கள் இதற்குஎன்னசெய்வேனென்று எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் ஒருபாம்பின் புறஃபப்பார்த்து வழிப்போக்கர் காலில்தைத்தமுள்ளை முள்ளாலேயே வாங்குகிறதுபோல் இந்தப்பாம்பை நமது வீட்டுக்குக்கொண்டுபோய்ப் பங்காளிகளைக்கொல்லவேண்டுமென நிச்சயித்து வளையின்கிட்டயிருந்து பாம்பைக் கூவப்பாம்பு அவன் மாந்திரிகனோடு நம்மைக்கொல்லவுந்தானோ கூப்பிடுகிறவன் இன்னவனென்று தெரியவில்லை ஆதலால் இவனை இங்கிருந்தே கேட்கவேண்டுமென்று தீர்மானித்து நீயாரென மண்டூகம் நான் கங்காதத்தன் என்னும் மண்டூகராஜன் உன்னைச் சரணமாக அடைந்தேன் எனக்கேட்டு பிரியதரிசனன் நெருப்புத் துரும்புகளில் சேர்க்கைநில்லாததுபோல நானும் பரமசத்துருவா யிருக்கையில் நீ இங்கேவந்து இந்தவிபரீத சம்பாஷணம் என் பண்ணுகிறாயெனக் கங்காதத்தன் என்சன்மசத்துரு என்பது மெய்யே ஆனாலும் வலியபகைவர்களைவைரிகளைக்கொண்டே அடிக்கவேண்டுமென நீதிநூலிருக்கிறதெனக்கேட்டு இச்சற்பம் என்வரவு அங்கெப்படிக் கிடைக்குமெனமண்டூகம் உன்னைநான் அனாயாசமாகக்கொண்டுபோவேனென அதைக்கேட்டுப் பிரியதரிசனன் நாம் தீனியைக்குறித்து என்றைக்கும் விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறோம் அவ்வாகாரந்தானேவந்து இறைக்கு நம்மையழைத்துக்கொண்டுபோக யிருக்கையில் ஆலசியம்என் பண்ணவேண்டும் வலியவந்தசீதேவியை வேண்டாமென்று தள்ளலாமாயென்று தனக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு தவளையின் பின்னேவரத் தவளை அதை இராட்டினத்தின் வழியாய்க்கொண்டுபோய் தன்வீட்டில் வைத்துக்கொண்டது அந்தப்பாம்பு தவளைகளையெல்லாந் தின்றது பிறகு கங்காதத்தனைப்பார்த்து மித்திரா உன்சத்துருக்களை யெல்லாங்கொன்றபடியினால் எனக்கேதாவது ஆகாரங்கொடுவெனத் தவளை நீ உன்சிநேகிதன் காரியத்தைச்செய்தாய் இப்போது வந்தவழியே வீட்டுக்குப்போகலாமென அதைக்கேட்டுப் பாம்பு கங்காதத்தா அந்தப்பிலத்தில் வேறே யேதாவது தங்கியிருக்கும் யான் அங்கேபோ யென்னசெய்வேன் நீயே என்சமுசயத்திலிருந்து நித்தியம் எனக்கு ஒவ்வொரு தவளைகொடுத்துக்கொண்டுவா இல்லாவிட்டால் நான் எல்லாரையும் ஒருங்கேகொல்லுவேனென இவ்வுத்திரவைக்கேட்டுக் கங்காதத்தன் பயப்பட்டு நிதம்ஒவ்வொரு தவளைவிழுக்காடுகொடுத்துதின்று கடைசி

யில் ஒருநாள் கங்காதத்தன் புத்திரனையுந்தின்றது அதைக்கங்கா
தத்தன்மனைவி பார்த்து மிகவும் இடும்பையுற்று கங்காதத்தரே
நீரிக்கொடியவனைக் கொண்டுவந்து குலத்தை நாசம்பண்ணிநீர்இனி
இவ்விடம்விட்டுப் புறப்படும் இல்லாவிடில்இவனைக்கொலைசெய்யச்
சூழ்ச்சிசெய்யுமென இதைக்கேட்டு ஆராய்ச்சிசெய்துக் கொண்டி
ருக்கையில் பாம்பெனக்கு ஏதாயினும் தின்னக்கொடுவெனக்கங்கா
தத்தன் மித்திரா நானிருக்கையில் நீதீனிக்கேன் விசாரப்படுகிறாய்
இப்போது என்மனைவியையனுப்பி வேறுகிணற்றிலிருந்து இன்ன
ம் மண்டூகங்களை யழைப்பிக்கிறேன் அதுவரையும் நீசும்மாயிருவெ
னக்கேட்டுப் பிரியதரிசனன் நீஎனக்கு அன்னதாதா பிதாவாகயி
ருக்கிறாய் உடனே தவளைகளை அழைப்பியெனப் பின்னர்மனைவி
யை மற்றொரு கூபத்தில் போக்கிப்போனவள் இன்னும்வரவில்லை
நானேபோய் அனேகந் தவளைகளைக்கொண்டு வருகிறேன் நீ இங்
கே சுகமாயிருவென்றுசொல்லித் தானும் இராட்டின்வழியே புற
ப்பட்டுப்போயிற்று அன்பு பிரியதரிசனன் தவளையைக் குறித்து
வழிபார்த்துக்கொண்டு அங்கேயிருந்து அப்படிவெகுநாள்கழிக்கை
யில் மற்றொருவளையிலிருந்து பல்லியைப்பார்த்துப் பிரார்த்தித்து
ஓபல்லியே உனக்குங் கங்காதத்தனுக்கும் மிகவுஞ் சிநேகமாகை
யால் அவனிருக்கிற இடத்திற்குப்போய் உன்னைப் பிரியதரிசனன்
அழைக்கிறானென்றும் இனி உனக்குத் துரோகம்பண்ணினால்என
க்கு ஆணையிருக்கிறது நீ மனதில் சிறிதும்ஐயப்படாதேயென்றும்
இவ்வாறுசொல்லெலன அதன் உத்தரவைப் பெற்றுக்கொண்டு அக்க
வுளி கங்காதத்தன்பாறபோய் எல்லாச்செய்தியுஞ் சொல்லக் கங்
காதத்தன் பசித்தவன் விசுவாசத்தை நம்பலாகாது நீபோய்ப் பிரி
யதரிசனனை உடனே துஷ்டா இனிகங்காதத்தன் வாரானென்று
சொல்லிக் கவுளிபோய்ப் பாம்புக்கு இவற்றையெல்லாஞ் சொல்லி
ற்று அப்படிப்போல நான்மீண்டும் உன்வீட்டுக்குவரமாட்டேனெ
ன இதைக்கேட்டு முதலை நீவராவிடில் எனக்கு நன்றிமறந்தமை
சம்பவிக்கும் ஆதலால் நான் பட்டினியிருந்து உன்னைக்குறித்து இ
ங்கேயே பிராணனைவிடுவேனென அப்போது வானரமானது நரி
நீள்செவியனுக்கு நம்பிக்கைவருவித்து அதுஎப்படிக்கொன்றதோ
அப்படிநீயும் என்னைக்கொலைசெய்ய விரும்புகிறாயென முதலை. அ
தைக்கேட்டு அதெப்படியெனக் குரங்கு சொல்லுகிறது.

ஓரடவிலிருக்கின்ற காராளகேசரியென்னுஞ் சிங்கத்துக்குத்
தேகம் ஏதோகுணமில்லாதிருந்தமையால் தூசாளஎன்னும்நரியை
ப்பார்த்துப் பிரதானியே இன்றைக்கு எங்கும் போகக்கூடாது
நீயேபோய்யாதாயினும் இரைகொண்டுவாவென நரிநாலண்டையும்

ஓடித்திரிகையில் ஒரு கழுதைப்பார்த்து மாமாகும்பிடுகிறேன்நீஇப்போதுமிகவும் இளைத்துப்போனாயென அப்போதுகழுதை மருமகனே என்னசொல்வேன் எனக்குத்தலைவன் வண்ணான் அவன் அத்தியந்த கண்டகன் என்மேல் பெருஞ்சுமைகளைப்போட்டுக் கொல்லுகிறதே வயிற்றுக்குப் புல்லுச்செத்தை போடுகிறதில்லை புழுதியிலிருக்கும் அருக்கங்கட்டையைத்தின்றுக்கொண் டிருக்கிறேன் அதுவுடம்புக்கு எங்ஙனம் புஷ்டிகொடுக்கும் என்பிழைப்பொரு பிழைப்பாயென நரியிப்படி யிருந்தால் நீ என்னோடுகூடவா ஆற்றங்கரையில் பச்சைப்புல்நிரம்ப இருக்குமிடம் உனக்குக்காண்பிக்கிறேனென அதைக்கேட்டுக் கழுதை அவ்விடம் நன்றாயிருக்கும்அங்கேநான் ஒண்டியாயெப்படி யிருப்பேனென தூசரன் மாமா அங்கேபுருஷனில்லாமல் விஸ்தாரமாயிருக்கின்ற பெட்டைக்கழுதைகள் எங்களுக்குத்தக்கபுருஷன் அகப்பட்டால் கொண்டுவரவேண்டுமென்று எனக்குச் சொல்லியிருக்கின்றமையால் உனக்கு உரைத்தேனென அதைக்கேட்டு ஆசையினால் கர்த்தபம் பின்னேபோக அதைக்கண்டு சிங்கம்பாய்ந்தவுடனே நீள்செவியன் ஓட்டம்பிடித்தது பின்னால் நரிகோபித்துக்கண்டீரவத்தைப்பார்த்து இன்றைக்கு உன்வீரத்தை நான்பார்த்தேன் உன்முன் எதிர்ப்பட்டகழுதையும ஓடிப்போயிற்று இனி நீயானையை எவ்வாறடிப்பாயெனஅதைக்கேட்டுக் காராளகேசரி தலையிற்சுகமாயிருக்கிறமட்டும் நரிமற்றும் ஒருதரம் நானவனை உன்னண்டைகொண்டுவருகிறேன்அப்போதாயினும் ஏமாறாமல் அவனை யடிக்கவேண்டுமென்றுசொல்லி நீள்செவியனருகேபோய் நீயேன் ஓடிப்போகிறாயெனக் கழுதைமருமகனே என்னையிந்நேரம் எமன்வாயில் கொடுத்திருப்பாய் அதிஷ்டத்தினால் பிழைத்தேன் வச்சிரம்போல் நகத்தையுடைய அப்பிராணியாரென அப்போது நரிநகைத்து அம்மான் அந்தப்பெண்கழுதை உன்னைப்பார்த்து மிதமற்றசலிப்போடே உன்னண்டை வருகையில் நீ வீணாய்ப்பயந்து ஓடினாய் இப்போது நீள்செவியன் என்னைக்கலியாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் நான் உயிரைவைத்திரேன் என்று நிச்சயித்திருக்கிறபடியால் நீவிரைவாய்வரவேண்டும் வராவிடில் பெண்குலை நேரிடுவதன்றிக் கர்மதேவனாலும் சபிக்கப்படுவாய் அவன் மூத்திரை சர்வார்த்தசாதனமான ஸ்திரீவடிவாயிருக்கிறதை அவமானம் பண்ணுகிறவர்களைக் கடைச்சாம்பவாட்டியாக்கிக் காமதேவன் காட்டில் அனுப்புவானென்று இப்படி நரி உரைக்கக்கேட்டுக் குண்டுக்கழுதை அதன்பின்னேபோகச்சிங்கம் தட்சணமே அடித்து நண்டைசுட்டு நரியைக்காவல்வைத்துநீராடப்போக இதற்குள்ளேநரி அதன் ஈரலையுங் காதையுந்தின்றபின் சிங்கம்வந்து பார்க்கையில் ஈரலுங்காதும் இல்லாமையால்சம்புகத்

தைப்பார்த்து இதை யார்தின்றதென நரியிக்கழுதைக்கு ஈரலும் காதுமில்லை இருந்தாலாவதுமறுபடியும் உன்னண்டைவருமாவென அது இதை உண்மை யென்றுநம்பி நாக்குள்ளமாம்சம்பாகங்கொடுத்து மற்றதைத்தின்று அப்படி நீயென்னைகொல்ல விரும்புகிறு யென முதலை எவன் தன்பிரயோசனத்தைவிட்டு உள்ளத்தைச் சொல்லுகிறனோ அவன் யுதிஷ்டிரனென்னுங் குசவனைப்போல துன்பமடைவானென வானரம் தெப்படியென்று கேட்க மகரஞ் சொல்லுகின்றது.

ஒருகுப்பத்தில் யுதிஷ்டிர னென்னுங் குயவன் பானைகளைஎடுக்கையில் ஓட்டாங்குச்சி யொன்று கபாலத்தில் தாக்கி கத்திவெட்டுப்போல் காயம்பட்டது பிறகு சிலநாள்கழித்து அத்தேசத்தில் கருப்புவந்தமையால் அவன் மறுதேசத்திற்குப்போய் இராஜனிடத்தில் சேவகத்திலமர அவ்வரசன் அவ்வடுமையைக்கண்டு இவன் போர்க்களத்தில் முன்காயம்வாங்கின சூரனென்று யெண்ணி அவனை மிகவும் உபசரித்து அவனிடத்தில் தயையாயிருந்தான் அதுமுதற்கொண்டு மற்றச்சேவகர்கள் பொறுமையாயிருக்கத்தலைப்பட்டது இராசன் தயையிருக்கையால் ஒன்றும் பேசாமலிருந்தார்கள் அப்படி யிருக்கையில் ஒருநாள் இராசன் ஏகாந்தமாயுதிஷ்டிரனைப்பார்த்து உனக்குக்கத்திவெட்டு யாருடையசண்டையில் பட்டதென குசச்சேவகன் ராஜனே நான் சூளைபோட்டுக்கொண்டிருக்கையில் விழுந்து ஓடுபட்டு இக்காயம்பட்டதென இதைக்கேட்டமாத்திரத்தில் ராஜன் நாணிக் குலாலனைப்பார்த்து நான் மோசம் போனேன் இது இரண்டாம்பேற்குத் தெரிவதற்குள்ளே நீஓடிப்போ இதைச்சூரர்கள்கண்டால் நீ உன்னுயிரைக் காணமாட்டாயெனக் குயவன் சுவாமி என்கைகால்களைக்கட்டி ரணக்களத்திற்போட்டு என் அஸ்தலாகவத்தைப் பார்த்தருளும் வாய்புளித்ததோ மாங்காய்புளித்ததோயென்று சொல்லலாமோ ராசன் நீ சிறந்த குலம் போற்களத்தில் வருவதன்று அங்ஙனமாக நரிக்குட்டிபோல் ஏன் சும்மாதுள்ளுகிறுய் வேட்டைபிடிக்குமோஎன குலாலன் அந்த நரிக்குட்டியாரிடத்தில் தன்னைப்புகழ்ந்துக்கொண்டதுசொல்லுமையா என அரசன் சொல்லுகிறுன்.

ஒருவனத்தில் பெட்டைசிங்கத்தோடு கூடியிருந்த சிங்கத்துக்கு இரண்டுகுட்டிகள் உண்டானவுடனேபலவிலங்குகளைக்கொன்று தன் பெண்சிங்கத்தின்கையில் கொடுக்கப்பார்த்து இப்பிள்ளைகளுக்கு வினைத்தெரிகிறவரைக்கும் இவர்களைநம்பித் தனியே விட்டிராதேயென்று பத்திரஞ்சொல்லி நித்தியம் தான்மாத்திரம்போய் மிருகங்களைக்கொன்று கொண்டுவந்துகொடுத்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் அதற்கு ஒன்றுங்கிடையாமல் திரும்பி வீட்டுக்கு

வரும்போது வழியில் கையிலகப்பட்ட ஒருநரிக்குட்டியை அடியாமல்பிடித்துப் பெட்டையண்டை கொண்டுவந்து இன்றைக்கு இதைவிட வேறொன்றுங் கிடைக்கவில்லையென அப்பெட்டை அக்குட்டி மிகவுஞ்சிறியதாயிருக்கின்றதைப்பார்த்து தன்குழந்தைகளில் ஒன்றாய்க்காப்பாற்றிக்கொண்டு வருகையில் அம்மூன்றும் பெரியன்வாய் ஒருநாள் காட்டுக்குப்போனபோது அங்கொரு யானையைக் கண்டு இதன்கிட்டேபோகலாகாதென்று சொல்லிவிட்டுநரிக்குட்டி வீட்டிற்கு ஓடிப்போயிற்று மற்றிரண்டும் அதைப்பார்த்து அதன் பின்னே வீட்டுக்குவந்து தன்தாயுடனே அந்தநரியின்காரியத்தைச் சொல்ல நரிக்குட்டி அதைக்கேட்டு மிகவும் கோபித்து நான் இவர்களிலும் சௌரியத்திற் குறைந்தவனா இவர்களென்னைப்பழித்து நகைப்பானேன் கூழுக்குமாங்காய்தோற்குமா நானிவர்களைத்தண்டித்து என் பராக்கிரமத்தைக் காட்டுவேன் கொட்டினால் பிள்ளைப் பூச்சியாஎன இதைக்கேட்டப் பெண்சிங்கம் நரியை யேகாந்தமாய் ஓரிடத்திற்கொண்டுபோய் நீர் நரிக்குட்டி உன்குலத்தில் யானையைக்கொல்லுகிற சக்தியில்லை உன்னைநான் என்பால்கொடுத்து வளர்த்தமையால் ஸிந்தப்பராக்கிரமஞ் சொல்லிக்கொள்ளுகிறாய் இவர்கள் இனி உன்னை இன்னவனென்று அறிவதற்குமுன்னேநீபுறப்பட்டு ஓடிப்போ இல்லாவிட்டால் அவர்கள்கையிலடியுண்டுஇறந்துபோவயென அதைக்கேள்விப்பட்டவுடனே சம்புகம் ஓடிப்போயிற்று ஆதலால் நீகுசவனென்று வெளிப்படுவதற்கு முன்னே விரைவாயிதைவிட்டுப்போவென அவன் அந்த ராசாவின் உத்தாரப்படி ஓடிப்போனானென இப்படி முதலையின் பேச்சைக்கேட்டுச் சுமுகன ஸ்திரீகளின் கிருத்தியம் ஒருவர்க்குந் தெரியாதாகையால் அவர்கள் விசுவாசத்தை நம்பலாகாதென முதலை எதினாற்சொல்லுகிறாயென வானரஞ்சொல்லத்தொடங்கிற்று.

தாராநகரத்தில் குடும்பத்தோடுகூடியிருந்த சந்திவிரதனென்னும் வேதியன் தன்மனையாட்டி யெல்லோரோடும் கலகம்பண்ணிக்கொண்டிருக்கையில் அவன் அவள்மேலிருக்கிற மோகத்தினால்தன தேயத்தைத்துறந்து அவளை யழைத்துக்கொண்டு தேசாந்திரம் போகையில் அவ்வழியில் பார்ப்பினிநாயகன் எனக்கு மிகவுந் தாக மெடுக்கின்றது எங்கிருந்தாயினும் தண்ணீர கொண்டுவாவென அவன் அவளை அங்கேயேவைத்துவிட்டு தண்ணீர்க்குப்போய்வந்து அவள் இறந்து பிணமாய்க் கிடப்பதைப்பார்த்து மிகவும் புலம்பி வருத்தப்படுகையில் உன்வயதிற்பாதி இவட்குக்கொடுத்தாயானால் மீண்டெழுவாளென்று ஆகாசவாக்குண்டாக அதைக்கேட்டுப்பார்ப்பான் பவித்திரத்தோடே பாதிவயதைமூன்றுதரம் உச்சரித்துக்

கொடுக்க அதனால் அவள் சீவித்தெழுந்து சலபானம்பண்ணினாள் பின்பு ஒருபட்டணத்திற் போயிறங்கி அந்தணன் செலவுவாங்கக் கடைக்குப்போனபோது அங்கே ஒருமுடவன் நேர்த்தியாகச் சங்கீதம்பாட அதைக்கேட்டு அவள்மோகித்து அவனருகிற்போய்ச் சிநேகா என்னை அங்கீகாரஞ்செய்ய வேண்டும் இல்லாவிட்டால் உனக்குப் பெண்கொலைவருமென அதைக்கேட்டு அவன் இதோ முடவனுக்குக் கொம்புத்தேன் கிடைத்ததேயென்று பொங்கி அவள் கையைப்பிடித்துக்கொள்ள அப்போதவள் இவ்வுடம்பையுனக்கு அற்பணம்பண்ணினேன் இனி நீ ஐயமில்லாமல் என்னுடனே கூடவாவென அப்படியே அம்முடவனவளண்டை உட்கார்ந்திருந்தா னிதற்குள்ளே கடைச்சரக்குகள் வாங்கிக்கொண்டுவந்த பிராமணனுக்கு சமயல்பண்ணி இலைபோட் டிம்முட வனுக்குக் கொஞ்சம் அன்னங்கொடுத்து இருவருஞ் சாப்பிட்டபிறகு பாற்பனத்தி நாயகனே நீரென்னைத் தனியாகவிட்டுப் போம்போது எனக்குத் துணையில்லாமையால் இம்முடவனை எப்படிக் கொண்டுபோகலாமென அவள் நான் முதுகிற்கட்டிக்கொண்டுவருவேனெனநல்லதென்று அவள் கபடத்தை நிசமென்று எண்ணி அதற்குட்பட்டான் அவனைப்புடவைசுற்றி முதுகிற்கட்டிக்கொண்டு நடக்கையில் அவ்வழியிற் பிராமணன் இவளைப் பாழ்கிணற்றங்கரையிற்படுத்துக் கண்ணசைந்ததைப்பார்த்து அம்முடவனிடத்தாசத்தியினால் புருஷனைத்துறவில் உருட்டிவிட்டுச் சனிதொலைந்ததென்று அம்முடவனை ஒருபெட்டியில்வைத்து நோவாமல் எடுத்துக்கொண்டுதேசாந்தரம்போகையில் அங்கே சேவகர்கள் அவள் தலைமேற்பெட்டியிருப்பதைக்கண்டு அவளைப்பெட்டித்தலையுடனே அரசன் பெட்டியைத்திறப்பித்துப்பார்த்து அவன்முடவனைக்கண்டு இவன் யார் என்ன செய்தியெனப் பார்ப்பினியைக்கேட்க இவள் இவன் என் பர்த்தா இவர் கோபாக்கினியிருக்கிறதினால் இப்படித்தலையிற் சுமந்துக்கொண்டு போகிறேனென அரசனதைக்கேட்டு இவள்கற்புடைமைக்கு மகிழ்ந்து இவள் நமக்கு உடன்பிறப்பென்று எண்ணி இவளைத்தன்னிடத்தில் நிறுத்திக்கொண்டான் இங்கேயிப்படியிருக்கையில் அங்கே அவ்வழியிற்போன வழிப்போக்கனொருவன் தாகத்துக்கு உள்ளேயிறங்கினபோது விழுந்துகிடக்கின்றவனைப்பார்த்து இறங்கியெடுத்து வெளியேவிட்டுப்போக அவனங்கேபங்குவையும் மனைவியையுங்காணாமல் அங்கங்கேதிரிந்து தேடிக்கொண்டு அந்நகரத்திற்குள்ளே போனான் இவன்வருவதை அவ்விபசாரிபார்த்து வேந்தனுடனே இதோவருகிற இச்சண்டாளனென்பதிக்கு விரோதியென்ன அவ்வேந்த னிவனைப்பிடித்துக் காவலில்வையுங்களெனச் சேவகர்கேட்டு உத்தரவுசெய்ய அவர்களப்படியே செய்யத்

தொடங்குகையில் அவனிறைவனைப்பார்த்து ஓ அரசசிகாமணியே நீ தர்மகுணமுள்ளவராயிருக்கிறீர் ஆதலால் நீரவிசாரியுமென்று தன்குறைகளையெல்லாஞ்சொன்னா ளரசனதைக்கேட்டு ஒரு பஞ்சாயத்து நியமித்து அவர்களால் இப்பார்ப்பான் குற்றவாளியல்ல அவள் துஷ்டையென்றறிந்து அதற்குத்தக்க தண்டனைசெய்து வேதியனை சமாதானம்பண்ணினான் ஆதலால் மாதர்கள் அனர்த்தங்கட்கு மூலமாயிருக்கிறார்கள் விவேகிகள் அவர்கள்பேச்சுக்குக் காதுகொடுக்கலாகாது அப்பேச்சுக்குக் காதுகொடுத்து முற்காலத்திலே நந்தன்ராசனென்பவனும் பிரதானியுஞ் சபைநடுவிலேயேளனம் அடைந்தார்களென முதலை யதெப்படியென வானரஞ்சொல்லலுற்றது.

பராக்கிரமசாலியான நந்தனராசனென்பவன் துரைத்தனம் பண்ணிக்கொண்டிருக்கையில் அவன் மனையாட்டி ஏதோவொருகாரணத்தால் பிணங்கிக்கொண்டதைக்குறித்து அரசனெவ்விதசமாதானஞ்செய்துங் கேளாமல் நீவாயில் வாளம்போட்டுக்கொண்டு முதுகின்மேல் என்னையெடுத்துக்கொண்டு குதிரைபோலக்கனைத்தால் நானுன்பேச்சிக்குச் செவிகொடுப்பேனென அப்போது நிருபன் அவள் பிரீதிக்காகச்சொன்னவண்ணஞ்செய்ய அதைப்பிரதானியின்மனைக்கிழத்தி கேள்விப்பட்டு அவளுங்கோபமாய் தன்பதியுடனே பேசாமல் முறடாயிருக்க அவ்வேளையில் முழுதும் அறிந்தவனாகிய வாருசியென்னும் மந்திரி தன் மனைவிக்கு எவ்வித ஆறுதல் சொல்லியும் அவளுடன்படாமல் நீதலைமொட்டைஇட்டுக்கொண்டு என்னை வலசாரி இடசாரியாகச் சூழ்ந்துவந்து சாஷ்டாங்க நமஸ்காரம்பண்ணுவாயானால் உனக்குநா னுட்படுவேனெனமந்திரி அவள் பிடிவாதத்துக்காக அங்கனஞ்செய்து நாளுதயத்தில் சபையில் வந்திருந்த அரசனிடத்துக்குப்போக அரச்ன பிரதானியைப் பார்த்து நீஎதற்காக முண்டனம்பண்ணிக்கொண்டாயென மந்திரி மகாராஜா அவர்கள் குதிரையைப்போலக் கனைத்தபடியால் அடியேன்மழுங்க மொட்டையிட்டுக்கொண்டேனென இப்படி யிருவர் பேச்சையுங்கேட்டு சனங்கள் நடந்தசெய்தியெல்லாம் அறிந்துகொண்டார்கள் ஆதலால் மாதர்களுடைய அநுசிதவார்த்தையைக் கேட் மௌனமாயிருக்கவேண்டும் அங்ஙனம்செய்யாது அவரோடு மறுமொழி சொல்லுகின்றவன் புலித்தோலைப்பார்த்துக்கொண்டிருந்த கழுதையைப்போல கிலேசமடைவானென்ன அதெப்படியென்று முதலைவினவக் குரங்கு விடைவிடுகின்றது.

நருமதையாற்றங்கரையில் வானியென்னும்ஓரேழைவண்ணான்தன்கழுதைதீனியில்லாமல்நாளுக்குநாள் இளைத்துப்போகிறதைக்குறித்துவிசனப்பட்டுக்கொண்டிருக்கையில்ஒருநாள்நினையாமல்கிடைத்த

புலித்தோலைக்கொண்டுவந்துகளிப்புடனேவிரைவில் அக்கழுதைமே
ல்போர்த்து ஊரார்பயிர்களில்மேய்வித்துக்கொண்டிருக்கும்போது
குடிகள் இதுபுலியென்றுநினைத்தோடிப்போவார்கள் இப்படியிருக்
கையில் இப்பெருவாயகன்மிகவும்பெருத்து ஒருநாட்பயிரில்தானிய
த்தைத்தின்றுகொண்டிருக்கும்போது ஒருபெண்கழுதையின்கூக்கு
ரலைக்கேட்டுமிகவும்பெருங்கூச்சலிடத்தொடங்கிற்று அப்போதுஅக்
கொலைக்காரன் இதுபுலியாயென்றுநிச்சயித்து அதைப்பிடித்துஇடுப்
பொடியயடித்தான் ஆதலால்மாதர்களுடனேவீணுகப்பேசலாகாது
இப்படியிருக்கையில் நீயவனைக்குறித்து என்னைக்கொல்லவிருந்தாய்
இதுஉன்குற்றமென்று விசுவாசகாதகம்பண்ணுதல் உன்சாதிக்கேயி
யல்பாயிருக்கின்றது அதுசாதுக்களின்சேர்க்கையாலுங்குணமாகாது
மேலும்துஷ்டர்கட்கு உபதேசித்துபயனில்லையென்று இப்படிபேசிக்
கொண்டிருக்கையில் சலத்திலிருந்தஒருசலசரம்வந்துஉன்மனையாள்
எதிர்பார்த்துக்கொண்டிருந்ததுபட்டினியாயிறந்தாளென அந்தநா
ராசஞ்செவியிலேறினவுடனேமுதலைநான்கொடியேனுதலில் இத்தன்
மையிடரில்கப்பட்டேன் முதல்நண்பனுக்குப்பொல்லாதவனுனேன்
இரண்டாவதுமனைக்கிழத்தியும் இறந்தநாள்வீடுங்காடாயிற்று இல்ல
க்கிழத்தியில்லாத இல்லஞ்சுடலையன்றோ ஆதலால்மித்திராஎன்பிழை
யைமன்னிநானுக்குதுரோகம்நினைத்ததனால்தீயில்குதிக்கிறேனென
இதைக்கேட்டுவானரம்என்பேச்சினுல் நீகொலைத்தொழிற்கேற்பட்
டையோ அவள்சாவைக்குறித்து இப்போதுகிலேசித்து உயிர்விடநி
னைக்கிறாய் அப்படிப்பட்ட துற்குணியின்சாவுக்குக் களிக்கவேண்டும்
பதியைவிட்டுபின்னுக்கு உடன்பட்டிருந்ததனுல் முன்னொருத்தியை
நாயும்சிரித்ததெனஅம்போதுமகரம நரியாரைப்பார்த்து நகைத்த
தென சுமுகன் சொல்லுகிறது.

கம்பகாவதிநகரத்தில்கிழவனுயிருந்ததேவதத்தனென்னுமொரு
சாவகாரியின்பெண்சாதி அந்நியபுருஷர்களிடத்தில் ஆசைகொண்டி
ருக்கையில் அவளைக்கண்டஒருமூடனவளைக்கண்டு பெண்ணே என்
பெண்சாதியிறந்தபடியினுல் நான்மிகவும் துக்கித்துக்கொண்டிருக்கி
றேன் நீஎன்துக்கத்தைபரிகரித்தால் உனக்குப்புண்ணியம் உன்னைப்
பார்த்துமிகவும் ஆனந்தமாயினேனென அதைக்கேட்டுஅவள்உன்ம
னதின்படி இங்கனமிருக்கிற என்கிழக்கணவன் பணத்தை எடுத்துக்
கொண்டுநீயும்நானும்பரதேசத்தில்போய்வாழ்ந்திருப்போமென அ
வன் அதுமிகவும்நல்லகாரியஞ்சொன்னுய் நீகணப்போதானுலும்அட்
டியில்லாமல் இக்காரியத்தில்முயற்சிசெய்யலாமென அப்படியேமறு

நாள்வெளிச்சமேறும்வேளையில்வெகுதிரவியங்களைஎடுத்துகொண்டு சங்கேதப்படி இருவரும்தேசாந்திரம்போவ யைகுறித்து இருகாத வழிபோகையில்அங்கேஒருபேராற்றில்பார்த்தளவில்அவன்பின்னே இவனையாராயினுந்தேடிக்கொண்டுஓடிவந்தால்பணத்தையும்அவளை யுங்கொண்டுபோகிறதுமன்றிநம்முடையஜீவனையும்வாங்குவார்களா தலால்!இவளைவிட்டுப்பொருளைமாத்திரம்ஏமாற்றிக்கொண்டுபோக வேண்டுமென்று மனதிலேயே ஆராய்ந்துநிச்சயித்துப் பின்பு அவளை நோக்கிஇந்ததிமிகவுங்கடினமானது தண்ணீருந்நிரம்பவருகிறது ஆக லால்முன்னே எல்லாவற்றையும் அக்கரையில்வைத்துவிட்டுப் பின்பு உன்னைநோவாமல்கொண்டுபோய்கரைசேர்க்கிறேனென அவள்உன் மனதின்படிசெய்யென பின்புஅவளிடத்திருந்தபணமுழுவதும்வாங் கிக்கொண்டு என்பிரியநாயகியே உன்புடவையும்அவிழ்த்துக்கொடுத் தாயானால்உன்னைமறுபடியுங்கொண்டுபோதல் வருத்தமாயிராதென ச்சொல்லஅவளப்படியேயவிழ்த்துக்கொடுக்க அதையுங்கைகொண்டு இவள்வெட்கத்தினால் அங்கேகூவியாரோடுஞ்சொல்லமாட்டாளென் றெண்ணிக்கொண்டுஅபகரித்தபொருளோடு கூடப்போய்விட்டான் பிறகவளதைப்பார்த்துத் தன்மனதில்வியாகூலித்துநான்செய்தவே லைக்குப்பலன்உடனேதானேகிடைத்தது இதை அக்கிழப்பணமறிந்தா ல் என்னசெய்யுமோவென்றெண்ணிக்கொண்டு நாணத்தினாலேதண் ணீரிலிறங்கி உட்கார்ந்துக்கொண்டிருக்கையில்ஓரிரைச்சிதுணுக்கை யைவாயில்கௌவிக்கொண்டு ஓடிவந்ததண்ணீரில் நின்றுந் துள்ளிக் கரையில் விழுந்தமீனைப்பிடிக்கநினைத்துவாயிரைச்சியை பூமியில்போ ட்டுக்கௌவப்போகையில் அம்மீண்தண்ணீரில் குதிதது நரிதிரும்பி அத்தசையண்டைவருவதற்குள்ளே அதைஒருபருந்துஅறைந்துபோ கவானரத்தைப்பார்து ஆவதென்னவென அதைக்கேட்டுச்சம்புகன் குரோதத்தோடேஎனக்குநேரிட்டதுபோலவே நீயும்உன்பதியையுஞ் சோரனையுமிழந்து இப்போதுநிர்வாணத்தோடு என்னையெண்ணமிடு கிறாயென இப்படியிருவருக்கும்வாக்குவாதம்நடந்துக்கொண்டிருக் கையில் இஃதவள்கணவனுக்குத்தெரிந்து அவனவளைமிகவுந்தண்டி த்துஓட்டிவிட்டானாதலால் அந்தத்துஷ்டியைக்குறித்துச்சோகமுறா மல்முதலாய்நீஉன்சாகைக்குப்போவென மகரந்தன்வீட்டுக்குப்போ னவிடத்தில் அங்கேவேறொருமுதலையிருக்கக்கண்டுநம்மிடத்தையும் ஒருவன்கைக்கொண்டான் அதற்குச்சாமபேதத்தை தண்டங்களில் ஒருபாயம்செய்வதைக்குறித்துநம்முடையசினேகிதனைவிடச்சொல் லுகிறவர்கள்இல்லை அவனையேவினவவேண்டுமென்று உறுதிசெய்து மீண்டும்நாவல்மாத்தண்டைவந்து சுமுகனைப்பார்த்துமித்திராபட்ட

காலிலேபடுங் கெட்டகுடியேகெடும் என்றாற்போல என் அபாக்கியத்தில் என்வீட்டையும்ஒருவன்பிடுங்கிக்கொண்டான் இனிநானென்ன செய்வேனென்று முறையிட வானரம்நன்றிகெட்டவனே எனக்குப் பொல்லாங்குதேடின நீமறித்துமுட்டாள்தனமாய்என்னிடத்துக்கு ஏன்வந்தாய் மூடனுக்குஉபதேசித்தால் அவன்வீடுடையவன்வீடிழக்கப்பண்ணுவேனென முதலை இதெங்கெனயெனக்குரங்குசொல்லத் தொடங்கிற்று.

ஒருமரத்தின்மேல்கூடுகட்டி அதில்வாழ்ந்துகொண்டிருக்கிற இரண்டு தூக்கணங்குருவி ஆலங்கட்டியுடனேகூடப் பெருமழை பெய்கையில் குளிரினாலே நளிர்பிடித்துப்பல்லுகிட்டநடுங்கிக்கொண்டு ஒருமரத்தடியிலொதுங்கியிருந்துவருந்துகிறவானரத்தைக்கண்டுஉனக்குக்கால்கைகளிருந்தும்குளிர்காற்றுமுதலியதுக்கத்தைஐயையோ நீயேன் அனுபவிக்கிறாய் நீயேன்வீடுகட்டிக் கொள்ளவில்லை யென்று இரக்கத்தாற்சொல்ல அதைக்கேட்டு அத்துஷ்டக்குரங்கு ஊசிமூஞ்சிமூடாவல்லவனுக்குப்புத்திசொல்லுகிறையா எனக்குவீடுகட்டுகிறசக்தியில்லை அதைப்பிரித்தெறிகிறசாமர்த்தியமுண்டுஇதோபாரென்று அதன் கூட்டைப்பிரித்தெறிந்தது ஆதலால்கீழானோர்கட்குஉபதேசிக்கலாகாதெனமுதலை அப்பனேநான்குற்றவாளியென்பதுமெய்யே ஆயினும்என்பழயசிநேகிதனாதலால் உன்னைக்கேட்கிறேனெனவானரம் எங்கேபோய்ப்பலகயாளியோடுபோர்செய்துமுடிந்தால்சொற்கமடைவாய்வென்றால் வீடு அடைந்துசுகமுறுவாய் முன்னொருபுத்திசாலி உத்தமனுக்குக்கும்பிடும் சூரனுக்குப்பேதமும் காரியக்காரனுக்குத்தானமும் ஈடானவனுக்குத்தண்டமுஞ்செய்தாற்போலச்செய்ய வேண்டுமெனமுதலை அதெங்கனமெனச்சுமுகன் சொல்லலுற்றது.

இம்மலையின்மேல்சதுரனெனும்ஒருநரிபசியுடனே அங்கங்கே திரியுங்கால்ஒருசெத்தயானையைக்கண்டுஅதன்தோலைக்கிழித்து இரைசியைதின்னும் வல்லமை அதிற்கின்மையால் அத்தங்குட்கார்ந் திருக்கையில் அங்கேவந்தசிங்கத்தைக்கண்டுதெண்டனிட அதுநீயாரென நரிநான் தங்களடியேன் தாங்கள் அடித்தயானையைக்காத்துட்கார்ந்திருக்கிறேனெனச் சிங்கம் இதுதான் கொன்றதென்று வேறொருவன் கொன்றுஎறிந்தானோ அன்றித்தானாய்மடிந்ததோ எப்படியிருந்தாலும்அதைநான்புசியேன்இதுவுனக்குவேண்டுமானால்எடுத்துக்கொள்ளெனநரிசுவாமிஇதுயோக்கியந்தான்பெரியோர்கள்ஆண்மையாலே சம்பாதிக்கிறார்களெனசிங்கம் அதைக்கேட்டுவேறொருவனத்திற்குப் போகப்பின்னும் அங்கே ஒருபுலியைப்பார்த்து அம்மான் நீஇக்காலன்முகத்திலேன் எதிர்ப்பட்டாய்இவ்வானையைக்கொன்றமிருகேந்திரன்யாதொருபுலிவந்தாலதற்குதெரி[illegible] எனக்குவந்துசொல்லுவா

யானல்நானதைக்கொன்றுயெறிவேன் நானே ஒருயானையையடித்து
மூழ்கப்போனயிடத்தில் ஒருபுலி அதையெச்சில்பண்ணிற்று அதுமு
தலாகப்புலியைத் தேடிப்பார்த்தும் அகப்படவில்லையென்று என்னு
டன்சொல்லியிருக்கிறானெனப் புலிஅச்சிங்கத்தின் உத்தரவைகேட்டு
மிகவும்பயந்துமருமகனே எனக்குப்பிராணதானங்கொடுமெனச்சொ
ல்லிக்கொண்டே ஓடிப்போயிற்று மறுபடி ஒருவானரத்தைக்கண்டு
முன்னேவந்த துஷ்டனைக்கும்பிட்டுப்போக்கினோம் இரண்டாந்தரம
வனைப்பேதித்தோம்இப்போதுஇதன்கையால்இதைக்கிழிப்பிக்கவே
ண்டுமென்று இப்படித்தன்னுள்ளேநிச்சயித்துப்பின்புவானரா நீநெ
டுநாளைக்குப்பின்புவந்தாய் மற்றும்பசித்திருக்கிறாய்எனக்குச்சிங்கம்
கொடுக்கஇவ்வானிரைச்சியை நீகொஞ்சம்தின்றுசிங்கம்வருவதிற்கு
முன்னேசீக்கிரமாய்ஓடிப்போவெனகுரங்கு அதைக்கேட்டுயானையை
க்கிழிக்க அதைப்பார்த்துநரிவானரசிங்கஞ் சமீபத்தில்வந்தது இனிநீ
விரைவிலோடிப்போவென அதைக்கேட்டுக்குறங்குபறந்தது பின்பு
அதுபின்னந்தவிடத்திலிருந்த மாம்சத்தைநரிதின்னுகையில்அங்கே
வந்த வேறொருநரியைச்சண்டையிட்டுத்துரத்தி தான்வேணமட்டும்
இறைச்சிகளைத்தின்றது ஆதலால்நீஅம்மகரத்தைக்கொன்று உன்வீ
ட்டில்சுகமாயிரு வேறொருதேசத்தில்சௌக்கியமெல்லாங்கிடைக்கு
மாயினும் தனக்குச்சிநேகம் அச்சொருவனும்இல்லாவிட்டால் சித்தி
ராங்கதன்போல தீங்குகள்அனுபவிக்கவருமென முதலைச் சித்திராங்
கதனுக்கு எப்படி அவஸ்தை நேரிட்டதென வானரஞ் சொல்லத்
தொடங்கிற்று.

அயோத்தியாநகரத்திலிருந்தசித்திராங்கதன்என்னும் ஒருநாய்
பஞ்சத்தினால்சோறுகிட்டாமல்மறுதேசத்திற்சென்றுஒருகிருகஸ்தன்
வீட்டுக்குப்போய்அவ்வீட்டுக்காரிசோறுபோட்டுஆதரித்ததனாலன்று
முதல்வெகுநாள்வரைக்கும்அங்கேயிருந்துஒருநாள்சகஜமாய்வீட்டு
க்குவெளியேவந்துவந்தவுடனே அவ்வூர்மற்றைநாய்கள் இதன்மேலே
விழுந்து அநேகவிடத்தில்கடிந்துஅந்தஉதிரமாம்சங்களைவெளிப்படு
த்தினதினால் சித்திராங்கதன்மிகவும்துக்கமடைந்து என்னபஞ்சம்வ
ந்தாலும்சுயதேசத்தைவிட்டுவரலாகாதெனத் தனக்குள்தேறிமீண்
டுஅயோத்திக்கு ஓடிவந்தமாத்திரத்தில் அதற்குஉறவாகியநாய்கள்
சித்திராங்கா அத்தேசம்எப்படியிருக்கிறதெனச்சித்திராங்கதன்அத்
தேசம்செழிப்பாயிருக்கின்றது யாதர்களும்தயாசாலியாயிருக்கிறார்
கள் சுகாதிமித்திரத்துன்பமில்லை ஆதலால்இவ்வவஸ்தைநேரிட்டதெ
ன்றதுஆனதுகொண்டுதன்னிடத்திலிருப்பதுபோலச்சுகமவேறில்லை
யென்கிறேனெனமுதலைஅவ்வார்த்தைகளைக்கேட்டுப்போய்அவ்வன்

ணமே எதிரியுடனேபொருதி அதன்வீட்டைமீட்டுக்கொண்டு அங்கேயேவாழ்ந்திருந்தது ஆதலால் பராக்கிரமத்தினால் பாக்கியம்வழீத்தேடிவந்தடைகின்றது

நான்காவது லப்தஹானி அல்லது பேறழிவு

முற்றிற்று.

உ

## ஐந்தாவது.

## அசப்பிரேக்ஷிய காரியத்துவம்.

### அல்லது ஆய்ந்துசெயல்.

சோமசன்மன் அரசன்மக்களைநோக்கியாவனொருவனுடையதீச்செயல்களைக் கண்ணுற்றாயினும்செவியுற்றாயினும் அறிவுடையோன் அதைப்புரியலாகாது அங்ஙனம்ஆகையினால் வெள்ளறிவனென்னும் பெரிய ஒருமயிர்வினைஞன் பணித்திரன் என்போனது மருமகன்கண்டுவழிதேராமல் அங்கனம்புரிந்து இடருற்றனனென அதைக்கேள்வியுற்ற இளங்குமாரர் அதெவ்வாறு இயம்புதியெனவினாவ ஆசிரியனுரைக்கலாயினன்.

அரைசிக்கண்ணதாய்ப்பட்டணபுரிவாசியாகியமணிபத்திரன்என்போன்நன்னெறிபத்திஒழுகலான உளதாய்நன்குரலால்பரிபவமுற்று இவ்வறுமைகெட்டது சிச்சீ இதையசாந்திமுதலாகியகுணங்கள்பொருளில்லாதாரிடத்தில் விபரீதமாகத்தோன்றுகின்றனவென்றுகணந்தோறும்ஆகுலித்துக்குடும்பம்பாதுகாப்பின பக்கத்தினால் அறிவும்ஒழுக்கமடைகின்றது தானியமுதலியபொருளிலாவீடு இக்காடுஒக்கும் அவன்கல்விமுதலிய குணச்சிறப்புற்றான் ஆயினும் மனிதர்எண்ணிக்கையில் உறான் இங்ஙனம் பலவகைத்தாய் வற்சிமையினன் எழுதுகின்றது ஆதலால்பட்டினியிருந்து உயிர்துறப்பலெனத்துணிந்து மணிபத்திரன்கள்வர்கையில் பதுமநீதி நீத்தோன் வடிவமாய் இவன் கனவில் அடைந்துயான் உன்ஒழுக்கத்தால் நட்புலனுகநாளை இவ்வுருவத்தோடுவருவேன் அப்போதுஎன்சென்னிமேல் தண்டத்தால்புடைப்பையாயின குன்றாப்பொற்குவை ஆனேனெனக்கேட்டு அவன் துயில்ஒழிந்து அக்கனவுஉண்மையோ அன்றேல்அதுஎப்பொழுதும் எனக்குளதாய் பொருட்சிந்தையின் தோற்றமேயென்று இங்ஙனம் மறுநாள்கருதிக்கொண்டிருக்குங்கால் இரவில்கண்டாங்குவந்த இந்நீத்தோனைக்கண்டுநிகழ்ந்த கனவுமெய்யெனத்துணிவுற்று அவன்சிர

மேல்ஓர்தண்டம்கொடுத்துதாக்க அவன்பொன்மயமாய்ஒளிவிட்டுநின்றமையால்ஒன்றிற்பொதிந்துவீட்டில்வையாநற்புழி அவன் இல்லாட்குநகங்களைந்துகொண்டிருந்த மயிர்விளைஞனைநோக்கி உனக்குச்சிறிதும் புலப்படுத்தற்காகஎனவற்புறுத்திவிக்க அந்நெறிநிற்பளெனமேற்கொண்டுவீட்டிற்சென்று அறிவிலியை அழைத்துவந்து அன்னோன்மண்டையில் கோல்கொண்டறைவன் அவன்சுடர்விரிபசும்பன்னுனெனத்தேறிமற்றைநாள்துறவிகள்குழுவிற்சென்றுமிகவணங்கிநீவாஎத்திறத்தோர்க்கும் அறிவுணர்த்திக்கரையேற்றிநிற்கின்றநீர்மற்றும் அவ்வெலாஇல்லத்துக்கும்பிச்சைக்குஏகாநிற்கின்றநீர் ஆதலாலித்தினம்நாயினேன் சிறுகுடிலுக்குத்தேவரீர்கூட்டத்தோடுஎழுந்தருள்வீரகவென அவர்களில்தலைவன் இம்மாசுதீர்ப்போனைநோக்கிநாள்தோறும் அந்தணர்உன்மனைக்குவராநிற்க நீஇன்றைக்கு எமக்கேன் இயம்புகின்றனை அவ்வேதியரையே அழையாயென அக்காலையினவ்விதஉம்மட்டுப்போலச்செயல்கள் இருக்கின்றமையான அறிகின்றேன் ஆதலால்நீவிரென்வேண்டுகையை எட்டுணையுமாறுமல்திருவுளம்வைத்தருள்வீரெனப்பழிவாகமொழிந்து அவர்கரத்தைப்பற்றிஇல்லிற்கொண்டுவந்து அம்முனியின்கபாடத்தில் உலக்கையால்சாத்தினஅளவில்அவன்களைத்துநிலத்தில் அடியற்றபனைபோல்வீழ்ந்தனன்இதற்குள்தபசிகுமாம்வந்து மெய்மறந்துகிடக்கின்றவனைப்பார்த்தளவில் பேரிரைச்சலிட இக்கலிபலியை அவ்வூராள்வோன்காவலர்கள்கண்டு ஆண்டெய்தி அந்நாவிதனைப் பிணித்துத்தந்தவன்பாற் கொடுபோய்விட அவ்வூராளிமஞ்சிகனைநோக்கி இதுஎன்செய்தனையென உறுகிவினவ அம்மங்கலன் அவ்வணிகனைவிழித்து உன்பால்நிகழ்ந்தது என்னையொத்தவன் அவனென்றும்உரையாதிருந்தான் அதன்மேல்அதிகாரத்தலைவ னம்பட்டனைப்பார்த்து இவனாராயாமல் இக்கருமம்புரிந்தனனாதலால் இவனைக்கழுவேற்றுத இக்கணம்இன்னொருபார்ப்பினியாசிரியாமலஇயற்றினகருமத்தால் மூங்காவைக்குறிக்கிஆகுலித்தாளெனமணிபத்திரன் இதுஎங்கனம் அருள்வாயென அவ்வூராளிசொல்வதாயினான்.

உச்சினிபுரத்தில்வசித்த தேவனாம்வேதியனென்போன் மனைவியோடு இல்லறநடத்தும்நாளில் குழவியில்லாக்குறையால்இருவரும் ஓர்கீரிப்பிள்ளையைமைந்தனைப்போல்கருதிவளரப்பிறகுஓர்மகவுண்டாயிற்று அம்மதலையை ஓர்நாள்தூங்கிவிழித்து கணவனைப்பார்த்து யான்உலகத்தின்பொருட்டுச்செல்லாநின்றேன் நீர்நங்காண்முலையை பார்த்திரும் ஓர்வேளைகீரிகடிக்குமென்று இங்ஙனம்வகுத்துத்தண்ணீ

ர்க்குச்செல்லப்பின்னர் அக்குழந்தைதொட்டிலிற்கண்வளர்த்துஅவ்
வந்தணனும் ஓர்தடாக்கருமவயத்தனாய்ப்புறஞ்செல்ல அத்தருணத்
தில் ஒருகிருஷ்ணசர்ப்பம்பிலத்தினின்றும்புறம்போந்துதொட்டிலின்
மேலசெல்லாநிற்க கண்ணுற்றநகுலம்அதை அக்கணமேவிரைந்துப
ற்றி உதரிக்கொண்டு பலகண்டங்கண்டுகுருதியாற்பூசுற்றமுழுத்துட
னேகனது ஆற்றலைக்காட்டவிரும்பிவிரைந்து துவாரமுமாகவருகை
யில்வந்தபார்ப்பினி செந்நீரால்நிறைந்த அதன்வதனத்தைப் பார்த்
தளவில் அதுதான்பிள்ளையைக்கடித்துமடித்ததென்று துள்ளித்துள்
ளித்தணுக்குற்று நீர்க்குடஞ்சிதைவுறும்படி தன்தலைமேற்போட்டுக்
கொன்று உடனே உட்புகாநிற்கையில் மகனுறங்குதலையும் அருகேக
ரும்பாம்பின் துணிக்கைக் குவையையுங்கண்டு அந்தோ கெட்டேன்
யான்என அருங்குழவினன்நன்காராய்வின்றிக்கொலைசெய்தேன்என
ச்சோகமுற்றுப்புலம்பாநிற்புழி அவள்தலைவன் ஆண்டெய்திக்குழந்
தை இதோயிருக்கையில நீவெறுமையேன்மகவிழந்தேனென்றுஎன்
கழறிக்கலுழ்க்கின்றனை என்னடிபேதா யென்மனைவி நீர்யாதோபே
தாய் என்மொழிதள்ளிப்போனமையால அதன்பயனிதோவாய்த்த
து இதுமிக்க அவாவினன் முடியுமேலசக்கரஞ்சுழன்றதை ஒத்ததென
அதெவ்வண்ணம் உரைத்தியென உரைப்பதாயினாள்.

அமராவதிநகரத்திலவீற்றிருந்தவேதியர்நாலவர்மிடியாலதுன்
புற்று இப்பொழுதுயாமடைந்தபொருளின்மையையின்மையாக்கும்
இடம்நாடிச்செல்வோமாக பொருளில்லார்க்கு வனநடுவதிலவினும்
இன்பிலையென்று இங்ஙனம்கடைபிடித்துநாலவரும்பறுதேயம்போ
காநிற்கையிலக்ஷிப்பிராந்திக்கரை அணித்தாசப்பரவாநந்தி'என்னும்
யோகி ஒருவன்எலலாம்வலலோனாய்வீற்றிருக்கின்றதென அறிந்து
அவ்விடத்தில அவனுழைச்சென்ற இயன்றமட்டும்பூசிக்க அத்துகள்
அடிகளே எம்மைநலிகின் குரவைத்தொலைப்பான் மிக்கபொருட்கு
வைதணிவின் செம்மையாலன்றி எய்துவதன்று ஆதலின்இதன்நிமி
த்தஞ்சார்நதுணையும் முயலவேண்டுமென்று துணிந்து ஈண்டுநும்சர
ணமடைந்தோம் இனித்தேவரீர் எவ்விழவை முடிப்பீரேல எம்முயி
ரை நும்மாலவிடுதுமெனயோகி இவர்கள்பரபரப்பையுந் டைப்பிடி
யையும் உணர்ந்து நன்குசித்தியைசிந்தித்து அன்னார்திரநோக்கிநீஇ
மயகிரிநெறிபற்றிப் பிசகாதுபோமின்போம் வழிபடுதென வாத்திரா
ணடுவிழுமோ அதற்குஆண்டுசித்தாய் என்றுரைத்து அவர்கள்தலை
மீது நான்குதிரிச்சீலைகளைவைத்தபின் அப்பொன்விருப்போர்அங்ங

ணம் அவர் ஆணையைச்சிரமேற்றாங்கி இம்மலையிடத்திற்போகச் சிறிய
ஆயுநடக்கையில ஒருவன்வார்த்திவிழுந்தது அக்காலையன்னவன்அ
ங்குத்தொட்டும் பார்ப்பழித்தாமிரக்கனியாயிருக்க அவன்றனைவிட்
டுநடந்த ஏனையோரை மித்திரனேனும் அமர்க்கெடத் தாமிரக்கொ
ண்மின்எனக்கேட்டுமூவரும்பேதாய் இக்காலவறையெனயோசித்து
எத்துணைப்பெறினும் நம்மிடிமையெட்டுணையும் அகலாது ஆதலால்
யாமென் செல்லுதுமென வுரைப்படி அவர்முற்செல்லாநிற்க அவன்
தன் ஆற்றல் அளாவிசெப்புவாரிக்கொண்டுவந்தநெறிசென்றவன்பின்
னர் முன்னாக்கூறிய அம்மூவரும் ஓர்கூப்பாடுசேம்மைபோவழி அ
ங்கொருத்தன் தலைத்திரிவீடு அங்கனந்தொட்டுமற்றோரைநோக்கியீ
ழ்வெள்ளிகளைக்கைக்கொண்டுமீள்வேமெனயவ்விருவரும்முற்படப்
பொற்குவையிருக்கும் ஆதலால்யாமென அவர்போய்பின்னும் அவ
னும்வெனபோனஇராசியில்தன்வலித்தியன்றன் சுமந்துசென்றனெ
னபின்பு அவ்வெஞ்சியஇருவரும்நடக்கையில் ஒருவன்சிரத்திரிகிலத்
தில்வீழவும் அவன்தோண்டிக்காண்புழிப்பெற்றிராள்இருந்தமையா
லவன்களிப்பின்பெறுக்கிலமிழ்ந்தினவனாய் நண்பனேநம்மிச்சைமட்
டுஞ்சொன்னத்திரள்கொடுசெல்லுதுவறுதியென அப்பேராசைப்பே
தைபறுவிலாயமுன்னேமணித்திரளிறுப்பனவாம் ஆதலால்நான்செ
ய்தவனெனப்பின்பு அவன்யாவன் இற்செம்பையான் ஏற்றுக்கொ
ண்டு உன்வரவுநோக்கிக்கொண் டிருப்பாள் நீவிரைவில் வருதியென
அவனங்கனம் ஆகவென்று அவன்விட்டகளவழிவெயிலின்வருந்தி ப
சி நீர்வேட்கையால் சித்திநெறிதப்பி இவனுழல்கையில் அங்கொரு
மனிதன்தலையிலஒருசக்கரஞ்சுழலவும் அவனுடலெங்குஞ்செந்நீரால
மூழ்கியிருக்கவுங்கண்டு அவனைநோக்குற்றுநீயானுன்தலைமேல இங்
நேமிசுழலவதென்னையென்று இம்மாற்றம்வினவ அளவில அவ்வா
ழியினுவச்சிமீது வந்திறுக்க அவ்வேதியன்தானுக்குற்று இதென்ன
கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டாய்போலே ஆயிற்றெனக் கவலையு
ற்று இந்நேமிதன்மத்தகத்தின்மீதுறுவதென்னை யென்முன் சக்கிரி
மொழியனுற்றனன் இதுகாறும்எனக்கனுபவமிருந்தன இக்காலையில
மற்றொருவன் சித்தரியோடெய்தி உசாவுவன் அப்போழ்துஇவ்வா
ழி அவன்தலையைப்பற்றிக் கொள்ளுமென்று எனக்குச்சுபேரன்வர
மிருக்கின்றவெதன அச்சகரத்தலைப்புதியோன்பிள்ளையார்பிடிக்கக் கு
ரங்காய் முடிந்ததுபோல எனக்காயிற்றென்று தன்னிற்கவென்று
நெட்டுயிர்ப்பெறிந்து பண்டைநேமித்தலையனை நோக்கி நீயிங்கெய்தி
எத்தனைநாளாயின விளம்புதியென அவன்எனக்குக்காலவல்லை யறை
தெரியாது இராமன் அரசியற்றுங்காலையில நான்பிடிப்பட்டு இங்

கு இச்சக்கரத்தில் பிடிப்பட்டவனென அதைக்கேட்டவேதியன் ஈ
ங்குவல்கிரீர் தருபவரெவரெனப் பூர்வசக்கிரி பசிதாகம் இவ்வழி வ
ருத்துதலில்லை முழுதுமித்துன்பே நுகரவேண்டும் இஃது நிதிக்கோ
ன் நிதியைக்கவர்வான் வருபவர்க் கச்சுறுத்துப்பொருட்டு வைத்திரு
க்கின்றது இவ்வச்சத்தால்யாவரும் இங்குவாராரென்று இங்ஙனம்
நிகழ்வனயாவுஞ்சொல்லி இப்போது என்செய்க்கு ஆற்றப்பொறாக
வேதனையுளதாயிற்று ஆதலாலநான் செல்வனெனச்செவ்வழிச் செ
ன்றனன் பின்னர் முற்கூறிய சுவர்ணசித்திசொல்லி யாங்கு நெடுநே
ரம் இவன்நெறிநோக்குற்றிருந்துங் காணாமையால் தேடிவந்து அவ
ன்சென்னியில்சக்கரஞ் சுற்றுகின்றமைகண்டு ஐயுற்று அருகெய்தி ந
ண்பனே இதென்னையென அவனிதுபேராசையின்பயனெனச் சுவர்
ணசித்தி ஒகோ இதுபிள்ளைவரத்துக்கு போனவிடத்தில் புருடனைப்
பறிகொடுத்ததால்போல் ஆயிற்றேயெனச்சற்றுக்கலங்கிபின் வெள்ளறி
வோர்க்குக்கல்விப்பயிற்சி சிறிதுளதாயின் பிறனறிவைக்கேளாது செ
த்தசிங்கத்தை உயிர்ப்பிக்கின்றவர்போற் கேடுறுவார்களென அதை
க்கேட்டுச்சக்கரதரன் அதெங்ஙனமென வினவப் பொன்வாய்ப்பின
ன் இருக்கின்றனன்.

குளசாபுரமென்னும் மூதூரில்நால்வர் ஒருசாலை மாணாக்கராய்
க்கல்விபயில்கையில் அவர்களில்மூவற்கு மந்திரவித்தைதகைவர அப்
போதவர்கள் அரசனையடுத்துப்பெரும்பொருள் ஈட்டுதல் அன்றோ
வித்தையுணர்ச்சிக்குப்பயனென அதுகேட்டு அவருள் ஒருவன் வா
ருங்கள்நம்முள் இவ்வொருவன் கல்வியறிவிலன் ஆதலால் இவர்கீட்
டுநம்பொருளிற்கூறுகொடேம் ஆதலால் இவர் இந்நொடியில்தானே
தன் இல்லத்திற்கு ஏகப்பாலனென அதைக்கேட்டு மற்றொருவனிவ
ன் கல்விக்கல்லாணாயினு மிளமைதொட்டுநம்மோடு விளையாட்டயர்ந்
தோனாயினுமன்றியும் நம்மினு முலகநடையிற்றேர்ந்தவன் அரசன்
மாட்டில் நடையறிந்தவனிலுங் கல்விமாத்திரம்பயின்றோன் புகழெ
ய்தானாதலாலிதற்கு நாமேலோர்கூறு கொடுக்கும் என அதையெவரு
மொப்பிப் பின்புநால்வரும் வேறுதேயம்நோக்கிப்போம்வழியங்கே
யோரடவியிலோருயிர் நீத்தவரிமாகிடந்ததை கண்டொருவனும் பி
ழைக்கக் கற்றவித்தையை யிவ்விறந்ததன் பாலியத்திற்றெளிவோம்
என அதையுலகநடைவல்லோன் கேள்வியுற்றிவ்வரிமாவைச் சீவிப்
பப் பிறகெல்லோரையுந்தின்னாது விடாது இதன்பாற் பரீக்ஷைசெய
லொழியப்பாலது என பலவகையான்மறுத்தனன் அம்மூவருமன்ன
ன் மொழியையறிந்து செருக்கினாலச்சிங்கத்தையுயிர்ப்பிக்கத்தொட
ங்க மற்றவனித்தகுதியில் செயற்குச்சதுரவானாவான் சேய்மையாக
ற்பாலென்னுரைத்தவன் நீளப்போயோர்நெடுமரத்தின் மிசையிருக்க
பின்னரிவர்களும் மறனிலங்குக்குயிர்தந்தமாத்திரத்திலது மூவராவி
யையும்வாங்கிற்று ஆதலால்கல்வியினுமறிவுபெருமையென அப்போ

கு சக்கிர இறப்பிகாரணமன்று அறிவுடையோன் வீட்டிற் பலகப்பம
மைந்திருப்பினு நாசமுறுகிறான் வேதையறவி நான்காட்டகத்திற்ற
னித்திருந்துழுபல்கின்றனன் முன்னையிரம்புத்தி மல்லாங்கையும நூ
றுபுத்தி தொங்கினதையும் ஒருபுக்கிநீரில்விளையாட்டத்தையுங் கே
ட்டிலையோவெனப் பொன்வாய்ப்பினன் அதுதெவ்வாறென மேமிதி
ரிதலையன் விடை விடுக்கலாயினன்.

மகததேயத்திலேபலபொய்கையிலறிவாயிரத்தன் னூற்றிவனெ
ன்றிரண்டுமீனங்கட்குமோரறிவனென்னுந் தவளைநட்புளதாயிருக்கு
ங்காலையிலோர் திவசமாண்டோர் வலையன்வந்து பிற்றைஞான்றீண்
டுளகொழுமீன்களை வலைபெறிந்து கவாவேனுகவென் றுரை கூறியிறந்
தமையையறிவுற்ற வம்மண்டூகந் தன்னுற்றாற் கறிவுறத்துழியறிவா
யிரத்தன்நாநீநடைபசுவுங்கற்றுலவல்லேனென நூற்றறிவன்யமநிலை
பெயரலாகாது யாதற்காலதோ வத்தீண்டேயாகுகவென அதைக்கே
ட்டதவளை வீர் நட்டோரோ நானிதோபோகின்றேன் நீவிருநடமி
னென அவ்விரண்டும்நீயோரறிவனைகின்றனை யாதலாற் போனவையா
றுற்போயும்வருவேமல்லேம்என பின்னக்கவளைதன் குழவோடுவேறி
டம்போயிற்று மறுநாள்செம்படவன் வீசியவலையிர்சிக்கிய பற்பலம
ச்சங்களோடகப்பட வறியாயிரக்கனைத் தலைமேற்சுமந்து நூற்றிவலை
வாலைப்பற்றியும் நடக்கைகயிலிதையோரறிவன்கண்டு தன்பெண்டீரை
நோக்கி அறிவாயிரத்தனுக்கு நூற்றறிவனுக்குமிங்கன் கேடெய்திற்
று நானோரறிதநீரில் விளையாடுகின்றேன் எனக்குக்குதூகலித்துச்சொல்
லிற்று ஆதலால்மிக்கறிவோனுக்கு முழிநிலைவண்ணன் அன்புளதாமெ
ன பொன்வாய்ப்பினன் நீளசெவியனை நனமதிதடாநிற்றைறயிவிசை
பாடிக்கட்டுண்டார்போற் போலுனைக்கிப் பேரிடருளதாயிற்றெனசா
கரகாரணன் அதெங்கனநிசழ்ந்த துறைறயெனச் சுவர்ணசித்தி சொ
ல்வதாயினன்.

நெடுஞ்செவியன் சுமதியென்னுங் கழுதை நரீசளிரண்டு மிகட
விடாமலூரினர் பைங்கூழைமேய்ந்து வதைதின்றச்குழிபோர் நான
விரைப்படைக்கத்தினமிரண்டுந் தேசச்செறிந்து குந்தியிருக்கையில்
நெடுஞ்செவியவிந்நில வெறிக்கு மிரவிலெனக்குப்பொழுது கழிவின்
று தலாலயானகானகஞ்செல்வன்என சுமதிநீளசெவிய நீபாடற்கவழு
வருன்குரலைக்கேட்டுத் துயிலொழிந்துவனைப் புடைப்பார்கள் மௌ
னமாயிருவென நீள்செவியனுக்கிவ் விசையைக்குறித்துணர் வின்மை
யானென்னைத்தடுக்கிறாயென்ற நரியைவைது கழுதைதன்பெருங்கு
ரல்முழுதுந்திறந்துபாடிற்று அப்போதவ்வழூரா விழுப்புற்றக்கழு
தையைக்குண்டுகட்டாய்த்துணித்து நரியதைக்கண்டுமாமா எங்மொ
ழிதள்ளியிசையாடிண்மையா லிப்பயனடைந்தனையென் றிகழ்ந்து
ரைத்ததெனச் சக்கரதரன் நன்மொழிவினவியு மந்தரவென்னுந் த
ந்துரையன்மபணமுற்றனன் எங்ஙனவாய்ப்பினன் இஃதெவ்வண்
ணமுளதாயிற்றியம் புதியென சக்கிரிசொல்வதாயினன்.

நாராயணநகரத்தில் மந்தரனென்னுந் தந்துவாயன் பலவகைப்
பட்ட வஸ்திரநெய்துவரு மூதியத்தால் மனைவியோடுண்டு உடுத்துக்
காலந்தள்ளிவருகையில் அதன்கறிமுறிந்தமையால்மரம்வேண்டுற்று
க்காட்டிற்புக்கானுகத் திரியாநிற்கையில் ஓர்பெரிய வாலையைப்பார்த்
துவெட்டத்தொடங்குழி யதன்மேலிருந்த யட்சன் இஃதென்னிட
த்தை வருத்தவே நீயிருப்புற்றத்தை வெறுப்பின்றித் தராநிற்பேன்
என்சாலியன்நானென்னிலலம் புகுந்தெவளையுமுசாவியவர் சொன்
னவண்ணங்கேட்பேன் என்றவ்வண்ணம் வீடுநோக்கிவருங்கால் நெ
றியிலெதிர்ந்த மித்திரனாய் நாவிகனை என்னசெய்வதியம்புதி என அ
ண்ணே நீயிராச்சியங்கேள் நீயரசுநன்மைமவச்சுமாவேம் என அதைக்
கேட்டபின் நடந்தசெய்தியைத்தன்மனைவியாகிய சாலிகிக்குத்தெரி
விக்க அம்மடந்தை இராச்சியத்திற்கு வரம்பிலிடையூறுகளிருக்கின்
றன ஆதலானதுகேட்கற்பாற்றன்று வேறொருவதனமு மிருதாமுங்
கேட்பையேயின்றி வசத்திற் சிறுகிரைநெய்தானம் மிவ்வாழ்க்கை
செல்வனக்கும்என அதைசிறமேற்கொண்டு மீண்டுமவ்வனத்தருகிற்
சென்றவ்வியக்கினைநோக்கி எனக்குமற்றோர் சென்னியுமீரத்தமுந்த
ருகிஎன அவன் அங்கனமாக எனச்சொல்லியவளவில் வினவாய
றைந்துவப்பெய்தித் திருவிக்கிரகத்திற்குவருகையில் மார்க்கவனிவ்
விபரீதத்தைக்கண்டித்தோ ரிராக்கதனென்றெண்ணுற்றுக் கலையா
லொரு கல்லெறிந்து கொன்றனர் ஆதலாற் பாலதுபிழையாதெனவு
ணர்வுற்று வல்லோர் வீணாசைகொள்ளார் அங்ஙனம் வீணெண்ண
ங்கொண்டு கிருபணனென்போன் கேடுற்றனன்என சொன்னசித்தி
அக்தெவ்வாரியம்புதி என்னக்கரசரன் சாற்றலுற்றனன்.

பண்டாபுரத்திற் கிருபன்சருமனென்னுமொரு வேதியனிரந்து
வயிறுநிரப்பிமெஞ்சிய தவங்களைப்பெய்து நிரப்பியயானையைச் சிங்
கத்தின்மீதிருத்தி யதனடியிற் படுப்பன் இங்ஙனமொருகுகையிலோ
ர்நாட்கிடந்தவாறே சிறுவினைக்காலமெய்தியிப்பண்டம் விளைவுபட்டு
த்திபப்பொருட்கோர் காராடுகொண்டது பலகியபின்னரவற்றையா
விற்குமாரியல்லர் பெருகியபின்னரவற்றைவரம்பரிகொள்வேன என்
றுசொல்லிப்பினவப்பரிக்குட்டிகளினின்று விருத்தியாகும்படிச்செ
ய்து பின்வற்றைவிற்றியான திரண்டயான்மிகவும் செல்வமுடையே
னாவேன் பின்னோர்பார்ப்பனக்கன்னிகையைநாடி மணம்புரிவேன் அ
ம்மாதர்கட்கோர்மகவுளதாம் அதுதவழ்கையில் யான் பெண்டீரை
நோக்கி அடிபெண்ணேகுழவியையெடுவென்பேன் அவள்பணியூற்ற
த்தாலெடாள் அப்போதியான வட்கிங்ஙனமோருதைகொடுப்பானென
ன இங்ஙன மெண்ணமிட்டோருதை யுதைக்க யவ்வுதையரிசிப்பா
னையிற்றாக்கி யஃதுடைபட்டிருந்த பண்டமுழுவதுங் கொட்டுண்டி

ரைந்து பயன்பெறாதாயிற்று ஆகலால் வீண்கற்பனைகற்பித்தலாகாது என அதைக்கேள்வியுற்றவப்பாண் வாய்ப்பினன் உன்மீதுகுற்றம் யாது இதுபற்றுள்ளத்தின் பெருமை நிரூபணத்துவத்தினுற் சந்தா சேயரசன்புறறனன் என சக்கனை ஆஃதெங்ஙனமாயதுஎன சுவர்ணசித்தி சொல்லுகின்றனன்.

அயோத்தியாநகரத்திற் சந்திரசேனனென்னுமரையன்றன் மகன்வலிமுகத்தோடாட வயர்வதின்மிக்க வேட்கையைக்கண்டு பற்பல முசுக்கொணர்ந்து சாலையில்வளர்ப்பிப்புழி அங்குமடையனுக்குங் குற்றேவல்செய்வோர்க்கும்பகை மூண்டமை யறிந்தவற்றுளோர் சதுர்பாடுடையமுசு இவனகலா நிகழுந்திருக்கிறமையா லிவ்விடந்துறந்துகாட்டகம்புகுவோம்என அதைக்கேட்டவரைக்குழு நீமூடத்தன்மையாலறிவிழந்து பலபலபாடி பிதற்றுகின்றாய் இங்கரையனோயடுத்தப்பலவண்ணவுண்டிகளுண்டு சுழீஇயிருந்தேன் இந்நலத்தை வலிடவீசி வனதிற்றழைதின் றுழல்வுறு நன்றன்று யாதொன்றெய்தற்பாலதோ அஃதிங்கேயெய்துகஎன இம்மொழிகேட்ட கிழக்குரங்குதன் குடும்பத்தோடு வற்றிடப்புக்கது பின்னர் ஓர்நாட்பணிசெய்வோன் மடையனைக்கண்டதாலோகியெறிந்தவையாவவனை எறிகொள்ளிகொணடெறிந்தான் அக்கினிப்பொறியைத்தூறி பற்றிக்குதிரைச்சாலை யவற்றினு மூண்டதனைத்தாள் பரிகளிற்சிலவெறிந்திறந்தன வுடற்பதித்தழிந்தன சிலகண்முதலிய வுறுப்புகள்வெந்தன இச்செயதியரசனறிந்தக்கணத்திற்குதிரை மருத்துவரைக்கூவி அவ்வசுவங்களுக்கொழிதற்கேது செய்யலாகாதுஎன அவ்வரமாத்திரர் குரங்கிநெய்யாலன்றிக்குணமுறாதுஎன அன்னனுடனே ஏவலபுரிவோரெனனயேவிட்டு இவ்வானரக்குழுவைக்கொலைசெய்திப்பண்டிதர்சொல்லியாங்குபுரிந்து குணமுறுவவித்தனன் என்றவ யிப்பழிவானக்கும்வனனறு துதிசெய்து காட்டகத்தைத் திரிதருகையில் வழியின் மிசப்பொலியுள்ள ஒருபெருஞ்சரசசைக்கண்டிக்குளத்தினீரையுறிந்துகுடித்தது இதையாண்டுவந்த ராக்கதன் கண்டத்தினினறும் அக்கடத்தினருகுற்று உன்சதுரப்பாட்டைமெச்சி நான்பிரசன்னனாயினேன் இவ்வெண்மணிவடத்தை யேற்றுக்கொள்ள எனத்தன் களத்தின்மாலையைக் கழற்றிக்கொடுத்தது அப்போது குரங்குசவைபசர்வதனத உலகத்திலுனக்கு வலியெவ்வளவிருக்கின்றது அப்பைசாசம் ஆயிரம்பெயரொருங்கே நீரிலிறக்கினும் வரைப்புரம்போகவொட்டேனென இதைக்கேட்டவலிமுகம் உனக்குநிரம்ப வுணவுகொடுவருதல் எனறவ்விரத்தினமாலையைக் கழுத்திலணிந்துகொண்டு சந்திரசேனனைவடையக பதுபுகுகின்றவனைத்தரிசித்துசுவாமிஉஞ்சோறு

நெடுநாளுண்டுவளர்ந்தேன் ஆதலாலும்மைக்கொண்டுசெலாயினேன் எ
னப்பணிந்துசொல்ல அதையன் இவரண்டையனேகியாங்குக்கிடைத்
ததுவானரமசுவாமிநாட்டிலோர் மலத்தடமிருக்கிறது இதில்வைக
ரையிற்குதிப்பவனுக் கின்னமணிகளகப்படுகின்றனவெனவும் மொ
ழிகேட்டுத்தோன்றல்யானங்கெய்துவனென்ன வான் மிகவுநன்கெனத்
தாழப்பின்மன்னன்சேனைக்குழாஞ்சூழ வானரத்தின் பின்சென்றச்
சிரசையறுத்துப்பின்னரக்கங்குற்கழிந்து விடியற்காலையில் சாகாமி
ருக்கவெழுந்தேந்தலையெழுப்பிநோக்கி நுமக்காகத்தான் விருப்புள
தேவிகோற்பற் பருவமெனக்கேட்டுக் காலாள்களோடு சொல்லாயிற்
றையில் வானரமரையனைப்பார்த் தெல்லோரும்புக்கம்மணிகள் கொ
ள்ளுதுமென அவன் அங்கனமாகவெனப்போக்கி பதாதிகள் வாவி
யிலிறங்கின மாத்திரையிலப்பாரிடமவர்களை யந்நீரிலமிழ்த்திச்சேர
க்கொன்றது பின்புசந்திரசேனன் சேவர்கள்சென்றுநெடுநேரஞ்செ
ன்றதினுகாறு மெய்தவில்லையென்று பிலவங்கத்தைக்கேட்க வானரம்
வானுறவோங்கிய வோர்மரநெடுங்கிளையிற் பாய்ந்தேறியவரைநோக்கி
நீஎன்குலமுழுமையுங்கொல்வித்தா யாதலாலக்கடனை நானிங்ஙனங்
கைக்கொண்டேன் நீஎனக்கன்னந்தந்ததைப்பற்றி யுன்னையுய்த்தே
னென விப்பேச்சைக்கேட்டண்ணலிரங்கி பத்தியாகைகொண்டுமுய
லுக்கருமம் கேட்டைத்தரா நிற்குமென் றுன்னினவனுய்ய கெம்பீர
த்துடன் அங்கனமாயவரும்போர்நீபுரிந்தமையாலஃதுலக்கித்துன்ப
ப்பயந்தந்தது நல்லதினியானேகுவேனென வப்போது சக்கரதன்கு
றைவற்றகாலையினட்போர்பயன்படுகிறார்கள் அங்கனமாக நீபெற்று
ம்வந்தெவ்வாறகனுதியெனச் சுவர்ணசித்திகள்வந்து ராக்கதனைப்பிடி
ப்புழிவானரம் பேசிடாமையாலதுபிடிபட்டது ஆதலாலிவ்வாழியை
எஞ்சினேனென்ன சக்கிரியிதெங்கனமெனப்பொன்வாய்ப்பினன் சொ
ல்லுகின்றனன்.

மதுரைப்பதிகாவலனும்பத்திரசேனக்கோமானுடைய விரதாத்
திருவதியென்னும்பெரியகட்டழகியாகியமகளைக்கவரக்கருத்துற்றே
ரிராக்கதன்போந்துறநோக்கிச் சின்னட்டிரிவுற் றவ்வுபாயநடவாமை
கண்டோர்நாட் பதிவிருக்க வக்கன்னிகையைக்கண்டதுநின்றதோழி
முகநோக்கி உயிர்ப்பாங்கியிவ்வரக்கனென்னை வெல்லமெல்லிலம் வ
ருந்துகின்றன னிதற்கேதேனுமோர் சூழ்ச்சிசெய்யவேண்டுவதென
வதுகெவிபக்கவிராக்கத னிம்மாதைக்கவரும்பொருட்டு யாம்வந்தி
ருக்கையி லிவ்வண்ணங்கொண்டே எம்மினும்வலிய மற்றொருவன் வ
ந்திருந்தாலென் செய்வோமென்றச்சமுற்றரையன் குதிரைச்சாலையி
லோர்வலிக்கருக்கொண்டிருந்தன னங்கனமிருப்புழிப்பரிமாக்கொடு
போம்பொருட்டவனுற்றகோர் கள்வனிஃதெனையவற்றின்மிகநன்று
யிருந்தமைகண்ட தனவாயிற் கலினம்பெய்து புறத்தீர்த்துவந்த த
னபீதூர்ந்துவிட்டிடலபாணடாததா லிற்றையிலஃதிங்குமங்கு மோட

த்தலைப்படுகையிலவன் சம்மட்டியாலரைந்து பார்த்துச் செல்வனே செல்லாமையாலக்கள்வனிதுகாறும் யாங்கண்டபற்பல மாக்களிலிஃதொத்ததைக்கண்டோமில்லை ஆனாலிஃதேதோ கிருத்தியமாயிருக்கின்றதென்றுள்ளங்கலங்குறுகையில் குதிரைதொழுமரத்தினை கீழ்த்தோடவப்போதுமேலிருந்தகள்ளன் விரைந்தாலினவிழுதைப்பற்றித்தொத்தியபத்தருமீதேறவிராக்கதன் விளாசனுக்கஞ்சியோட்டினனைக்கண்டனன் அதைக்கண்டவம்மரமீதிருந்தவானரமதைக்கேட்டசோரன்வெருண்டு சீசத்தின்வாலைதப்பற்றிவருத்த அரக்கன்குரங்குவஞ்சகமுள்ளதென்றெண்ணிமீண்டும்விரைந்தோடினன் ஆதலாலக்கவிக்கெய்திய வின்னல்போலெனக்குமுளதாமென்றெண்ணி நம்மைக்குறித்தஞ்சினவனனச்சக்கரிதெய்வமெதிற்பின் யாவருமிங்கனமிடுக்கண்ணனுபவிப்பார் கேண்மோ விலங்கேசுகன்றிரிகூடாசலமொத்தமலையுங்கடலொத்தவாழியுந்தானரக்கனும் பேராற்றலுடையானும் சுக்கிரன் குருவுமாக இவ்வண்ணமொன்றுக்கொன்று குறைபாடின்றியிருந்து மவனையொருகுரங்கனுமானத்தாற் றலைதாழ்ப்பித்தது ஆதலால்விதிவலிமுனமாவன் சூழ்ச்சியிலியாயினும் யாதுபயன்படும் அவ்வூழொன்றிப்பன நீயவுநல்வாய்விடும் இவ்வண்ணமே சிதடன்கூனன முக்கட்பேணிவர்கட்கு முன்னநேரிட்டதொன்று கேட்டிலையோவெனப் பொன்வாய்ப்பினன் அஃதென்னமோ வியம்புதியென சக்கரதரன் சொல்லலாயினன்.

மதுபுரக்காவலனாகிய மதுசூதனனென்பவற்கு முக்கட் பெண்டோற்றினமையாற் சோதிடம்வல்லோரைக்கூவி யதற்குச்செயற்பாலஃதென்னெனக் கேட்பழி சார்வபௌம் கேட்குதி எவனாயினும் சொலலவேண்டு மங்கனமாராய்ந்து சொல்லின் சண்டைகருமனைப்போலாகுமென அவரையான் ஆவன யாதுரைத்தனனெனச் சோதிடம்வல்லோன் செல்லலுற்றனன.

தண்டகாரண்யத்திற் சஞ்சரிப்போனாகிய சண்டைகருமனென்னு மோரிராக்கதத்தலைவனவனேரிட்டவோரவுணன்றோண்மேலேறி நடத்திக்கொண்டுபோவழி யவ்வேதிய னவ்வரக்கண்டிகண்மிகலல்லியவாயிருப்பல்லியவாயினவென வரக்கனைநான் நீராடியீரம்புலரமெடிமவுநிலன்மீதுசொல்லேன் எனக்கேட்டுச்சிறிதாறு முன்னேதாங்கிப்போல் பிறகிராக்கதனோர்குளமினை மூழ்கப் புக்குழிப்பார்ப்பானைப்பார்த்து யானிததருமஞ்செய்து வறுகாறு நீ அடிபெயரற்க இங்குதானே நிற்றிஎனச்சொல்லிபின்னர் ஸ்நானஞ் செய்தனன் அந்தணனினைப்பார்த்தின்ன மூழ்கிப்புறப்போந்தானுறு லிவன்வாயிற்றழலின்

மூழ்காதிரேம் ஆகலானேயுய்யவிதுவே நல்லவையும் நீட்டிக்கா
ற்புலரு முனிவனடைவானல்லனோவென்றும் தனக்குத் தெரிந்துகொ
ண்டு விரைந்தோடினான் அதிசவனுடன் யான் வாய்பதறிக் கைக்
கொட்டினதுவாய்க்கெட்டாம விழப்பற்றேன் கடிதிற்பிச்சென்று. க
வர்வேவெனினுங்கொண்ட நோன்பு குறையுறுகின்றதுஎன்றுமறுக்க
முற்றுங்கை கெட்டுவிர்த்து வளாநின்றனன் ஆதலால்யாதுமுய்த்து
ணராதியற்றலாகாது எனச்சொல்லி பின்னர்ப்பன் றால்கலையு நன்
காய்ந்து கடைப்பிடித்து இம்முக்கனரிவையர்ப் பார்க்கவொண்ணு
து எவ்வேயோவெனின் விரூபமாகவுளதாயினதைக் காணலாகாதெ
ன்று நூற்றுணிபாம்மற்றும் மிஃதான்றே யொழுக்கமுமாம் என் வ
ந்தலம்மொழியுட்கொண் டக்கன்னியைவேற்றூழி வைத்தளித்தபின்
னரவள்பூத்தமையா னிவன்மனத்திற்கிலைசபவனுக்குப் பெருமபொ
ருட்கு வெத்தருவலெனத் தேய்ந்தோறுமணவோலை போக்கிமையை
க்கேட்ட விரானுன்னுமண்டையாகிய வோர்குருடனுங்கூனனும்வி
வாகம்விரும்பான்மன்னன்பாற்புக்கனர் அவருட்குருடனையநோ
க்கிறுங் கன்னியைக் கடிபுரிவதுதக்கதென்றுன்னி அவனுக்குமகட்
கொடைநேர்ந்து அங்ஙனமேகடிமுடித்தளவிற்பொருடந்து நீட்கண
மும்நீட்டியாமற் பரதேயம்போதிஎன்றனன் அவ்விடைகொண்டு மூ
வரும்பரதேயம் புத்திருப்பழி அவளக்கூனற்றுலயமாயவனைநோக்கி
இக்குருட்டுச்சவத்தைத நஞ்சிட்டுச்சொல்லினு விடையூறின்றி இவ
பநுகர்வோம் எனக்கேட்டு அவன்செத்தாம்பொன்றைத் தந்துவல
அவளங்கையேற்றுக்கண்டித்தடுப்பின்மேல் வேவவைத்துப் பெறிவி
லையை இக்கலைசவிற்றுமத்திற்புகுகின்றேன்என அக்கன்னறைய
வ்வாறே யிளங்குழலாவெரித்துக்கொண் டிருப்புழியக்குருட்டின சரு
ட்டின சருப்பவுயிகண்ணிற்றேக்கி யவ்விடத்திறைற் கண்ணிரோகந்
தீர்ந்து முன்போற்கண்டெரிந்தமையாலிவருருவமிவள் குருட்டுதவி
யாநகைத்து விண்ணாட்டையர்வனதக்கண்டு காலனெறிகாணும் பண்
டையாட்சிபே லவந்து கூனனைப்பற்றிமிர்த்துச்சிற்றந்தாற்றாங்கி அ
வன்முகத்திலேற்றினன விலவன்மூன்றும்விழுமறைத்துக் கூனங்கூனு
நிமிர்ந்தது ஆகலாற்றெய்வவொற்றுமையிருந்தால் யாவுநல்லவாயெ
ன்சக்கரதாநலலது நீ கிருகத்துக்கேகுழி வழித்துணையோடேகினர்
வழித்தனித்துச்சேறலி லெல்லோருமுறங்குகையில் விழித்திருக்கை
யுந்தலையாய்ப்பொருபாலன் எந்நூலரைகின்ற இங்ஙனம்நூலெனறிகி
டவாது வொழுகெனடபுயக்கத்தினின்று மோர் வேதியனுய்ந்தவண்
ண மூயவாலேஎன சுவர்ணசித்தி அப்பானவனுய லெவ்வாறு பிசழ்
ந்ததுஎன சக்கிரிசொல்வானானன்.

நாசிதேயத்தனாகிய தக்கனென்பவனன்னையை நோக்கியானாகிய
ன்கருமத்தா லோரூர்க்குப்போகுதல்வேண்டித்தருகுதிளை அவ்வின்று
ள்ளூழக்காய் ஒருவனுமேசற்றனைக்கேட்டு அவன் தாயே நெறியூறின்
றிபிருக்கின்றதேதெனை அவன் மீண்டும் அப்பனே எஃதுள தாயினும் நீ
நெறிதணையின்றிச்சேரலாகாது என்றகூபத்த லோர்கண்டைப்பற்
றியோர்கலயத்திற்பெய்துகொடுத்து இதையேனுந்துணைக்கொடுபோ
கவனை அவ்வாறே வாய்மொழிமேற்கொண்டேகுழி நெறியில்வெனி
லால்வெசுற்றூர்தருமரீதியிற் னண்வளரா நிற்குமிடத்து யாண்டிருந்
தோவயற் றீண்டவந்தவோரா வம்மட்கலயத்திற் பெய்திருப்பதென்
னென்றதனுட்டலை நீட்டுகையிலேஞெண்டிஃதோர்கராவென் றுண
ர்வுற்றுக்கொடுக்கா லிடுக்கிக்கொன்றது பின்னரந்தணன் விருத்திப் ப
ணிலையைப்பார்த் திஃதெங்ஙனமியந்ததெனைச்சூழ்வுழி அதன்சென்னி
யையவ்வலவன் கத்திரிக்கக்கண்டித்துணைச்செயலு மிதுவேபரிந்தது
மாகாந்த வழித்துணையாற்பிழைத்தேன் தாயிற்சிறந்தொருகோயிலு
மில்லை என்றதுபொய்யாதென்றந் நண்பருக்கைக் கொடில்லம்புக் க
ன்னைக்கட்டாயுசுநிலந்தோயவீழ்ந்து பணிவுதேன்றக் கழுகழுத்து
வாழ்த்தி நிகழ்ந்தசெய்திகளைவிளம்பி இன்புற்றிருந்தனன்என எனை
பொன்வாய்ப்பினை இருதக்கதேயாம் மந்திரம் தீர்த்தம்பெரியோர்
சோதிடம் மருத்துவம் குருவின்னோர்பாலெவனெவ்வணம் பாவனை
புரிவானோ வவனவ் வண்ணம் பேறுபெறுவன் என்றிங்ஙனம்நேமியா
னைத்தேற்றித் தன்மனைக்கேகினன்.

அசம்பிரேட்சிய காரியத்துவம்.

அல்லது ஆராயாதுசெயலென்னு மைத்ராந்தந்திர

முற்றிற்று

இங்ஙனம்-சோமசன்மனென்போனரசன்

மக்கட்குரைத்த பஞ்சதந்திரம்.

முற்றிற்று